இலவசம்
# அரங்கம்
செய்திகள்
கிழக்கு மண்ணில் இருந்து ஒரு தொடர்பூடகம்




வார இதழ்– மட்டுநகரிலிருந்து... www.arangamnews.com வெள்ளி, பங்குனி 16, 2018. இதழ் – 04 இலவசம்

## "அரசியலமைப்பு மாற்றம் உட்பட முரண்பாட்டை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் உடனடியாக தேவை" சிறுபான்மை இன முக்கியஸ்தர்கள் வலியுறுத்தல்



இலங்கையில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அரசியலமைப்பு மாற்ற நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்று சிறுபான்மை தரப்பு அரசியல்வாதிகள் மற்றும் புத்திஜீவிகள் கோருகிறார்கள்.

மனோகணேசன்:
------------------------

தற்போதைய தேசிய அரசாங்கம் உருவாக்கப்பட்டதே இந்த இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண்பதற்கே என்று கூறுகின்ற அமைச்சர் மனோ கணேசன், அதற்கான தீர்வு என்பது அரசியலமைப்பு மாற்றத்தின் மூலம் தான் நடக்கும் என்று "அரங்கம்" பத்திரிகைக்கு கூறினார்.

ஆனால், அண்மைய உள்ளூராட்சி தேர்தல், முஸ்லிம்களுக்கு எதிரான வன்செயல்கள் ஆகியவற்றை தொடர்ந்து அரசியலமைப்பு மாற்ற நடவடிக்கைகள் காணாமல் போயுள்ளன என்று கூறும் அவர், அவற்றை உடனடியாக மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இரண்டு முக்கிய கட்சிகளின் தலைவர்கள் ( பிரதமர் மற்றும் ஜனாதிபதி) இணைந்து இந்த அரசாங்கத்தை ஏற்படுத்தியதே அதற்காகத்தான் என்று கூறிய அவர், அதனை அவர்கள் செய்து முடிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

ஹிஸ்புல்லா:
------------------------

முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்கள் நடந்து முடிந்திருக்கும் ஒரு சூழ்நிலையில், பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளை கையாள்வதற்கு அரசு முழுமையான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கூறிய அமைச்சர் எம். எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், உண்மையில் நாட்டின் ஜனாதிபதி மற்றும் பிரதமர் மீது மக்கள் நம்பிக்கை இழந்திருக்கிறார்கள் என்று கூறினார்.

இனமுரண்பாடுகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளுக்கு இந்த தருணத்தில் முன்னுரிமை கொடுக்கும் அதேவேளை, ஏற்கனவே பிரச்சினையை எதிர்கொண்டு, தீர்வின்றி இருக்கும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க, அரசியல் ரீதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும், அரசியலமைப்பு மாற்றம் போன்றவை, பெரும்பான்மையினருக்கு மாத்திரமல்லாமல், சிறுபான்மை மக்களுக்கும் நன்மை தரும் வகையில் அமைய வேண்டும் என்றும் கூறினார்.

வித்யாதரன்:
-------------------------

வன்செயல்கள் நடப்பது இலங்கையில் ஒரு தொடர்கதையாகி விட்டதாக கூறும் காலைக்கதிர் பத்திரிகையின் ஆசிரியர், மூத்த செய்தியாளர் என். வித்தியாதரன், அதனைத் தொடர்ந்து சமாதானப் பேச்சுக்கள் நடப்பதும் வழக்கமாகிவிட்டதாக கூறுகிறார்.

இலங்கையில் அனைத்து தமிழர் தரப்புக்கும் அரசியலமைப்பு மாற்றத்தின் மூலம் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண்பதற்காகவே மக்கள் ஆணையைக்

தொடர்ச்சி... (பக்கம் - 14)

## முகநூல் மீதான தடை நீக்கம்

இலங்கையில் கண்டி மாவட்டத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக நடந்த வன்செயல்களை அடுத்து கொண்டு வரப்பட்ட பேஸ்புக் மீதான தடையை இலங்கை அரசாங்கம் நீக்கியுள்ளது.

பேஸ்புக் நிறுவனத்தினருடன் ஜனாதிபதியின் செயலாளர் நடத்திய பேச்சுவார்த்தையை

தொடர்ச்சி... (பக்கம் - 14)






# சிங்களத்தரப்பினால் மூட்டப்படும் தீயும் சிறுபான்மைச் சமூகத்தினர் சிந்தும் குருதியும்

-- கருணாகரன் --

இலங்கைச் சமூகங்கள் இன ரீதியாகப் பிளவுண்டு செல்வதற்கான அடிப்படைகளே தொடர்ந்தும் காணப்படுகின்றன. கடந்த வாரங்களில் அம்பாறை, கண்டி உள்ளிட்ட இடங்களில் நடந்த முஸ்லிம்கள் மீதான வன்முறை தொடக்கம் அதற்கு முன் (2009 க்குப் பின்) நடந்த, நடந்து கொண்டிருக்கும் அரசியல் மற்றும் இன ரீதியான நடவடிக்கைகள், வன்முறைகள் போன்றவற்றை அவதானிப்போருக்கு இந்த நிலைமைகள் செல்கின்ற பாதை அபாயகரமானதென்று தெரியும்.

யுத்தத்திற்கு முன்பு, யுத்தத்திற்குப் பின்பு என்ற தன்மையை – யுத்தத்திலிருந்து கற்றுக் கொண்ட பாடங்களை – துயரமான அனுபவப் படிப்பினைகளை - இலங்கையின் அரசியல் போக்கிலும் நடைமுறையிலும் உணர முடியவில்லை.

சமூக மட்டத்தில் மட்டுமல்ல, அரசாங்கத்தின் இதயத்திலும் மூளையிலும் கூட எத்தகைய மாற்றங்களும் இல்லை. அதனால்தான் தொடர்ந்தும் இனமுரண்பாட்டுப் பிரச்சினைகள் கூர்மைப்பட்டு வருகின்றன.

இனரீதியான பாரபட்சம், அச்சுறுத்தல், நேரடியான வன்முறை போன்றவை தொடர்வது மட்டுமல்ல, இவற்றுக்கு எதிராக பன்மைத்துவத்துடன் அமைய வேண்டிய அரசியல் சாசனம் கூட பௌத்த சிங்கள மேலாண்மைக்கு முன்னுரிமை அளிக்கும் வகையிலேயே விடாப்பிடியாக முயற்சிக்கப்படுகிறது.

ஆனால், சர்வதேச அனுபவங்கள் வேறானது. அவை யுத்தத்திற்கு முன்காலம், யுத்த காலம், யுத்தத்திற்குப் பிந்திய காலம் என்ற வகையில் துல்லியமாக வேறுபட்டிருக்கின்றன.

முரண்பாடு அல்லது பிரச்சினை,
யுத்தம்,
யுத்த முடிவு,
புனர்வாழ்வும் புனரமைப்பும் அல்லது மீள் நிர்மாணம்.



நிலைமாறுகாலகட்டச் செயற்பாடுகள் - பொறுப்புக் கூறுதல் (தண்டனை ஏற்றல் மற்றும் நிவாரணமளித்தல். நீதி வழங்குதல்), மீள நிகழாமை.

தீர்வு என்ற வகையில் இந்தத் தொடரியக்கம் நிகழுவதாக உள்ளது.

இலங்கையில் இது எதிர்மறையாகவே புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. முரண்பாடு – யுத்தம் – யுத்த முடிவு என்பதற்கு அப்பால் அது நகரவேயில்லை. யுத்த முடிவை இலங்கை அரசும் சிங்களப் பெரும்பான்மையினரும் இறுதித் தீர்வாகவே கொண்டுள்ளனர். இதனால்தான் யுத்த முடிவுக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய புனர்வாழ்வு, புனரமைப்பு என்பதைச் சாட்டுக்கு மேற்கொண்டனரே தவிர, மெய்யான அர்த்தத்தில் அதைச் செய்யவில்லை.

**'என்னதான் இலங்கை அரசாங்கம் வெளியே வெள்ளையாகக் காண்பித்தாலும் உள்ளே இருப்பது இனவாத நஞ்சுக் கறுப்பு'**

இதற்கு நல்ல உதாரணம், யுத்தம் முடிந்த பிறகு வந்த எட்டு வரவு செலவுத்திட்டத்திலும் புனர்வாழ்வு, புனரமைப்பு போன்றவற்றுக்கு என எத்தகைய சிறப்பு நிதி ஒதுக்கீடுகளும் செய்யப்படவில்லை. விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களுக்கு

**பொறுப்புக்கூறலில் காட்டப்பட்ட மௌனமே அடுத்தடுத்த வன் செயல்களுக்கு காரணம்**

வழங்கப்பட்டதாகக் கூறப்படும் புனர்வாழ்வு கூட அந்தப் போராளிகளின் சமூக வாழ்வை இலக்காகக் கொண்டதல்ல. மாறாக அரசின் பாதுகாப்பு மற்றும் தேசிய பந்தோபஸ்து ஆகியவற்றின் நலனுக்காகவே மேற்கொள்ளப்பட்டன. அதனால்தான் முன்னாள் போராளிகள் என்ற அடையாளத்தின் கீழ் அவர்கள் இன்னும் துயரமான அவலமான - வாழ்க்கையை வாழ வேண்டியுள்ளது. கூடவே யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு உரிய இழப்பீடுகள் இதுவரை வழங்கப்படவில்லை. அவர்களை மீள் நிலைப்படுத்தும் எத்தகைய முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

அடுத்தது மீள் நிர்மாணம். யுத்தம் நடைபெற்ற வடக்குக் கிழக்குப்பகுதிகளில் யுத்தப் பாதிப்பை நிவர்த்திக்கும் வகையில் மீள் நிர்மாணம் நடக்கவில்லை. மேற்கொள்ளப்பட்ட பெருவீதிகளின் புனரமைப்பு, மின்விநியோகம், பாடசாலைகளின் வளவிருத்தி, நீர்நிலைகள் மற்றும் குளங்களின் அபிவிருத்தி, மருத்துவமனைகளின் மேம்பாடு போன்றவை தேசிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளாகும். வீடமைப்பு மட்டும் பிரத்தியேகமானது. அதுகூட அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டதல்ல. சுவிற்சர்லாந்து, நோர்வே, இந்தியா உள்ளிட்ட நாடுகளின் உதவியின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. வடக்குக் கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட பாடசாலைகளின் வளவிருத்தியில் கொரியா, அவுஸ்ரேலியா, சுவிற்சர்லாந்து, இந்தியா போன்றவற்றின் பங்களிப்புகளும் உண்டு. அவ்வாறே மருத்துவமனைகளின் விருத்திக்கு யப்பான், நெதர்லாண்ட், அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் உதவின. இவற்றைத் தவிர்த்து போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் அபிவிருத்திக்கு எத்தகைய சிறப்புத்திட்டங்களும் உருவாக்கப்பட்டதில்லை.

### பொறுப்புக்கூறலில் அக்கறையின்மை

இதெல்லாவற்றையும் விட முக்கியமானது நிலைமாறுகாலகட்டச் செயற்பாடுகளை அரசாங்கம் பொறுப்புடன் செய்திருக்க வேண்டியதாகும். ஆனால், அதிலிருந்து இலங்கை அரசு முற்றாகவே விலகிவிட்டது. இதில் எந்த ஆட்சியும் விலக்கல்ல. முக்கியமாகப் பொறுப்புக் கூறுதலில் இருந்து அரசு தப்ப முயற்சித்திருக்கிறது. நாட்டில் தொடரும் நெருக்கடிகளுக்கும் நாடு அபாயக் கண்ணிகளின் மீது தள்ளப்பட்டிருப்பதற்கும் இதுவே முக்கியமான காரணமாகும். பொறுப்புக் கூறுதலின் அடிப்படையில் நடந்தவற்றைச் சீராக ஆராய்தல், நடந்தவற்றுக்கான நீதி விசாரணைகளை நம்பகத்தன்மையோடு மேற்கொள்ளுதல், குற்றவாளிகளுக்குத் தண்டனைகளை வழங்குதல், அரசு சார்பான தவறுகளுக்கான பொறுப்பேற்றல், பாதிப்புகளுக்கு நிவாரணமளித்தல், நீதி வழங்குதல் ஆகியவற்றுடன் குற்றங்களும் தவறுகளும் மீள நிகழாமல் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவும் வேண்டும். யுத்தம் முடிந்து எட்டு ஆண்டுகள் கடந்தும் இவை ஆரம்ப நிலையில் கூட மேற்கொள்ளப்படவில்லை. பதிலாக பாதிக்கப்பட்ட மக்கள் குறிப்பாக சிறுபான்மைச் சமூகங்கள் தொடர் பாதிப்பிலும் தொடர் அச்சத்திலுமே தள்ளப்பட்டுள்ளன.

### யுத்த வெற்றியே தீர்வா?

யுத்த வெற்றியைப் பெற்ற அரசும்



சிங்களப் பெரும்பான்மையும் அதையே இனப்பிரச்சினைக்கான தீர்வாகவும் கருதியுள்ளன. இதனால்தான் அரசியல் சாசன உருவாக்கம், அதிகாரப் பகிர்வு மற்றும் அரச நடவடிக்கைகள், வளப்பகிர்வு என அனைத்திலும் சிங்களப் பௌத்த மேலாதிக்கத்துக்கு முன்னுரிமை அளித்துச் செயற்பட முனைந்திருப்பதாகும். யுத்த முடிவுக்குப் பிறகு உரிய அடிப்படைகளில் பிரச்சினைகள் அணுகப்பட்டிருந்தால், வேலைகள் சரியாகச் செய்யப்பட்டிருந்தால் பல்லினச் சமூகங்கள் வாழும் நாடு என்பதற்கு அமைய பன்மைத்துவத்துக்கு இடமளிக்கும் வகையில் சிந்திக்கப்பட்டிருக்கும். அவ்வாறே அனைத்துச் செயற்பாடுகளும் அமைந்திருக்கும். அது மெய்யான நல்லிணக்கத்தையும் இன ஐக்கியத்தையும் தேசிய ஒருமைப்பாட்டையும் உருவாக்கியிருக்கும். சும்மா வெறுமனே உலகத்துக்குக் கணக்குக் காட்டும் ஒப்பாசார நடவடிக்கைகளாக இருந்திருக்காது. என்னதான் இலங்கை அரசாங்கம் வெளியே வெள்ளையாகக் காண்பித்தாலும் உள்ளே இருப்பது இனவாத நஞ்சுக் கறுப்பு என்பதை சிங்களத்தரப்பினால் மூட்டப்படும் தீயும் சிறுபான்மைச் சமூகத்தினர் சிந்தும் குருதியும் வெளிப்படுத்தியே தீரும். இதன் அர்த்தம், மீள முடியாதத் துயரத்திலும் தொடரும் தோல்வியிலுமே நாடு சிக்கியுள்ளது என்பதாகும். இதை மறைத்து அவரவர் ஆயிரம் வியாக்கியானங்கள் சொல்லலாம். அது கண்ணீரை மறைக்காது. நாட்டின் தலைவிதியை மாற்றாது. முன்னேற்றத்தை ஏற்படுத்தாது. அபாயங்களைக் குறைக்காது.



**இது வாலால் இலங்கையில் இட்ட தீ அல்ல. மக்கள் நெஞ்சில் இட்ட தீ**



# கிழக்கு மக்களுக்காக நம் மண்ணிலிருந்து

உறவுகள் அனைவருக்கும் வணக்கம்,
அரங்கத்தின் நான்காவது இதழ் இது. உங்களோடு நாங்கள் உறவாட வந்து கிட்டத்தட்ட ஒரு மாதம் கடந்துவிட்டது.
கிழக்கிலங்கையின் தனித்துவமான பிரச்சினைகளை, அம்சங்களை முழுமையாக பேச உரிய ஊடகம் இல்லை என்ற காரணத்தால் இந்த "அரங்கம்" இங்கு அனைவருக்குமான ஒரு பொதுத்தளமாக உருவாக்கப்பட்டது.

## அனைவருக்குமான இலவசத் தளம்:

அனைத்து தரப்பு மக்களுக்குமான ஒரு நியாயமான, வெளிப்படைத்தன்மை மிக்க தளமாக அரங்கத்தை நாம் பேணி வருகின்றோம்.

எம்மத்தியில் ஒரு பத்திரிகையை வாங்கிப் படிப்பதில் நம்மக்களுக்கு இருக்கக்கூடிய சிரமங்கள், இயலாமை ஆகியவற்றை கருத்தில் கொண்டு இதனை இலவசமாகவும் விநியோகித்து வருகின்றோம்.

எமது கிழக்கு மண் குறித்து பிறர் பேசத் தயங்கும் விடயங்களை ஆழமாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் நாம் பேசி வருகின்றோம். இனங்களிடையேயான நல்லிணக்கத்துக்கு கைகொடுக்கின்றோம். வன்செயல் அற்ற ஒரு வாழ்வை நோக்கி எமது கிழக்கு மக்கள் பயணிக்க வேண்டும் என்பது எமது இலக்கு. இதற்காக ஒரு விழிப்புணர்வு ஊடகமாக நாம் செயற்படுகின்றோம்.

எமது பாரம்பரியம், சுற்றாடல், சமூகம், பொருளாதாரம் ஆகியவை குறித்தும் அதிக கவனம் செலுத்துகிறோம். இதுவே எமது முக்கிய குறிக்கோள்.

## போட்டிகள் அறிவிப்பு:

எமது குழந்தைகளின் திறனை வளர்க்கும் நோக்கில் சில போட்டிகளைக் கூட இந்த வாரத்தில் அறிவித்துள்ளோம்.

இந்தப் பாதையில் நாம் தொடர்ந்து முன்னேறிச் செல்ல எமக்கு எமது மக்களின் உதவியும் தேவைப்படுகின்றது. இலவசமாக ஒரு பத்திரிகையை வெளியிடுவதில் உள்ள சிரமத்தை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

## விளம்பரம்

இங்குள்ள வணிக மற்றும் சேவை நிறுவனங்கள் எமக்கு விளம்பரங்களை தந்து உதவ முடியும். எமது விளம்பரக் கட்டணங்கள் ஒப்பீட்டளவில் மலிவானவை. அதேவேளை எமது பத்திரிகை கிழக்கில் மிகவும் அதிகமான மக்களை சென்றடைகிறது என்பதை நாம் உறுதி செய்துள்ளோம்.

ஆகவே நாம் பிரசுரிக்கும் விளம்பரங்கள் அதனை தரும் நிறுவனங்களுக்கு பெரும் பலனைத் தரும்.

கோயில்கள் மற்றும் சமூக நிறுவனங்களும் கூட எமது பக்கங்களுக்கு அனுசரணை வழங்குவதன் மூலம் விழிப்புணர்வு ஆக்கங்களை மக்களுக்கு கொண்டு செல்ல உதவ முடியும். உங்கள் நல்ல சிந்தனை நோக்கிய திட்டங்களுக்கு இந்த பக்க அனுசரணைகள் உதவ முடியும்.

கிழக்கு மாகாணம் முழுவதும் எமது ஊடகம் பரவலாக மூலை முடுக்கெல்லாம் இலவசமாகச் சென்று சேர்வதால், உங்கள் விழிப்புணர்வு பிரச்சாரங்களை இலகுவாக மக்களிடம் கொண்டு சேர்க்க எமது ஊடகம் உதவும்.

இதன் மூலம் ஒரு ஊடகம் தொடர்ச்சியாக நடக்க உதவுவதுடன், உங்கள் நிறுவனங்களின் கொள்கைகள் உரிய மக்களை இலகுவாகவும் சென்றடைய முடியும்.

எப்படியான நிலைமைகளிலும் எமது மக்களுக்கான ஊடகத்தொண்டை நடுநிலையுடன் நின்று செய்து, உண்மையான தகவல்களை கொண்டு அவஉகளிடம் சேர்க்கும் பணியை சிறப்பாகச் செய்ய உறுதி பூண்டுள்ளோம்.

அன்புடன்
பூ. சீவகன்

அரங்கம்

"அரங்கம் செய்திகள்"
பத்திரிகை வாராவாரம்
வெள்ளைக்கிழமைகளில்

அரங்கம் நியூஸ் நிறுவனத்தில் இருந்து வெளியிடப்படுகின்றது.

பக்க வடிவமைப்பு:
ரெரி றோஜர்ஸ் லியோண்

ஒப்புநோக்காளர்:
மணிவண்ணன்

முகவரி:
227, பார் வீதி, மட்டக்களப்பு.

தொலைபேசி இலக்கம்:
065 222 9112

மின்னஞ்சல்:
arangamnews@gmail.com

இணைய முகவரி:
www.arangamnews.com
www.arangamfm.com


## அரங்கத்தில் விளம்பரம் செய்யுங்கள்

**உங்கள் வியாபார நிறுவனங்கள், மற்றும் வணிக சேவைகள் குறித்து அரங்கத்தில் விளம்பரம் செய்யலாம்.**

**எமது பத்திரிகை இலவசமாக அனைத்து தரப்பு மக்களையும் சென்று சேர்வதால், உங்கள் விளம்பரங்களும் அனைவரையும் சென்று சேரும்.**

**அதன் மூலம் உங்கள் வியாபாரத்தை விருத்தி செய்யுங்கள். ஒப்பீட்டளவில் இவை ஏனைய ஊடகங்களை விட மலிவான விளம்பரங்களே. அதேவேளை அதிகமான மக்களை இவை சென்று சேர்கின்றன.**

### சிறு விளம்பரங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள் போன்ற உங்கள் வீட்டு நிகழ்வுகளையும் நீங்கள் மிக மலிவான விலையில் அரங்கத்தில் விளம்பரம் செய்து உலகறியச் செய்யலாம்.**
**மரண அறிவித்தலுக்கு சிறப்புக்கட்டணம் ( மிக குறைந்த) அறவிடப்படும்.**
**பத்திரிகை, வானொலி மற்றும் இணையம் மூலமும் விளம்பரம் செய்யலாம்.**

**தொடர்புகளுக்கு:**
**அரங்கம் விளம்பரப் பிரிவு,**
**227, பார் வீதி மட்டக்களப்பு,**
**தொலைபேசி : 070 300 9001**
**மின்னஞ்சல் :** arangamnews@gmail.com

# பாடசாலை மாணவர்களுக்கான அரங்கத்தின் போட்டிகள்

## கட்டுரைப் போட்டி

முதல் பரிசு : ஐயாயிரம் ரூபாய்
இரண்டாம் பரிசு : மூவாயிரம் ரூபாய்
மூன்றாம் பரிசு : இரண்டாயிரம் ரூபாய்

பாடசாலை மாணவர்கள் தமது அதிபரின் அனுமதியுடன் கலந்து கொள்ளலாம். போட்டிகள் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தனித்தனியாக நடைபெறும். இரு பிரிவுக்கும் தனித்தனியே பரிசுகள் வழங்கப்படும்.

### போட்டி:

பின்வரும் விடயங்களில் ஏதாவது ஒன்று குறித்து 500 சொற்களுக்கு மேற்படாமல் கட்டுரை எழுத வேண்டும்.

1) ஏதாவது ஒரு நாடு (இலங்கை அல்லது வேறு ஒரு நாடு) எதிர்கொள்ளும் ஒரு சுகாதார பிரச்சினை அல்லது சுகாதாரச் சவாலின் தாக்கம் குறித்து விபரிக்கவும்.

2) ஒரு நாடு அல்லது ஒரு அமைப்பு பொதுமக்கள் சுகாதாரத்துறை எதிர்கொண்ட சவாலில் தலையிட்ட சம்பவம் குறித்து விபரிக்கவும். அந்த தலையீட்டின் வெற்றி அல்லது தோல்விக்கான காரணத்தை விபரிக்கவும்

### விதி

-- ஏனைய ஆதாரங்களில் இருந்து நீங்கள் சேகரித்த விடயங்களுக்கான மூலங்களை குறிப்பிடவும்.
-- கட்டுரையை நீங்களே எழுத வேண்டும்.
-- தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரையாளர் நேர்முகச் சோதனைச் செவ்விக்கு அழைக்கப்படுவார்.
-- போட்டியில் கலந்துகொள்வோர் பாடசாலை மாணவராக இருக்க வேண்டும். அதிபரின் கடிதம் இணைக்கப்பட வேண்டும்.
--பிரதி பண்ணப்பட்ட கட்டுரைகள் நிராகரிக்கப்படும்.

### ஆலோசனை

பொதுமக்கள் சுகாதாரத்தை பாதிக்கும் ஒரு நோய் அல்லது சுற்றாடல் பிரச்சினையை தேர்ந்தெடுக்கவும்.
--உங்களுக்கு ஆர்வம் உள்ள விடயத்தை தேர்வு செய்யவும்
--இண்டர்நெட் மற்றும் புத்தகங்களை ஆய்வுக்கு பயன்படுத்தவும்
--ஒரு விடயத்தில் மாத்திரம் நிற்கவும்.
--தேர்ந்தெடுத்த விடயத்தை ஆக்கத்திறனுடன் முயற்சிக்கவும்
--இந்தக் கட்டுரை ஒரு விவாதமாக இருக்க வேண்டும். இருக்கக்கூடிய பல தரப்பட்ட பார்வைகளையும், உங்கள் கருத்தையும் அதில் குறிப்பிடவும்.

### உதாரணமான விடயங்கள் சில

தென்னாபிரிக்காவில் மலேரியா ஒழிப்பு நடவடிக்கைகள்.
உலகெங்கும் அல்ககோலால் வரும் ஈரல் நோய்கள்.
தெற்காசிய சமூகத்தில் நீரிழிவு நோய்.

விண்ணப்பங்களை அனுப்பும் போது, பெயர், பிறந்த திகதி, பாடசாலையின் பெயர், விலாசம் மற்றும் தொடர்பிலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிடவும். தலைமை ஆசிரியரின் அங்கீகாரமும் தேவை.

## ஓவியப் போட்டி

முதல் பரிசு : ஐயாயிரம் ரூபாய்
இரண்டாம் பரிசு : மூவாயிரம் ரூபாய்
மூன்றாம் பரிசு : இரண்டாயிரம் ரூபாய்

பாடசாலை மாணவர்களுக்கான இந்தப் போட்டியில் கலந்து கொள்வோர், உலக சுகாதாரம் எதிர்கொள்ளும் சவால்களைச் சித்தரிக்கும் வகையிலான ஓவியம் ஒன்றை வரைய வேண்டும்.

பொதுமக்களின் சுகாதாரத்தில் சுற்றாடல் ஏற்படுத்தும் தாக்கத்தை இந்த ஓவியங்கள் விபரித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும்.

தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ அந்த ஓவியத்தை விபரிக்கும் விளக்கம் ஒன்றை 100 சொற்களுக்கு மேற்படாமல் எழுத வேண்டும்.

ஏ3 அல்லது ஏ4 காகிதத்தில் அது வரையப்பட்டிருக்க வேண்டும். பென்சில், மை கொண்டு அது வரையப்பட்டிருக்கலாம்.

மூன்று பிரிவாக போட்டி நடைபெறும்.
6-10 வயது
11-14 வயது
15- 18 வயது

மூன்று பிரிவுகளுக்கும் தனித்தனியாக
மூன்று பரிசுகள் 5000 ரூபாய், 3000 ரூபாய் மற்றும் 2000 ரூபாய் வழங்கப்படும்.
போட்டியில் கலந்துகொள்வோரின் வயதை ஆசிரியர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

விண்ணப்பங்களை அனுப்பும் போது, பெயர், பிறந்த திகதி, பாடசாலையின் பெயர், விலாசம் மற்றும் தொடர்பிலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிடவும். தலைமை ஆசிரியரின் அங்கீகாரமும் தேவை.

அரங்கம்
செய்திகள்

தொடர்புகளுக்கு :
அரங்கம் நிறுவனம்,
227, பார் வீதி, மட்டக்களப்பு

## அறுவடை: அன்றும் இன்றும் !

-- வி.ரி.சகாதேவராஜா--





நாட்டில் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் வேளாண்மை அறுவடை என்றால் இன்று அறுவடை இயந்திரம் மூலம் அறுவடை செய்வதையே தற்கால சந்ததிகள் அறிவார்கள்.

ஆனால் அன்று அறுவடை, சூடடித்தல் என்பது கலாசார சடங்கு ரீதியான நிகழ்வு. களவட்டியில் (சூடடிக்கும் இடம்) பாதுகாப்பிற்காக அரக்குச்செப்பு முதலில் தாட்டு பின்னர் படங்குவிரித்து சூட்டைத்தள்ளி மாட்டினால் அல்லது உழவு இயந்திரத்தினால் சூடடிப்பார்கள்.

அதனை மனிதர்கள் நின்று வைக்கோலை வேறுபடுத்தி, நெல்லை வேறுபடுத்தி, வேறுபடுத்திய நெல்லை பின்னர் காற்றில் அவுரிவைத்து, ஏறி நின்று தூற்றி, தூய நெல்லை சாக்கில் கட்டி, வீடுகொண்டு செல்வார்கள்.
களவட்டியில் இறுதியில் பொங்கல் படைத்து பூமிக்கு நன்றி செலுத்தி விடைபெறுவார்கள். சாதாரணமாக ஒரு வாரத்திற்கு மேலாக இந்த நிகழவு நடைபெறும்.

ஆனால் இன்று, நவீன யுகத்தில் அது முற்றிலும் மாறுபட்டு, ஒரு நாளிலேயே வெட்டி அந்த இடத்திலேயே சாக்கில் கட்டி விற்றும் விடலாம் என்ற நிலை. இதனால் அறுவடையை நம்பியிருந்த கூலித் தொழிலாளிகளின் வாழ்வில் மண். இயந்திரத்திற்கு வேலை, மனிதவலு குறைவு. எது எப்படியிருப்பினும் அன்றைய சூடடித்தலின்போதுள்ள இன்பகரமான அனுபவங்கள் இன்றில்லை.





# இலங்கையில் சிறுபான்மை இனங்களின் இருப்பு

-- திருநாவுக்கரசு கோபகன் --

மிகத் தீவிரமான சிங்கள முஸ்லிம் இனங்களுக் கிடையிலான கண்டி இன முறுகல் ஓரளவு சூடு தணிந்துள்ள நிலையில் இன்று எம்முன்னே பிரதானமாக எழுந்துள்ள “சிறுபான்மை மக்களின் எதிர்காலம் இந்தச் சிறு தீவில் எவ்விதம் அமையப்போகிறது” என்கின்ற கேள்வியை நகர்த்திவிட்டு பொது வெளியில் பயணப்பட முடியாது.



நடைபெற்று முடிந்த மோதலுக்கான காரணங்களை ஆராய்வதோ அன்றி அது தொடர்பில் ஒரு குறித்த தரப்பை குற்றம் சொல்வதோ இக்கட்டுரையின் நோக்கமல்ல, மாறாக நீண்ட கால இனங்களுக்கடையிலான முறுகலை கடந்த நாடாக, அதன் பிரதான குடிகளாக நம்முன்னே வியாபித்து நிற்கும் எதிர்கால சவால்களைப் பற்றி ஆராய்ந்தாக வேண்டும்.

தமிழர் தரப்பின் ஆயுதப்போராட்டம் உச்சம் பெற்ற 80 களின் நடுப்பகுதியில் சிங்களத்தின் தீவிரமான உளவியல் போரினுள் முஸ்லிம் இனம் முற்றுமுழுதாக வீழ்ச்சி கண்டதன் பின்பு, மீட்டெடுக்க முடியாத இடைவெளியை தமிழர் தரப்புடன் ஏற்படுத்திக் கொண்டது. பின்னர் 2001 போர் நிறுத்த காலத்தில் புலிகளின் தரப்பு வலிந்து தெரிவித்த முஸ்லிம் குடியேற்ற யோசனைகள் மற்றும் இன பிற நல்லிணக்க யோசனைகளை முஸ்லிம் தரப்பு சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பதனையும் இங்கு நாம் பதிவு செய்தாக வேண்டியிருக்கிறது.

யுத்தத்தின் இறுதிக் காலகட்டங்களிலும் யுத்த வெற்றிக் கொண்டாட்டங்களிலும் முஸ்லிம் பெரும்பான்மை சிங்களத்தின் கூடாரத்தில் நின்று தமிழரின் மனங்களில் மாறாத வடுவை ஏற்படுத்தி விட்டனர். தமிழரின் தாயக மீட்சிக்கான 60 வருட போராட்டத்தின் காலப்பகுதியில் தமிழர் தரப்புடன் பயணித்த ஒரு சக இனம் சிங்களத்தின் வலையில் வீழ்ச்சி கண்டதன் பின்பு முற்றுமுழுதாக எதிர் நிலையை எடுத்ததற்கான காரண காரியங்களை முஸ்லிம்கள் இன்னும் நடுநிலையாக ஆராய்ந்து விவாதிக்கவில்லை.

யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் தமிழர் தரப்பு வெளிக்காட்டிய நல்லிணக்கத்தின் கால்வாசியைத் தானும் முஸ்லிம் தரப்பு வெளிக்காட்டவில்லை. கடந்த கிழக்கு மாகாண சபையில் தமிழர் தரப்பின் வலிந்த ஆதரவைக் கூட தமது சாணக்கிய வெற்றியாக வெளியே பறைசாற்றி அந்த நல்லிணக்க சமிக்சையைக் கூட மலிவமான அரசியலாக்கியதைத் தவிர முஸ்லிம் அரசியல் தரப்பு வேறெதனையும் செய்யவில்லை.

## “பரஸ்பர புரிந்துணர்வும் விட்டுக்கொடுப்பும் சிறுபான்மை மக்களிடையே வேண்டும்“



தமிழர் தரப்பின் அத்தனை நல்லெண்ண முயற்சிகளையும் முஸ்லிம் தரப்பு தமிழரின் இயலாமை என்று எண்ணுவதாலும் சிங்களம் எப்போதும் தமது பக்கமாக நிற்கும் என்கிற சிந்தனையாலும் தாம் சிங்களத்துடன் பேரம் பேசும் வலுநிலையில் நின்று அரசியல் செய்வதான கற்பிதத்தினாலும் தான் முஸ்லிம் அரசியல் தரப்பு இவ்விதமான தவறான முடிவிற்கு வரவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறது.

ஆனால் சிங்களம் தனது சாணக்கியக் காய் நகர்த்தல்களை முறையாகப் பிரயோகித்து இரு சிறுபான்மை இனங்களையும் மோதவிட்டு வேடிக்கை



பார்க்கவும் அதனூடாக ஏற்படச் சாத்தியமுள்ள இனமுறுகலில் நடுநிலைப்பாத்திரமொன்றை ஏற்பதனூடாக அல்லது தமிழர் சார்பு நிலையில் நிற்பதாகக் காட்டிக் கொள்வதனூடாக சிங்களம் தமிழர் தரப்பிலிருந்து கிடைக்கக் கூடிய தீர்வுத்திட்டத்திற்கான யுத்தக் குற்றங்களுக்கான அழுத்தங்களிலிருந்து தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ளும் தந்திரோபாயத்தை முக்கியமாக கிழக்கிலே செயற்படுத்துகிறது.

தமிழர் தாயகமெங்கும் காணிகளை தந்திரோபாயமாகவும் பலாத்காரமாகவும் ஆக்கிரமிப்புச் செய்கையில் அரசு அதனைக் கண்டுகொள்ளாமல் இருந்தமையையும் தெற்கிலே தம்புள்ள, அளுத்கம, தெல்தெனியா என தீவிரமாக முஸ்லிம் மைய வர்த்தகம் மீதான தாக்குதலில் அரசின் மௌனத்தையும் தெளிவாக விளங்கிக்கொள்வதனூடாக சிங்களத்தின் இந்த நுண் சாணக்கியத்தை கற்றுக் கொள்ள இன்னும் முஸ்லிம்கள் மறுக்கின்றனர்.

இந்நிலையில் தான் தமிழர் தரப்பினர் நடந்து கொண்டிருக்கும் சிங்களப் பேரினவாதத்தின் தாக்குதல் தொடர்பில் கருத்துக்களை நடுநிலையில் நின்று தெரிவிக்க தயக்கம் காட்டிவருகின்றனர். இவ்விதமாக இங்கு கூறுவதால் பாதிக்கப்பட்ட தரப்பாக இவ்வகையான இனவாதத் தாக்குதல்களை கண்டிக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பிலிருந்து தமிழர் தரப்பு நழுவுவதாக அர்த்தம் கொள்ளலாகாது. மாறாக நீண்ட காலப் பிளவு, தமிழரின் பொது மனநிலையில் இவ்வகையான மாற்றத்தை ஏற்படுத்த வாய்ப்பாயமைகின்ற சூழ்நிலையை முஸ்லிம் தரப்பு புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தப் புறச்சூழலில் இனி இலங்கையிலுள்ள இரு பிரதான சிறுபான்மையினங்களும் அடுத்ததாக நகர வேண்டிய பயணப்பாதை தொடர்பாக ஒரு தெளிவான சுயவிமர்சனப் போக்குடனான வேலைத்திட்டத்தை முன் மொழிதல் வேண்டும்.

பௌத்த பெருந்தேசியத்தின் இனவாத வேலைத்திட்டத்தில் எவ்விதமான நேரான மாற்றங்களையும் இனங்காணமுடியாத சூழலில் இன்னும் அரசுடன் ஒட்டியுறவாடி சாணக்கிய அரசியலைப் பெற்றுக்கொள்ள முடியும் என்கிற நம்பிக்கையிலிருந்து முஸ்லிம்கள் வெளிவர வேண்டும். தமிழர் தரப்பிலிருந்து நீட்டப்படுகின்ற நல்லெண்ண சமிக்சைகளை முறையாக ஏற்றுக் கொள்வதனூடாக தேசிய இன முரண்பாடு தொடர்பான நிலைத்திருக்கக் கூடிய தீர்வுத் திட்டமொன்றை முன்மொழிந்து சிறுபான்மை இனங்களின் இருப்பிற்கான முறையான வேலைத்திட்டத்தை இரு தரப்பும் சந்தேகங்களைக் களைந்து மேற்கொள்ள வேண்டும்.

பரஸ்பர புரிந்துணர்வும் விட்டுக் கொடுப்பும் தேவைப்படுகின்ற சூழலை நல்லவிதமாக இவ்விரு இனங்களும் கடக்க வேண்டும். இதனூடாக எதிர்காலத்தில் தாக்குதல்களுக்கு முகங்கொடுக்கும் ஏது நிலையிலுள்ள இன்னுமொரு சிறுபான்மை இனமான மலையகத் தமிழரையும் பாதுகாக்கவும் முடியும்.



## ஆயிரம் பூக்கள் மலரட்டும்



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அதிகாரபூர்வ பத்திரிகையாக “புதிய சுதந்திரன்” பத்திரிகை இன்று அந்தக் கட்சியினரால் மட்டக்களப்பு மாநகர மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது. தமிழ் அரசுக் கட்சி மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றின் அரசியல்வாதிகளும், அபிமானிகளும் அங்கு அதிதிகளாக கலந்துகொண்டனர்.

தமிழரசுக்கட்சியின் முன்னைய “சுதந்திரன்” பத்திரிகையை முன்னோடியாகக் கொண்டு இந்த புதிய பத்திரிகை வரவிருப்பதாக அந்த நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் விபரித்தார்கள்.

ஒரு அரசியல் கட்சி பத்திரிகையை நடத்தலாமா இல்லையா என்ற வாதப்பிரதிவாதங்கள் இங்கு பரவலாக நடக்கின்றன. முன்னைய சுதந்திரன் பத்திரிகையின் செயற்பாடு குறித்தும் சாதக மற்றும் பாதக விமர்சனங்கள் பொதுப்பரப்பில் இருக்கின்றன.

ஆனால், வரவிருப்பது ஒரு புதுப்பத்திரிகை. அதனை அரங்கம் ஆர்வத்துடன் ஒரு சக பத்திரிகையாக வரவேற்கிறது. ஊடகம் சுதந்திரமாக இருக்கட்டும். மக்களின் சுதந்திரத்துக்கு வழி செய்யட்டும்.

ஆயிரம் பூக்கள் மலரட்டும்!

# “கிழக்குக்கான முடிவு வடக்கில் எடுக்கப்படுவதில்லை”

## காணிப் பிரச்சினையை இனங்களுக்கிடையிலான மோதலாக்க நாம் விரும்பவில்லை

-- பூபாலரட்ணம் சீவகன் --



அண்மைக்காலமாக தமிழர் மத்தியில் இருந்து அதீதமான விமர்சனங்களை எதிர்நோக்கும் கட்சி - தமிழ் தேசியக் கூட்டமைப்பு. அதிலும் அந்தக் கட்சியின் உள்ளே இருக்கின்ற ஏனைய கட்சிகளாலும் விமர்சனங்களுக்கு உள்ளாகிவருவது அதன் மூத்த கட்சியான தமிழரசுக் கட்சி. தமிழ் காங்கிரஸுக்கு அடுத்த மூத்த தமிழர் கட்சியாக இருந்தாலும், இப்போது அது எதிர்கொள்ளும் விமர்சனங்கள் கடந்த காலங்களைவிட கொஞ்சம் அதிகந்தான்.

அந்தக் கட்சியின் தற்போதைய செயலாளர் மட்டக்களப்பு மாவட்டத்தை சேர்ந்த கி. துரைராசசிங்கம். அந்தக் கட்சியின் மட்டக்களப்பு அலுவலகத்தில் அவரைச் சந்தித்த போது, அவர் மிகவும் அமைதியாக எங்களை வரவேற்றார். அமைதியாக தென்பட்டாலும், மிகவும் ஆழமானவர் என்பதையும் ஊகிக்கக்கூடியதாக இருந்தது. கேட்கப்பட்ட கேள்விகளுக்கெல்லாம், உணர்ச்சிவசப்படாது, அவசரமின்றி பதில் தந்தார்.

உங்கள் கட்சி மீதுதான் இப்போது அதிக விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. அது ஏன் என்று கேட்டதற்கு அவர் பதிலளிக்கத் தொடங்கினார்.

பதில்: எம்மீதான பெரும்பாலான விமர்சனங்கள் பொய்ப்பிரச்சாரங்கள். எமது ஆதரவாளர்கள் அவை குறித்து அலட்டிக் கொள்வதில்லை. நிலமையை புரிந்துகொண்டுள்ளார்கள். ஆனால், தற்போதைய இளைஞர்கள்(40 வயதுக்கு உட்பட்டவர்கள்) கடந்த 30 வருடமாக ஒரு வீர யுகத்துக்குள் வாழ்ந்து, வெளியேறி வந்திருப்பவர்கள். எது நடந்தாலும் அதற்கு அதிரடியாக தீர்வு காணவேண்டும், பழி தீர்த்துக்கொள்ள வேண்டும் எதிர்ப்பு உடனடியானதாக, தீர்வு உடனடியானதாக இருக்க வேண்டும் என்று விரும்புபவர்கள். சந்தேகம், குழப்பம், ஏமாற்றம் ஆகியவை காரணமாக உடன்பிறப்பான எங்கள் மீது கொஞ்சம் அதிகமாக சந்தேகப்படுகிறார்கள் அவ்வளவுதான்.

கேள்வி: அரசியல் ரீதியான தீர்வின் தாமதம், அரசியலமைப்பு மாற்றத்தின் இழுபறி ஆகியவை அவர்களது கோபத்துக்கு காரணமாக இருந்திருக்கலாம் அல்லவா?

பதில்: அரசியலமைப்பு மாற்றம் என்பது ஒரு நாட்டின் அனைவரும் உடன்பட்டு, அனைவருக்கும் பயந்தரக்கூடிய நிலையில் நடைபெற வேண்டியது. ஆனால், இலங்கையில் அதற்கு ஒவ்வாத ஒரு விநோதமான நிலையே என்றும் இருந்து வருகின்றது. பொதுவாகவே இப்படியான பிரச்சினை என்று வரும் போது சிங்கள மக்களை எதிர்த்தரப்பு தூண்டிவிடும் நிலை காணப்படுகின்றது. மைத்திரிபால சிறிசேன ஆட்சியில், இரு கட்சிகளும் இணையும் ஒரு வாய்ப்பு மாற்றங்களுக்கு சாதமானது என்று நினைத்தோம், ஆனால் கூட்டு எதிர்க்கட்சியின் உருவாக்கம் புதிய பாணியிலான ஒரு பழைய பாதக நிலைக்கு கொண்டு சென்றுவிட்டது.

போரின் பின்னரான காணாமல் போனவர்கள் பிரச்சினை, அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரம், காணி விடுவிப்பு போன்றவற்றை ஏதோ பயங்கரவாதிகளுக்கு ஆதரவான நிலையாக எதிர்க்கட்சிகள் சிங்கள மக்களுக்கு காட்ட நினைக்கின்றன.

கேள்வி: சரி, இந்த நிலைமைகள் காலம் காலமாக இருப்பவைதான். அவற்றை எப்படி சமாளிக்கபோகிறீர்கள்?

பதில்: நேரடியான அரசியலமைப்பு மாற்ற விவகாரம் தொடர்பில் முன்னரைப் போல் அல்லாது இப்போது நாங்கள் தீவிரப் போக்குடைய சிங்களத்தரப்பினருடனும் தனித்தனியாக பேசி வருகிறோம். சமாதானத்தை வலியுறுத்தும் வகையிலான பிரச்சார நடவடிகைகளை சிங்கள மக்கள் மத்தியில் கொண்டு செல்ல பெரும்பான்மையினருக்கு அழுத்தம் கொடுத்து வருகிறோம். அப்படியான சில நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பித்திருக்கின்றன. கணிசமாகக் கொண்டிருக்கும். அவர்கள் தமது பிராந்திய அவைகளின் அதிகாரம் குறைக்கப்படுவதற்கு அனுமதிக்கமாட்டார்கள் ஆகவே இங்கு அதிகாரம் மீள மத்தியால் கைப்பற்றப்படுவதற்கு இடம்கிடையாது. இதுதான் உண்மையான சமஸ்டி. அதனை விடுத்து ஒற்றை வார்த்தையை பிடித்துக்கொண்டு தொங்குவதில் அர்த்தமில்லை.

அதுமாத்திரமல்லாமல், ஒரு நீடித்த தீர்வு என்பது அதிகாரங்களை வெறுமனே புத்தகத்தில் பதிவு செய்யவதால் மாத்திரம் வருவதில்லை. புரிந்துணர்வுடனான விட்டுக்கொடுப்பின் மூலமே அது சாத்தியம் என்பது எங்கள் தலைவர் இரா. சம்பந்தனின் கருத்து. ஆகவே மக்கள் மனதில் ஏற்படும் மாற்றமே நீடித்த தீர்வைத்தரும். அதற்காகவே நாங்கள் பாடுபடுகின்றோம். அதன் ஒரு பகுதியாகவே சிங்கள மக்களிடமும் எமது நிலைப்பாட்டை கொண்டு சென்று சேர்க்க முயற்சிக்கிறோம்.

கேள்வி: தமிழ் தேசியக்கூட்டமைப்புக்குள்ளேயே புரிந்துணர்வு இல்லை என்ற குற்றச்சாட்டு உள்ளதே?

பதில்: எங்களோடு இணைந்திருக்கும் ஏனைய கட்சிகள் பெரும்பாலனாவை முன்னாள் விடுதலை இயக்கங்கள். அவர்களின் கடந்தகால போராட்டப் பாதை அதிரடியானது. அதனால் அவர்களுக்கும் எங்களுக்கும் இடையே சில நடைமுறைச் சிக்கல்கள் வரப்பார்க்கின்றன.

## 'புரிந்துணர்வுடனான விட்டுக்கொடுப்பே நீடித்த தீர்வைத்தரும்'

உதாரணமாக சுரேஸ் பிரேமச்சந்திரை எடுத்துக் கொண்டால் எங்கள் த.தே கூட்டமைப்பின் பேச்சாளராக இருந்தவர் அவர். சில இராஜந்திரிகளுடனான பேச்சுவார்த்தைகளின் போது கூட சர்ச்சைக்குரிய விசயங்களை, வெளியில் பேச அவர்கள் விரும்பாத விசயங்களை அவர் பொறுப்பற்ற விதத்தில் வெளியில் பேசியிருந்தார். அதனால், அவர்கள் அடுத்த சந்திப்பில் அவரை விரும்பவில்லை. நாங்கள் அவர் இல்லாமல் போக முடியாது என்ற நிலைப்பாட்டுக்கு வந்திருக்கலாம், ஆனால், அப்படி போகும் போது அவர்கள் தாம் எம்மிடம் பேச விரும்பிய விசயத்தை தவிர்த்துவிடுவார்கள். இதன் காரணத்தினால், அவருக்கு சில மனக்கசப்புக்கள் ஏற்பட்டிருக்கலாம். இப்படியான சூழ்நிலைகள் கட்சிக்கு பெரும் சங்கடத்தை ஏற்படுத்தியது. ஏனையவர்களுடனும் இப்படியாக தோன்றக் கூடிய பிரச்சினைகளை நாம் கவனமாக இராஜதந்திரத்துடன் கையாள நினைக்கிறோம். முயற்சிக்கிறோம்.

கேள்வி: இப்படியாக சிறுபான்மையினரின் பிரச்சினைகளை சிங்கள மக்களிடம் கொண்டு செல்லவேண்டிய அவசியம் குறித்து பல வருடங்களாகவே வலியுறுத்தப்பட்டு வந்தது. இது நிறைய காலங்கடந்த ஒன்று என்று நீங்கள் பார்க்கவில்லையா?

பதில்: இந்த விடயத்தில் இவ்வளவு காலம் ஏன் செய்யவில்லை என்று கேள்வி கேட்பதைவிட இனிமேலாவது செய்ய வேண்டும் என்பதே முக்கியமானதாகும். அதனை செய்ய விளைகிறோம்.

கேள்வி: அரசியலமைப்பு மாற்றம் குறித்த விசயத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு “சமஸ்டியை” கைவிட்டு விட்டது என்ற கோபம் பல தரப்பினராலும் முன்வைக்கப்படுகின்றதே?

பதில்: அது தவறான பிரச்சாரம். நாங்கள் என்றும் ஒற்றை ஆட்சிக்கு ஆதரவு வழங்கவில்லை. முதல் அறிக்கையில் கூட, மத்தியிலும், பிராந்தியங்களிலும் ஒன்றுக்கு மேற்பட்ட சபைகளை கொண்ட ஒரு அமைப்பை மையப்படுத்தியே கூறப்பட்டுள்ளது. அதிகாரம் பகிரப்படுவதைப் பற்றி அது கூறுகிறதே ஒழிய பரவலாக்கலைப் பற்றி அது கூறவில்லை. எம்மால் பரிந்துரைக்கப்பட்ட மேலவை அல்லது “செனட்” மாநிலங்கள் அவைகளில் இருந்து வரக்கூடியவர்களின் பிரதிநிதிகளை

கேள்வி: கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாநகர சபை போன்ற சில இடங்களைத் தவிர ஏனைய இடங்களில் உங்கள் கட்சிக்கு பின்னடைவு என்று கூறப்படுகின்றது. இதனை எப்படி பார்க்கிறீர்கள்?

பதில்: உண்மையில் கிழக்கில் மட்டக்களப்பு மாநகர சபையில் தான் நாங்கள் எங்களுக்கு விருப்பமான வேட்பாளர்களை பெருமளவில் நிறுத்த முடிந்தது. ஏனைய இடங்களில் அதற்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. அதுவே நீங்கள் சொல்வதன் பிரதிபலிப்பாக இருக்கமுடியும். கிழக்கு மாகாணத்தை பொறுத்தவரை தமிழரசுக் கட்சியோ அல்லது ஏனைய கட்சியோ என்றில்லாமல், எமக்குள் கட்சி பேதமின்றி மக்களின் ஆதரவைப் பெற்ற வேட்பாளரை தேர்தலில் நிறுத்துவோம் என்பதுதான் தமிழரசுக் கட்சியின் கொள்கையாக இருந்தது. ஆனால் ஏனைய கட்சிகளோ தமக்கு ஒவ்வொரு இடத்திலும் ஆசனங்கள் ஒதுக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்த்தார்கள். அதனால், பல இடங்களில் மக்கள் ஆதரவு பெற்ற வேட்பாளர்களை விட ஏனைய கட்சிகளின் ஆதரவாளர்களை நாம் தேர்தலில் நிறுத்த நேர்ந்தது. இது பெரும் குழப்பத்தை ஏற்படுத்திவிட்டது. இருந்த போதிலும் நாம் தோற்றுவிட்டோம் என்று கூறமுடியாது. இந்த புதிய தேர்தல் முறைமை எங்களுக்கு மாத்திரமல்லாமல் அனைத்து கட்சிகளுக்குமே ஒரு குழப்பமாக அமைந்துவிட்டது. அதுதான் இந்த நிலைமைக்கு காரணம்.

அது மாத்திரமன்றி, பல இடங்களில் ஒரு சிறிய வட்டாரத்துக்குள் வேட்பாளர்கள் நிறுத்தபட்டதால், உறவினர்களுக்குள் மோதல் ஏற்படும் நிலைமைவேறு ஏற்பட்டுவிட்டது. அதன் காரணமாகவும் வாக்குகள் பிரிந்துபோய்விட்டன. இப்போது எமது கருத்தறியும் குழு ஒன்று பல மக்களிடம் கருத்துக்களை கேட்டு வருகின்றது. அதனிடம் வரும் மக்கள், இந்த தேர்தலில் உறவு முறைக்காக தாம் வாக்களித்தாலும் தாம் தமிழரசுக் கட்சியின் ஆதரவாளரே என்றும், அதனால் பெரிய தேர்தல்கள் என்று வரும் போது தமது வாக்கு தமிழரசுக் கட்சிக்கே என்றே தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே உள்ளூராட்சி தேர்தல் முடிவுகளை



வைத்து எமக்கு பின்னடைவு என்று கொள்ளத்தேவையில்லை.

கேள்வி: கிழக்கு புறக்கணிக்கப்படுகின்றது. கிழக்குக்கான முடிவு வடக்கில்

தொடர்ச்சி... (பக்கம்- )



# அம்பாறையில் த.தே.கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரஸூம் செல்வாக்கை இழக்கின்றனவா?

-- வி.ரி.சகாதேவராஜா --

அம்பாறை மாவட்ட உள்ளூராட்சிமன்றத் தேர்தல் பெறுபேறுகளைப் பார்க்கின்றபோது தமிழ்பேசும் சபைகளில் ஒன்றிலாவது அறுதிப் பெரும்பான்மை பெற்று தனித்து ஆட்சியமைக்க முடியாத நிலை ஸ்ரீல.முகா.விற்கும் த.தே.கூட்டமைப்பிற்கும் ஏற்பட்டுள்ளது.

உண்மையில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாகவுள்ள 8 சபைகளில் அக்கரைப்பற்று மாநகரசபை மற்றும் அக்கரைப்பற்று பிரதேசசபையைத் தவிர ஏனைய 06 சபைகளிலும் தனியாட்சி நடாத்த முடியாத நிலை. குறிப்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசால் தனித்து ஆட்சியமைக்க முடியாது.

அக்கரைப்பற்று மாநகரசபை மற்றும் அக்கரைப்பற்று பிரதேசசபை ஆகியவற்றில் முன்னாள் அமைச்சர் அதாவுல்லா தலைமையிலான தேசியகாங்கிரஸ் அறுதிப்பெரும்பான்மை பெற்று தனியாட்சி அமைக்கக்கூடிய நிலை உள்ளது.

ஆனால் ஏனைய 6 சபைகளிலும் மு.காவிற்கு கணிசமான வாக்குகள் இருப்பினும் தனித்து ஆட்சியமைக்க முடியாது. எனவே ஏனைய கட்சிகளில் அல்லது சுயேச்சைகளில் தங்கவேண்டியுள்ளது.

இதேநிலைமை தமிழ்ப்பிரதேச அத்தனை சபைகளிலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கும் நேர்ந்துள்ளது.

காரைதீவு, திருக்கோவில், நாவிதன்வெளி ஆகிய தமிழ்ப் பெரும்பான்மை சபைகளில் தனித்து ஆட்சியமைக்க முடியாது. ஆலையடிவேம்பு தனித் தமிழ்ச்சபையாக இருந்தபோதிலும் வேட்பு மனுத்தாக்கலில் த.தே.கூட்டமைப்பு கோட்டைவிட்ட காரணத்தினால் அங்கு உதயசூரியனின் கை ஓங்கியுள்ளது. எனினும் அங்குகூட கூட்டாட்சிக்கே கதவு திறந்துள்ளது.

த.தே.கூட்டமைப்பிற்கு காரைதீவில் 4 ஆசனங்களும் திருக்கோவிலில் 8 ஆசனங்களும் நாவிதன்வெளியில் 5 ஆசனங்களும் கிடைத்துள்ளன. ஆனால் ஆட்சியமைக்க முடியாது.

கல்முனை மாநகரசபையில் 7 ஆசனங்களை த.தே.கூட்டமைப்பினர் பெற்றபோதிலும் த.வி.கூட்டணியினர் 3 ஆசனங்களைப் பெற்றுள்ளனர். பெரும் சவாலாக விளங்கிய இரட்டை அங்கத்தவர் தொகுதியான 12ஆம் வட்டாரத்தில் வெல்வதற்கு பகீரதப்பிரயத்தனம் எடுக்கவேண்டியிருந்ததாக அங்கு வெற்றிபெற்ற உறுப்பினர் சந்திரசேகரம்



ராஜன் கூறுகின்றார்.

அவர்களுள்ளே ஒற்றுமை இல்லாத நிலையுள்ளது. முதலில் அவர்கள் அதனைக் களையவேண்டும். முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் த.கலையரசன் தலைவர் சம்பந்தன், செயலாளர் மாவை சேனாதிராஜா மற்றும் துரைராஜசிங்கம் உள்ளிட்ட தமிழ்த் தலைமைகள் வந்த கூட்டத்துக்குக்கூட வருகை தரவில்லை. இது மக்கள் மத்தியிலேயே ஒருவித ஐயத்தை ஏற்படுத்தியது.

முன்னர் அவரது தளமான நாவிதன்வெளி தமிழ் அரசுக்கட்சிக்கு தனிப்பெரும்



கோட்டையாகத் திகழந்தது. ஆனால் இம்முறை ஆக 5 ஆசனங்களே அவர்களுக்கு கிடைத்துள்ளது. இது எதனைக் காட்டுகின்றது?

இந்த துர்ப்பாக்கிய நிலைமைக்கு புதிய கலப்பு முறைத்தேர்தல் காரணமா? அல்லது இப்பெருங்கட்சிகள் தமிழ் முஸ்லிம் மக்களிடையே செல்வாக்கை இழந்துவருகின்றனவா? என்று சிந்திக்கவேண்டியுள்ளது.

சிறுபான்மை இனங்களின் வாக்குகளே 2015ல் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தன. மாறாக 2018 இல் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் முடிவானது, வடக்கு-கிழக்கில் மிகப் பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளதை எடுத்துக்காட்டுகின்றது. அதாவது தமிழ் தேசிய கூட்டமைப்பு பெரும் சரிவை சந்தித்துள்ளது (30.95வீதம்).

ஓரிரு சபைகளை தவிர்த்து பெரும்பாலான சபைகளில் அக்கட்சியினால் தனித்து ஆட்சியமைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மறுபுறத்தில் தமிழ் தேசிய பேரவை (தமிழ் தேசிய மக்கள் முன்னணி) வடக்கில் கணிசமான இடங்களை கைப்பற்றியுள்துடன் சில நகர சபைகளையும் பிரதேச சபைகளையும் கைப்பற்றியுள்ளது. இது தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கான மாற்று அரசியல் பாதையின் அவசியத்தை மக்கள் உணர்ந்துள்ளதை தெட்டத்தெளிவாக



எடுத்துக் காட்டியுள்ளது.

தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்து பிரிந்து உதய சூரியன் சின்னத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியில் கேட்ட ஈபிஆர்எல்எவ் கூட்டணியும் ஓரளவு இடங்களை வென்றுள்ளது. இவர்களும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் எதிர்பார்க்கப்பட்டிருந்த தேர்தல் கூட்டமைப்பை ஏற்படுத்தியிருந்தால் நிச்சயமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாரிய தோல்வியை சந்தித்திருக்கும்.

இதேவேளை தெற்கின் பிரதான கட்சிகளும் கணிசமான இடங்களை வட கிழக்கில் கைப்பற்றியுள்ளன. இது தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் இணைந்து செயற்படுவதன் காரணமான ஒரு சாதகமான பலன் ஆட்சியிலிருக்கும் இரு கட்சிகளுக்கும் கிடைத்துள்ளதை எடுத்துக்காட்டுகின்றது.

மேலும் வடக்கில் ஈபிடிபியும் கிழக்கில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியினரும் பெற்றுள்ள கணிசமான ஆசனங்கள் அவர்கள் கடந்த கால ஆட்சியின் ஊடாக மக்களுக்கு பெற்றுக் கொடுத்த நன்மைகளை பிரதிபலிப்பதாக உள்ளது.



அத்துடன் கிழக்கின் ஆட்சியை முஸ்லிம் காங்கிரசுக்கு விட்டுகொடுத்ததன் அதிருப்தியின் வெளிப்பாடாகவே சில பிரதேச சபைகளை தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கைப்பற்றும் அளவுக்கு நிலைமை சென்றிருக்கிறது. ஆக மொத்தத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் செயற்பாடு தமிழ் மக்களை பல கூறுகளாக சிதைத்துள்ளதை இத்தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

### மு.காங்கிரசின் போக்கு !

கடந்த 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சிமன்றத் தேர்தலின் அடிப்படையில் மு.கா கட்சி பெற்ற வாக்கு வீதத்தையும் 2018.02.10 ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சிமன்ற தேர்தலின் வாக்கு வீதத்தத்தையும் ஒப்பிட்டால், அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் நிலைமை கடும் வீழ்ச்சியை நோக்கிய பயணமாக சென்று கொண்டிருப்பதை நாம் காணக் கூடியதாகவுள்ளது.

இது ஏன்? எதனால்? எதற்காக? வருகின்றது என்பதை கட்சியும் அதன் தலைமையும் இதுபற்றி நன்கு ஆராயவேண்டிய கட்டாய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறான நடவடிக்கையினை உடனடியாக மேற்கொள்ளத் தவறும்பட்சத்தில் மு.கா என்ற கட்சி எதிர்காலத்தில் ஒரு கேள்விக்குறியாகி விடுகின்ற நிலைமைக்கு தள்ளப்பட்டுவிடும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமே இல்லை.

### சாய்ந்தமருது

சாய்ந்தமருதில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளது. மு.காவிற்கும் அமைச்சர் ஹக்கீமிற்கும் எதிராக கிளர்ந்த அதோ இனச் சகோதரர்கள் 9 ஆசனங்களை வென்று சரித்திரம் படைத்துள்ளனர். அமைச்சர் விடுத்த வேண்டுகோளை நிராகித்து, எமக்கு முதல்வர் பதவி முக்கியமல்ல எமக்கான உள்ளூராட்சிசபையே முக்கியம் என பகிரங்கமாகக் கூறியுள்ளனர். தலைவர் ஹனிபா மாஸ்டர் அங்கு பெருந்தலைவராகியுள்ளார்.

பிரதேச சபைத் தேர்தல் 2018 ஓரளவேனும் மக்களைச் சிந்திக்க வைத்துள்ளது என்பது தெளிவாக விளங்குகின்றது.

காரைதீவு பிரதேசசபையைப் பொறுத்தவரை தமிழ்க் கூட்டமைப்பு பெற்றுக்கொண்ட மொத்த வாக்கின் எண்ணிக்கை 3202. சுயேட்சைக் குழு-1 பெற்றுக்கொண்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை 1985 ஆளும் சு.கட்சி பெற்றுக்கொண்ட மொத்தவாக்குகளின் எண்ணிக்கை 1522 (முஸ்லிம்கள் அடங்கலாக). இதை வைத்துப் பார்க்கும்போதே மக்களுக்கும் கூட்டமைப்பினருக்கும் தெளிவாகியிருக்கும் விசயம் “கூட்டமைப்பின் மொத்த வாக்குகளைவிட இரண்டு கட்சிகளும் இணைந்து பெற்றுக்கொண்ட வாக்குக்கள் அதிகமாகவே காணப்படுகின்றன” என்பது.

இனிவரும் காலங்களிலாவது இந்த மூத்த கட்சிகள் மக்கள் மாற்றத்தை விரும்புகிறார்கள் என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும்.




# இது ஒரு பேய்த்தீவின் கதை

இது ஒரு பேய்த்தீவு பற்றிய கதை. இந்து சமுத்திரத்தில் உள்ள ஒரு பேய்த்தீவு. தீவின் படங்களே குலைநடுங்கச் செய்வனவாக இருக்கின்றன.

நமது இலங்கைக்கு பக்கத்தில்தான், ஆனால் இந்தியாவுக்கு சொந்தமான தீவு இது. பெயர் ஆங்கிலப் பெயர்தான். றொஸ் தீவு.

வங்காள விரிகுடாவில் இருக்கும் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளைப் பொறுத்தவற்றில் அங்கு இருக்கும் 572 தீவுகளில் 38இல் மாத்திரமே ஆட்கள் இருக்கிறார்கள். ஏனைவை வெறிச்சோடித்தான் காடுகளாக இருக்கின்றன.

ஆனால், இந்த றொஸ் தீவு ஒரு காலத்தில் மிகவும் பரபரப்பாக இயங்கிய தீவு. இந்தியாவை விட இது தென்கிழக்காசியாவுக்குத்தான்

## இந்திய சுதந்திர வீரர்களுக்கான தண்டனைத்தீவு இது

நெருக்கமாக இருக்கும்.

இங்குள்ள 19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிரிட்டிஷாரின் கட்டிட எச்சங்களை இயற்கை தன்வசமாக்கிக் கொண்டுவிட்டது. அப்போதைய கட்டிடங்கள் எல்லாம் காடடர்ந்து போய்விட்டன. 1940களில் பிரிட்டிஷ்காரர்கள் இதனை முற்றாக கைவிட்டுவிட்டனர்.



1857இல் இந்தியாவில் பிரிட்டிஷாருக்கு எதிரான சுதந்திரப் போராட்டம் உச்சமடைந்து, கலகங்கள் அதிகரிக்க, கிளர்ச்சிக்காரர்களை பிடித்து அடைப்பதற்கான தண்டனைத்தீவாக இதனை பயன்படுத்த வெள்ளையர்கள் விரும்பினர்.

1858இல் தண்டிக்கப்பட்ட 200 இந்தியர்களை இந்த தீவுக்கு கொண்டு சென்ற வெள்ளையர், 0.3 சதுர கிலோமீற்றர் கொண்ட இந்த தீவில் கொண்டு சென்று குடியேற்ற விளைந்தனர். காட்டை வெட்டும் கடின பணியை கைதிகள் செய்ய, வெள்ளை அதிகாரிகள் அதுவரை கப்பலில் இருந்தார்களாம்.

இந்த நாடு கடத்தப்பட்டவர்களுக்கான குடியேற்றங்கள் விரிவுபடுத்தப்பட, கைதிகள் ஏனைய தீவுகளுக்கு மாற்றப்பட்டார்கள். இந்த றொஸ் தீவு நிர்வாகக் கட்டிடங்களை கொண்டதாக மாறியது. அதிகாரிகளின் குடும்பங்களும் அங்கு தங்கின.



கேளிக்கைக்கான ஒரு பெரிய இடமாக இது மாறியது. ஆனால், அவர்கள் எதிர்பாராமல், அங்கு நீரால் பரவும் தொற்றுநோய்கள் அவர்களை தாக்கத் தொடங்கின. அதனால், இறப்பு வீதம் அங்கு அதிகரித்தது. அதனால்,

ஆங்கிலேயர் அங்கிருந்து வெளியேறத் தொடங்கினர், கட்டிடங்கள், தேவாலயம், குடியிருப்புகள், டெனிஸ் மைதானம் என எல்லாம் காட்டால் ஆக்கிரமிக்கப்பட்டன. நகரத்தை காடுகொண்டது.

1938 இல் அரசியல் கைதிகளை முற்றாக விடுதலை செய்வதற்கு பிரிட்டிஷாருக்கு அழுத்தம் கொடுக்கப்பட, 1942இல் இந்தத் தண்டனை தீவுகளின் செயற்பாடு

## பிரிட்டிஷாரின் களியாட்டத் தீவை காடு கொண்டுவிட்டது

முடிவுக்கு வந்தது.

அத்தோடு ஜப்பான்காரர்களின் தாக்குதல் அதிகமாக இருந்ததும், பிரிட்டிஷார் அங்கிருந்து வெளியேற ஒரு காரணமாகும்.

1947இல் இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைக்க தீவு முற்றாக கைவிடப்பட்டு பின்னர் 1979இல் இந்திய கடற்படையின் வசம் அது மீண்டும் வந்தது.

ஆனால், அந்த தீவை அப்படியே விட்டு வைக்க முடிவு செய்ததால் அது ஒரு பேய்கள் வாழும் தீவாகவே இன்றும் அப்படியே இருக்கிறது. முடிந்தால், இந்தியாவில் அனுமதி கிடைத்தால், ஒருதரம் போய் பேயை....இல்லையில்லை தீவை பார்த்து வாருங்கள்.

---

கடுகுக் கதை


– கலாபூசணம் . அரங்கம் இரா. தவராசா ஜே.பி –

# மூலையில் மூங்கில்

குதூகலமாக புது வீட்டில் கிரகப் பிரவேசம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. அவ்வீட்டுக்கு சம்பந்தம் இல்லாதவர்கள் எல்லாம் வரவேற்பாளர்களாகவும், உபசரிப்பாளர்களாகவும் நிறம் காட்டிக்கொண்டு நின்றார்கள்.


வீட்டு வாசலில், எங்கோ இழுத்து, வெட்டிக் கொண்டுவரப்பட்ட வாழை மரம் வாசலில் சரிந்து விழாமல் இருக்க, கட்டப்பட்டு, இடம்பிடித்து, கம்பீரமாக நிமிர்ந்து நின்றது.

வீடு கட்டப்படுவதற்காக கஸ்டப்பட்டு, உழைத்து, சாரமாய், பாரம் தாங்கிய மூங்கில் மரம் ஒரு மூலையில் கிடந்தது.



"வாசலில் வாழை மரம்; மூலையில் மூங்கில் மரம்"

இதைப் பார்த்து தாம்பூலத்தட்டு சொன்னது, 'உருவாக்குபவன் மூலையில்
மெருகூட்டுபவன் வாசலில்'





# தாந்தாமலையின் முதலாவது பட்டதாரி

-- படுவான் பாலகன் --

ஊருக்குள் முதலாவது பட்டதாரியாகின்றாள் ஜீவரெத்தினம் ஜீவராணி என மகிழ்ச்சியோடு கூறுகின்றனர் மலைகளும், வயல்களும், வனப்புகளும் நிறைந்த அழகிய தாந்தாமலைக் கிராமமக்கள். முதலாவது பட்டதாரியா?

**"ஆனையும் அடிக்கிறதான் நாமளும் வாழுறதான்". "விதியென்டா போறதான்"**

இதுவெல்லாம் ஒரு வரலாறா? என நகர்புறத்தில் வாழும் மக்கள் நினைக்கலாம். உண்மையில் இங்குள்ள மக்களுக்கு, முதலாவது பட்டதாரி உருவாகியுள்ளமை வரலாறுதான். இதனை ஏன் சொல்லுகிறேன் என்பதை தொடர்ந்து படித்துபாருங்கள், புரியாதது, தெரியாததெல்லாம் புரிந்து, தெரியவரும்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓர் எல்லைப்பகுதியில் குறிப்பாக மண்முனை தென்மேற்கு பிரதேசத்தில்தான் ஜீவராணி வாழும் தாந்தாமலைக்கிராமம் அமைந்திருக்கின்றது. இங்குதான் வரலாற்றுச் சிறப்புமிகு தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலயமும் அமையப்பெற்றுள்ளது. தாந்தாமலை என்று அழைத்தாலும், தாந்தாமலை கிராமசேவையாளர் பிரிவிற்குள்தான் ரெட்வானா, 40வட்டை, நெல்லிக்காடு, வீரக்காடு, மக்களடிஊற்று, அலியார்குளம் போன்ற கிராமங்களும் உள்ளடக்கியிருக்கின்றன.

கிராமங்கள் என்றால்? நெருக்கமான மக்கள் தொகையும், அருகருகிலும் அமையப்பெற்றதல்ல. ஆங்காங்கு வீடுகளும், ஒரு கிலோ மீற்றர் இரு கிலோமீற்றர் தொலைவில்தான் கிராமங்களும் அமைந்திருக்கின்றன. இம்மக்கள் கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்தத்தில் அகப்பட்டு தற்போதுதான் எழுந்துவருகின்றனர்.

278 குடும்பங்களையே கொண்ட இக்கிராமத்திற்கென நாற்பதுவட்டையில்

**வருடா வருடம் முருகன் கோயில் திருவிழாவுக்கு போய் வருபவர்களுக்கு தாந்தாமலையின் வசதியீனம் புரியாது**

ஓர் பாடசாலை அமைந்துள்ளது. அப்பாடசாலையில்தான் 7 கிராம மாணவர்களும் கற்கின்றனர்.

பாடசாலை என்றால்? நகர்புறங்களில் உள்ள நூற்றாண்டை கண்ட பாடசாலை போன்றதல்ல இப்பாடசாலை. 1990ல்தான் ஆரம்பிக்கப்பட்டதாக கூறுகின்றனர். தற்போது 172 மாணவர்கள்





இப்பாடசாலையிலே கல்வியைத் தொடருகின்றனர்.

கற்பதற்கு இங்குள்ள மாணவர்களுக்கு ஆர்வமிருந்தாலும், கற்பதற்கான சூழல், வசதிகள் தற்போதுதான் கிடைக்கப்பெற்றிருக்கின்றன. இதனால்தான் பட்டதாரியொருவரை உருவாக்குவதற்காக 2017ல் கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு ஒரு மாணவரை நாற்பதுவட்டை கிராமம் அனுப்பி வைத்து மகிழ்ச்சி

கொண்டுநிற்கின்றது.

வசதியென்று கூறுவது பாடசாலை அமையப்பெற்றமையே தவிர, இன்னமும் இப்பாடசாலையில் கணிதம் போன்ற பாடங்களுக்கு ஆசிரியர் இல்லாத பிரச்சினைகளும் இருக்கதான் செய்கின்றன. அதேவேளை உயர்தரம் கற்பதற்கு 20 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பாடசாலைகளுக்குதான் சென்று கற்கவேண்டிய சூழலும் இருக்கின்றதாக இங்குள்ள மக்கள் கூறுகின்றனர். 20கிலோ மீற்றர் தூரம் செல்வது ஒன்றாக இருந்தாலும், போக்குவரத்து செய்யும் வீதி, உரிய நேரத்திற்கு போக்குவரத்து செய்யமுடியாமை, மழை ஏற்பட்டால் போக்குவரத்து தடை, இரவில் யானையின் தாக்குதல் என அன்றாடம் பிரச்சினைகளோடு வாழ்வதாக இங்குள்ள மக்கள் எந்த தயக்கமும் இன்றி

கூறிக்கொண்டனர்.

யானையை கண்டால் பயமில்லையா? என்றுகேட்டபோது, "பயந்தால் வாழமுடியுமா?" "அதுவும் அடிக்கிறதான் நாமளும் வாழுறதான்". "விதியென்றா போறதான்". என்று துணிவுடன் அவர்கள் கூறிய வார்த்தைகள்தான் அவர்களின் மனஉறுதியை வலிமையாக்கி நின்றதாக தென்பட்டன.

பாடசாலையை மட்டுமே தமக்கான கல்வி வளமாக நினைத்துக்கொண்டு இங்குள்ள மாணவர்கள் வாழ்கின்றனர். உண்மையில் பாடசாலையை மட்டுமே நம்பி வாழவேண்டிய நிலைதான் இங்கும் இருக்கின்றது.

ஏன் அவ்வாறு கூறுகின்றேன் என்றால், சிலருக்கு புரிந்திருக்கும். இங்கு பிரத்தியேக கல்வி நிலையங்கள் இல்லை. 1990ல்தான் பாடசாலை ஆரம்பித்தது. இதனால் இங்குள்ள பெற்றோர்களும் பட்டறிவு கொண்டவர்களாகவே

இருக்கின்றனர். ஆனாலும் இரண்டுபேர் அரசாங்கத்தில் வேலைசெய்கின்ற அரச ஊழியர்களாக இருக்கின்றனர். கற்பதற்கு மாணவர்கள் ஆர்வமாக இருக்கின்றனர். அதேவேளை திறமையானவர்களாகவும் இருக்கின்றனர். இதனை 2012ம் ஆண்டு இப்பாடசாலை படைத்த சாதனை சான்றாக்குகின்றது.

குறிப்பாக கல்விப்பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சையில் 100வீத சித்தியை பெற்றிருந்ததுடன், கணித பாடத்திலும் விசேட சித்தியைப் இப்பாடசாலை மாணவன் ஒருவன் பெற்றிருந்தான். இவ்வாறான கிராமத்தில், இப்பாடசாலையில், கல்விப்பொதுத்தராதர சாதாரணதரம் வரை கற்று சித்தியடைந்த ஜீவராணிதான் இன்று கிராமத்தின் முதல் பட்டதாரியாகின்றாள்.

---

# "கிழக்குக்கான முடிவு வடக்கில் எடுக்கப்படுவதில்லை"

தொடர்ச்சி...

எடுக்கப்படுகின்றது. கிழக்கு மாகாணசபையில் முஸ்லிம் காங்கிரஸ"க்கு ஆதரவு வழங்குவது என்ற முடிவு தமிழருக்கு பாதகமான நிலைக்கு இட்டுச் சென்றது என்பன போன்று உங்கள் கட்சி மீது கிழக்கில் இருந்து விமர்சனங்கள் வருகின்றனவே?

பதில்: இவை தவறான பரப்புரை. எங்கள் தலைவர் இரா. சம்பந்தன் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர். நான் மட்டக்களப்பை சேர்ந்தவன். மூத்த துணைத்தலைவரான அண்ணன் செல்வராசா கூட இங்குள்ளவர்தான். ஆகவே இது தவறான பிரச்சாரம். அதனைவிட கிழக்கு மாகாண சபையில் நாங்கள் யாரோடு கூட்டு சேர்வது என்ற முடிவு கூட இங்கு நாங்கள் எடுத்து, எங்கள் தலைமையால் அங்கீகரிக்கப்பட்டதுதான்.

கிழக்கு மாகாணசபையில் 9 உறுப்பினர்களை கொண்ட முஸ்லிம் காங்கிரஸ"க்கு நாங்கள் 11 உறுப்பினருடன் ஆதரவு வழங்கியதாக கூறப்பட்டதும் தவறான தகவல். 2012இல் அப்போதைய மஹிந்த ராஜபக்ஷவின் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சியமைத்திருந்தது. அதனடிப்படையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு முதல் இரண்டரை வருடம் முதலமைச்சர் பதவி வழங்கப்பட்டது. அடுத்த இரண்டரை வருடத்துக்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ"க்கு முதலமைச்சர் பதவி வழங்கப்பட்டது. அப்போது மத்தியில் ஆட்சியில் ஏற்பட்ட மாற்றத்தை அடுத்து அந்த கூட்டணியில் இருந்து விலகிய முஸ்லிம் காங்கிரஸ் எங்களுடன் ஆட்சியமைக்க கேட்டது. இதற்கிடையே தயா கமகே தலைமையில் ஐக்கிய தேசிய கட்சியுடன் சேர்ந்து நாங்கள் ஆட்சி அமைக்க வேண்டும் என்றும் கேட்கப்பட்டது. ஆனால், கிழக்கில் பெரும்பான்மையினத்தை சேர்ந்தவர் முதல்வராக வருவதை எமது கொள்கை ஏற்காததால் நாம் அதற்கு மறுத்துவிட்டோம். அதுமாத்திரம் அல்லாமல் நாம் முஸ்லிம் காங்கிரஸோடு கூட்டுச் சேர்ந்தபோது ஏனைய கட்சியில் இருந்து பிரிந்து வந்தவர்களுமாக சேர்ந்து அந்தக் கட்சியில் 12 முதல் 14 உறுப்பினர்கள் வரை இருந்தார்கள், முதலமைச்சரும் ஏற்கனவே தெரிவாகியிருந்தார். அந்த நிலைமையிலேயே நாங்கள் அவர்களுடன் (எமது 11 உறுப்பினர்களுடன்) சேர்ந்து ஆட்சியமைத்தோம்.

கிழக்கு மாகாணத்தில் நாம் வைத்திருந்த அமைச்சுக்களை கொண்டு அனைத்து மக்களுக்கும் பக்கசார்பின்றி பணியாற்றியிருக்கிறோம். ஏனையவர்களும் அப்படியே செய்தார்கள். ஆனால், மத்திய கல்வி அமைச்சில் இருந்து சில பாரபட்சங்கள் காட்டப்பட்டது உண்மை. ஆனாலும் அவற்றை நாம் தலையிட்டு திருத்த முனைந்திருக்கிறோம். ஆகவே கிழக்கு மாகாண சபையை நாம் விட்டுக்கொடுத்துவிட்டோம் என்பதோ அல்லது அதன் மூலம் நாம் செய்யக்கூடியதை செய்யத் தவறிவிட்டோம் என்பதோ தவறான பிரச்சாரம்.

கேள்வி: கிழக்கில் தமிழர் நிலம் ஆக்கிரமிக்கப்படுவதாக வரும் செய்திகளில் நீங்கள் பாராமுகமாக இருப்பதாக கூறப்படுகின்றதே?

பதில்: இது குறித்த விசயத்தை மிகவும் நிதானமாக நாம் கையாண்டு வருகின்றோம். ஓய்வுபெற்ற உதவி காணி ஆணையர் குருநாதன் போன்ற நிபுணர்களையும் இந்த விடயத்தில் நாம் ஈடுபடுத்தியுள்ளோம். இப்படியான பெரும்பாலான விவகாரங்களில் சில தனிநபர்களும் சில அரசியல்வாதிகளுமே பிரச்சினையை உருவாக்குகிறார்கள். நாம் இதில் இனி திட்டமிட்டுச் செயற்படுவோம். இதனை உணர்ச்சிவசப்படுத்தலுக்கு உள்ளாக்கி இரு இனங்களுக்கு இடையிலான பிரச்சினையாக உருவகப்படுத்த நாம் விரும்பவில்லை. இந்த விடயத்தில் நாங்கள் முன்கூட்டியே திட்டமிடலுடன் நடக்கவில்லை என்ற விமர்சனம் உள்ளது. இனிமேல் நிலைமை மேம்படுத்தப்படும்.

கேள்வி: கொஞ்சம் பழைய கேள்வியாக இருந்தாலும் இறுதிக் கேள்வி இது. வடக்கில் அனைத்து தமிழ் கட்சிகளுடனும் சேர்ந்து வேலை செய்யத் தயாராக இருப்பதாக கூறும் நீங்கள், கிழக்கில் பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் அணிகளுடன் சேர்ந்து தேர்தலில் போட்டியிட வேண்டும் என்ற கோரிக்கையை நிராகரிப்பது ஏன்? இந்த விடயத்தில் உங்கள் நிபந்தனையான வடக்கு கிழக்கு இணைப்புக்கு தாம் எதிர்ப்பில்லை என்று அவர்கள் கூறியிருக்கிறார்களே?

பதில்: வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் என்பது கொள்கை சம்பந்தப்பட்ட விடயம். அதனை அவர்கள் மிகத்தெளிவாக குறிப்பிட வேண்டும். அடுத்தது கிழக்கில் இருந்து வடக்கு மக்களை பலவந்தமாக வெளியேற்றியதில் அவர்கள் கடந்த காலங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் தமது நிலைப்பாட்டை இதயசுத்தியுடன் உணர்த்த வேண்டும். அதன் பிறகு எமது கட்சி இது குறித்து ஆராயும்.




# தண்டமிழ் திகழும் தண்பொழில்வில்லூர்

-- விவேகானந்தராஜா துலாஞ்சனன் --

அந்த ஊரின் பழைய பெயர் தம்பதிவில். சோழ அரசி தம்பதி நல்லாளின் நினைவாக அவள் மகன் மனுநேய கயவாகு, ஒரு குளம் கட்டி அந்தப்பெயரைச் சூட்டியதாக மட்டக்களப்புப் பூர்வ சரித்திரம் கூறும். காலனித்துவ இலங்கை வரைபடங்களில் அவ்வூர் தம்பொலிக்குளம், தமொலிகாமம், தம்பலி ஊர் என்றெல்லாம் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

மட்டக்களப்பு நகரின் தெற்கே 72 கி.மீ தொலைவில், அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள அந்தக் கிராமம் தம்பிலுவில்லூர். இருபுறமும் கடலும் களப்பும் அரண் செய்ய, குளிர்காற்றில் நிழல்மரங்கள் அசைந்தாடும் தண்பொழிலூர்.

அக்கரைப்பற்று நகருக்கும், திருக்கோவில் கிராமத்துக்கும் இடையே அமைந்திருக்கும் தம்பிலுவில் கிராமம், தென்கிழக்கிலங்கையின் முக்கியமான இரு நிலக்குறிகள் (டுயனெஅயசமள) சார்ந்து முதன்மை பெறுகிறது. ஒன்று திருக்கோவில் சித்திரவேலாயுதசுவாமி ஆலயம். இன்னொன்று தம்பிலுவில் கண்ணகி அம்மன் ஆலயம்.

திருக்கோவில் சித்திரவேலாயுதசுவாமி ஆலயம், மட்டக்களப்பின் முதற்பெரும் தேசத்துக்கோவில். தெற்கே பாணமையிலிருந்து வடக்கே நாவற்குடா வரை, இன்றைய மட்டு - அம்பாறை மாவட்டங்களின் பெரும்பாலான ஊரவர்கள் அக்கோயில் நிர்வாகத்தில் பங்காற்றியதை ஆலயத்தின் பதிவேடுகள் கூறிநிற்கின்றன. “பண்டு பரவணி“ எனும் தொன்மையான நடைமுறைப்படி, இவ்வாலயத்தின் வண்ணக்கராக நியமிக்கப்படுபவர் தம்பிலுவில்லின் குறிப்பிட்ட குடியைச் சேர்ந்தவராக இருக்கிறார். பண்டு பரவணி என்பது, மாகோன் வகுத்த நடைமுறை என்கிறார்கள்.

அடுத்து, தம்பிலுவில் கண்ணகி அம்மன் ஆலயம். அங்கு தான் கி.பி 1407இல் அல்லது 1519இல் பொறிக்கப்பட்ட “தம்பிலுவில் கல்வெட்டு“ கிடைத்தது. கிழக்கிலங்கையில்



கணபதி ஐயர் எனும் வீரசைவக் குருக்கள். கண்டியின் நரேந்திரசிங்க மன்னன் (1707 -1739) மீது இவர் பாடிய “நரேந்திரசிங்கன் பள்ளு“ புகழ்பெற்ற வசந்தன் இலக்கியமாகும். கண்டி மன்னன் அவைக்குச் சென்று, இவர் பள்ளுப் பாடிய சந்தர்ப்பம் தொடர்பாக சுவையான செவிவழிச் செய்திகளும் கிடைத்திருக்கின்றன.

இனி கடந்த நூற்றாண்டில் இவ்வூரில் வாழ்ந்த இருபெரும்

## தனக்கென தனியான புலவர் பரம்பரையைக் கொண்ட ஊர்

பட்டிமேடு, காரைதீவு, தம்பிலுவில் ஆகிய மூன்று இடங்களுமே மிகப்பழைய கண்ணகி வழிபாட்டு மையங்களாகச் சொல்லப்படுகின்றன. பட்டிமேடு மற்றும் காரைதீவுத் தொன்மங்களில் தம்பிலுவில் முதன்மைப்படுத்தப்படுவதால் அங்கு தான் முதல் கண்ணகி ஆலயம் அமைந்திருக்கவேண்டும். சம்பூர், இலங்கைத்துறை, தம்பிலுவில் ஆகிய மூன்று இடங்களிலும் முறையே காளி, செண்பகநாச்சி, கண்ணகி ஆகியோரின் சிலைகள் தமிழகத்திலிருந்து தருவிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் தொன்மத்தை இங்கு இணைத்து நோக்கலாம்.

புலவர்களாக பண்டிதர் குஞ்சித்தம்பி, உவில்லியம்பிள்ளை ஆகியோரைக் குறிப்பிடலாம். விபுலானந்தரின் அடிச்சுவட்டில் மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் பண்டிதர் பட்டம் பெற்றோரில் குறிப்பிடத்தக்கவரான குஞ்சித்தம்பிப் பண்டிதர், சிறுத்தொண்டர் நாடகம், வருக்கமாலை, பஜனாமிர்தம் முதலான நூல்களை எழுதியுள்ளார். உவில்லியம்பிள்ளை, கண்டிராசன் சரிதை, புவனேந்திரன் விலாசம் முதலான நாடகங்களையும், இந்திராபுரி இரகசியம், மஞ்சட்பூதம் ஆகிய நாவல்களையும் படைத்தவர்.

## கண்ணகி அல்லது அல்லாஹ்வை நோக்கி மழை வேண்டி இரக்கும் மழைக்காவியம், கிழக்கிலங்கைக்கே உரித்தான சிற்றிலக்கியம்.


தம்பிலுவிலுக்கென்று தனியாக ஒரு புலவர் பரம்பரை ஒன்றுண்டு. கண்ணகி அல்லது அல்லாஹ்வை நோக்கி மழை வேண்டி இரக்கும் மழைக்காவியம், கிழக்கிலங்கைக்கே உரித்தான சிற்றிலக்கியம். அந்த மழைக்காவியங்களுக்கு முன்னோடி, தம்பிலுவில் கிராமத்தைச் சேர்ந்த கட்டாடி கண்ணப்பன் பாடிய தம்பிலுவில் மழைக்காவியம். அக்காவியத்தில் இடம்பெறும் அகச்சான்றின் மூலம் அது கண்டி மன்னன் இரண்டாம் இராஜசிங்கன் காலத்தையது (1629 - 1687) என்று நம்பப்படுகிறது.

கட்டாடி கண்ணப்பனுக்குச் சில ஆண்டுகள் பின்பு இங்கு வாழ்ந்தவர்

தம்பிலுவில்லில் இன்று சுமார் பன்னிரண்டாயிரம் மக்கள் வசிக்கிறார்கள். அவர்களில் 99 வீதமானவர்கள் சைவர்கள். இங்கு மிகக்குறைந்தளவே கிறிஸ்தவர்கள் காணப்படும் போதும், அவர்களும் தமிழுணர்வை விட்டுக்கொடுத்ததாயில்லை. கிறிஸ்தவ மரபில் இங்கு தோன்றிய முதன்மையான புலவராக “இரட்சணிய அம்மானை“ பாடிய பவுல் கனகரெத்தினம் அவர்களைக் குறிப்பிடலாம். மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கம் மற்றும் கிழக்கிலங்கைப் பண்டிதர் சங்கம் ஆகியவற்றின் பொதுச்செயலாளராக விளங்கி, அண்மையில் கனடாவில் மரித்த வித்துவான் செபரெத்தினத்தின் தந்தை இவர்.

நாற்பதாண்டுகளுக்கு முன்

நாட்டுக்கூத்தும் வசந்தனாடலும் செழித்த தம்பிலுவில்லில் இன்று அவற்றுக்கான சிறு தடயங்களைக் கூடக் காணமுடியவில்லை. வேதனையான விடயம் இன்னொன்று உண்டு. அண்மையில் மட்டக்களப்பின் முதல் நாவல் என்ற அடைமொழியுடன் திரு.ஏரம்பமுதலி அவர்களால் 1934இல் எழுதப்பட்ட “அரங்கநாயகி“ மீள்பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. ஆனால், பண்டிதர் வீ.சீ.கந்தையா,



தன் “மட்டக்களப்புத் தமிழகம்“ நூலில் மட்டக்களப்பின் முதலாவது நாவலாசிரியர் என்று தம்பிலுவில் உவில்லியம்பிள்ளையையே சுட்டிக்காட்டுகின்றார்.

### முதல் நாவல்

---

சரி, இப்போது அம்பாறை மாவட்டத்தில் உள்ளடங்கும் தம்பிலுவில், மட்டக்களப்பை உரிமை கொண்டாடமுடியாது என்பதால், அம்பாறையின் முதல் நாவல் என்றோ, தென்கிழக்கிலங்கையின் முதல் நாவல் என்றோ, அவர் எழுதிய நாவல்களைப் பிரசுரிக்கலாம். ஆனால் அதற்கு அவர் நாவல் எழுதிய ஆண்டு விவரமோ, நாவல்களின் மூலப்பிரதிகளோ எதுவுமே கிடைக்கவில்லை. உவில்லியம்பிள்ளையின் நூல் பிரதிகள் மாத்திரமல்ல் பண்டிதர் குஞ்சித்தம்பி எழுதி வெளியிட்ட எந்தவொரு நூலும் கூட யாரிடமும் கிடைப்பதாக இல்லை! காலத்தின் கோலம்.

துருக்கியப் பேராசிரியர் நூர் யால்மன், அவுஸ்திரேலிய பேராசிரியர் லெஸ்டர் ஹெய்ட், அமெரிக்கப் பேராசிரியர் டெனிஸ்.ஜி.மகில்வ்ரே ஆகிய மானுடவியல் அறிஞர்கள் இலங்கையை - இலங்கைத் தமிழரை மையமாக வைத்து மேற்கொண்ட சமூகவியல் கற்கைகளில் தம்பிலுவில் கிராமத்தை முக்கியமான ஆய்வுக்களமாகக் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். இத்தனை பெறுமதி வாய்ந்த இவ்வூர் சார்ந்த காத்திரமான ஆய்வுகள் தொடரும் போது, கிழக்கிலங்கைச் சமூகத்திலும், ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்திலும், எங்கோ விடுபட்டு அறுந்து போன சமூக - வரலாற்றுக் கண்ணிகளில் ஒன்றை மீளப்பொருத்துவதற்கு இவ்வூர் உதவக்கூடும். சிலம்பேந்தித் தண்பொழிலூர் ஆளும் செண்பகநாச்சி மனது வைப்பாளாக!

# தென்றல் சஞ்சிகையின் ஏற்பாட்டில் நூல் வெளியீட்டு விழா

-- வ.சக்திவேல் --





மட்டக்களப்பிலிருந்து வெளிவரும் தென்றல் சஞ்சிகையினால், கலாபூசணம் கலைச்செம்மல் மு. தம்பிப்பிள்ளை எழுதிய வாழப்பிறந்தவள் எனும் சிறுகதை நூல் மற்றும் “ புதுமைப் பெண்”, “சுதந்திரப் பறவைகள்” , ஆகிய குறுநாவல்கள் அடங்கிய நூல் ஆகியவற்றின் வெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை (10 ஆம் திகதி) களுவாஞ்சிகுடியில் அமைந்துள்ள சீ. மூ. இராசமாணிக்கம் மண்டபத்தில் நடத்தப்பட்டது.

தென்றல் சஞ்சிகையின் ஆசிரியர் க. கிருபாகரனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரெட்ணம் பிரதம அதிதியாக கலந்து கொண்டிருந்தார்.

மேலும் இந்நிகழ்வில் பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் ஆர். சுகிர்தராஜன், மட்டக்களப்பு மூத்த சட்டத்தரணி எஸ்.சிவநாதன், பட்டிருப்பு பிரதிக் கல்விப் பணிப்பாளர் கி. ஜெயந்திமாலா, கிழக்குப் பல்கலைக் கழக சமய வளத்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் எஸ். மதிசீலன், முன்னாள் காதி நீதிபதியும் தேசமானிய பன்னூலாசிரியரும் ஓய்வு பெற்ற அதிபருமான எம். எம். மவ்றூப் கரீம், செங்கதிரோன் கோபாலகிருஷ்ணன் மற்றும் எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள், கவிஞர்கள், சமயத்தலைவர்கள், ஊடகவியலாளர்கள், கல்வியியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது நூலின் முதற் பிரதியை நூலாசிரியரிடமிருந்து மட்டக்களப்பு தமிழ் சங்கத்தின் பொருளாளர் புரவலர் வி. ரஞ்சிதமூர்த்தி பெற்றுக்கொண்டார்.

வாழப்பிறந்தவள் என்னும் சிறுகதை நூலின் நயவுரையை கவிஞர்



அரசரெத்தினமும், இரு குறுநாவல்கள் அடங்கிய நூலின் நயவுரையை கவிஞர் ஆழிவேந்தன் ரமேஸ்குமாரும் நிகழ்த்தினர்.



# கபடியில் கலக்கும் மட்டக்களப்பு வீரர்கள்

-- மிடுஷன் --

கால்பந்து மற்றும் கூடைப்பந்து ஒரு காலத்தில் மட்டக்களப்பு கொடிகட்டிப் பறந்த விளையாட்டுக்கள். அவை இன்று கொஞ்சம் சோபை இழந்திருக்கின்றன. அவற்றை மீண்டும் ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கடந்த சில “அரங்கம்” இதழ்களில் நாம் எழுதியிருந்தோம்.

ஆனால், இங்கு ஒரு விளையாட்டில் கொஞ்சக் காலமாக மட்டக்களப்பு வீரர்கள் சிறப்பாக தேசிய மட்டத்தில் ஆடி வருகிறார்கள். அவ்வளவு ஏன் இந்தியாவில் நடக்கும் பிரிமியர் லீக் போட்டிகளிலும், தெற்காசிய மற்றும் ஆசிய மட்டங்களிலும் கிழக்கு மாகாண வீரர்கள் கலக்கியுள்ளனர்.

அந்த விளையாட்டுத்தான் “கபடி”. கபடி அல்லது அதனை ஒத்த சில விளையாட்டுக்கள் தெற்காசியாவுக்கு உரித்தானவை. இலங்கையிலும், ஜாடி, கிளித்தட்டு என்ற பெயர்களில் அப்படியான விளையாட்டுக்களை நாம் பாரம்பரிய விளையாட்டுக்களாக விளையாடுவது வழக்கம்.

ஆனால், நகரப் பாடசாலைகளில், நகர கழகங்களில் அவற்றுக்கு பெரிய மவுசு கிடையாது. ஆனால், இப்போதெல்லாம் கபடி ஆசிய மட்டம் வரை விளையாடப்படும் விளையாட்டு என்பதால் அதற்கு மதிப்பு அதிகரித்து வருகின்றது. குறிப்பாக இந்தியாவில் நடக்கும் கபடி பிரிமியர் லீக் போட்டிகள் இப்போது தொலைக்காட்சிகளிலும்



காண்பிக்கப்படுகின்றன. இது அவற்றின் பிரபலத்தை கூட்டியிருக்கின்றது.

இப்படியாக இந்தியா சென்று கடந்த 3 வருடங்களாக பங்களூர் புல்ஸ் அணிக்கு விளையாடி வருகிறார் மட்டக்களப்பின் மைந்தனான கே. சினோதரன். புனித மிக்கேல் கல்லூரியின் மாணவனான இவர், ஆரம்பத்தில் கூடைப்பந்திலேயே தான் அதிக ஆர்வம் காட்டியதாகக் கூறுகிறார். ஆனால், கால ஓட்டத்தில் மறைந்த கிஷோர் என்பவர் வழங்கிய பயிற்சியால் தான் கபடி விளையாடத் தொடங்கியதாக அவர் கூறுகிறார். உண்மையில் கூடைப்பந்து மற்றும் கால்பந்தைப் போல் அல்லாது இவர் கபடியை தொழில்சார் வீரராக ஆடி வருகிறார் என்பது இங்கு வெற்றிக்கதை.



முன்னரெல்லாம் மட்டக்களப்பில் கபடி என்று ஒரு விளையாட்டு இருந்தாலும் அதனை இளைஞர்கள் ஆடுவது மிகவும் குறைவு. ஏதாவது மாவட்ட மட்ட, மாகாணமட்ட போட்டிகளுக்கு தேவையென்றால் எந்தவித பயிற்சியும் இன்றி திடீரென ஆரம்பிக்கும் குழுக்களே அப்படியான போட்டியில் களமிறங்கும்.



ஆனால், 90களின் பிற்பகுதியில் கராத்தே பழகிய சில இளைஞர்கள் அதனோடு ஒத்த உடற்பயிற்சிக்காக கபடியில் ஆர்வம் காட்டத் தொடங்கினர். பின்னர் அது இங்கு ஆர்வம் மிக்க விளையாட்டாக மாறத்தொடங்கிவிட்டது.

தான் இந்துக்கல்லூரியில் கற்பித்த காலத்தில் தற்போதைய உடற்கல்விக்கான உதவிக் கல்விப்பணிப்பாளர் வி. லவக்குமாருடன் சேர்ந்து மாணவர்களை பயிற்றுவிக்கத் தொடங்கியதாகக் கூறும் மெதடிஸ்த மத்திய கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியர் கே. ரவீந்திரன், வேறு பலருடன் சேர்ந்து பல பள்ளிக்கூடங்களிலும் தாம் அதனை அறிமுகம் செய்ததாகவும் குறிப்பிடுகிறார்.

இப்போது மட்டக்களப்பு பள்ளிக்கூடங்களில் கபடி ஆர்வத்துடன் ஆடப்படுவதாக கூறிய அவர், மட்டக்களப்பு கிரான் பள்ளிக்கூடமும், பழுகாமம் பாடசாலையும் அகில இலங்கை மட்டத்தில் மிகவும் பிரபலமான அணிகளாக திகழ்வதுடன், அடிக்கடி சாம்பியன்களாகவும் அவை வருவதாகவும் கூறினார்.

இந்துக்கல்லூரியின் தற்போதைய பயிற்றுவிப்பாளரான ரீ. மதன், இலங்கை தேசிய அணிக்காக தெற்காசியப் போட்டிகளில் பங்கேற்றவர்.

மட்டக்களப்பு மண்ணில் இருந்து சினோதரன், ஆர். சசீவன் மற்றும் ரி. மதன்சிங் ஆகியோருடன் தானும் தேசிய அணிக்காக பல சர்வதேச ஆட்டங்களில் கலந்துகொண்டதாக அவர் கூறுகிறார். ஆசிய, தெற்காசிய மட்டச் சுற்றுப்போட்டிகள் இவற்றில் அடக்கம்.

உண்மையில் கூடைப்பந்து மற்றும் கால்பந்தில் மட்டக்களப்பில் வீரர்கள் இதுவரை பெரும்பாலும் தொழில்சார் ரீதியில் ஆடியது மிகவும் குறைவு. ஆனால், இந்திய பிரிமியர் லீக் ஆட்டங்களில் கபடி ஆட மட்டக்களப்பு இளைஞர் ஒருவருக்கு வாய்ப்பு கிடைத்துள்ளமை, இந்த விளையாட்டில் எமது இளைஞர்கள் மேலும் முன்னேற வாய்ப்பு இருக்கின்றது என்பதை காண்பிக்கின்றது.

கபடி இதுவரை ஒலிம்பிக்கில் சேர்க்கப்படவில்லை. ஆனால், அதற்கான வாய்ப்பு விரைவில் கிடைக்கலாம். இப்போதைக்கு இந்திய மற்றும் பாக்கிஸ்தான் அணிகளே அந்த ஆட்டத்தில் சிறந்து விளங்குகின்றன. கால ஓட்டத்தில் இலங்கையும் அந்த நிலைக்கு முன்னேறும் போது நமது மண்ணின் வீரர்களும் அதில் ஜொலிக்க முடியும்.

வளமும் வாய்ப்பும் அவர்களுக்கு ஏற்படுத்திக்கொடுக்கப்பட வேண்டும்.

# போனஸ் பட்டியலில் தெரிவானோர் தவிசாளராகலாமா?

-- வி.ரி.சகாதேவராஜா --

கடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் இரண்டாவது பட்டியலில் போட்டியிட்டு போனஸ் உறுப்புரிமையைப் பெற்றவர்கள் மேயராகலாமா? தவிசாளராகலாமா? என்ற கேள்வி பலரிடையே நிலவுகின்றது.

நடைமுறையிலுள்ள தேர்தல் சட்டநடைமுறைகளுக்கு அமைவாக எந்த முறையில் தெரிவானாலும் அனைவரும் உறுப்பினர்களே என்பது தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது.

அப்படிப்பட்ட உறுப்பினர்கள் அனைவரும் ஒரே அதிகாரங்களைக் கொண்ட தராதரமுடைய உறுபபினர்களே.

அனைவருக்கும் வருடமொன்றுக்கு 50 ஆயிரம் ருபா நிதியொதுக்கீடு செய்யப்படும். அவர்களில் யாரும் மேயராகலாம் தவிசாளராகலாம் உபதவிசாளராகலாம் என்பது தெளிவாகவுள்ளது.

ஓர் உள்ளூராட்சி சபையின் உறுப்பினர்கள் இருவழிகளில் தேர்ந்தெடுக்கப்படலாம்.

ஒன்று வட்டாரமுறையில் நேரடியாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் (Elected members).

இரண்டு விகிதாசார முறையில் நியமிக்கப்படுபவர்கள் (Returned members).

இரு சாராரும் சம அந்தஸ்துடைய உறுப்பினர்களே. இவர்களுள் எந்த வேறுபாடோ ஏற்றத் தாழ்வோ இல்லை.

2012 இன் 22வது சரத்து 65ட கூறுகையில் வட்டாரத்தில் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு Elected என்ற பதமும் நியமிக்கப்படுபவர்களுக்கு Returned என்ற பதமும் பாவிக்கப்படுகின்றன.

ஆனால் இருசாராரும் தேர்தல் மூலமே தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள் என்பது யாமறிந்ததே.

இவர்களுள் யாரும் மேயராக பிரதி மேயராக. தவிசாளராக பிரதி தவிசாளராக வரலாம். எந்தத் தடையுமில்லை.

சட்டம் சரத்து 16 of 2017 இன்படி ஒவ்வொரு கட்சியும் சுயேச்சைக் குழுவும் உறுப்பினர்களைத் தெரிவதற்காக இருபட்டியல்கள் தேர்தலுக்காக சமர்ப்பிக்க வேண்டும். அதன்போதே அவர்கள் தெரிவாகும் அல்லது நியமனமாகும் அங்கத்தவர் எனக் கூறப்படுகின்றது. இது தேர்தலுக்காக மட்டுமே.

ஆனால் அதன் பின்வரும் 66 ட(1) சரத்தில் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களை ஆணையாளர் வர்த்தமானியில் பிரசுரித்ததன் பின்னர் 50 வீதத்திற்கு மேல் ஆசனங்களைப் பெற்றிருந்தால் குறித்த கட்சி அல்லது சுயேச்சைக்குழு தனது அங்கத்தவர்களிடையே (members) இருந்து மேயரை அல்லது தவிசாளரைத் தீர்மானிக்கலாம் என்று குறிப்பிட்டுள்ளது.

இங்கு குறித்த கட்சியின் தெரிவான அங்கத்தவர்கள் (Elected members) மத்தியில் மட்டுமே மேயரைத் தெரிவு செய்யலாம் என்று குறிப்பிடுவதில்லை. மாறாக நியமிக்கப்பட்ட உறுப்பினர்களிலிருந்து (Returned) தெரிவு செய்யமுடியாது என்பதும் அர்த்தமல்ல.

எனவே தெரிவுசெய்யப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட இருசாராரும் உறுப்பினர்களே. அவர்கள் யாரும் மேயராகவும் வரலாம். தவிசாளராகவும் வரலாம்.

கலப்புத் தேர்தல் முறைமை என்பதால் இருவகைப்பிரிப்பு இருக்கின்றதே தவிர அவர்களை வேறுபடுத்திப் பார்ப்பதற்கல்ல. அப்படி இரு வகுப்பினர் இருப்பின் மேல்சபை கீழ்ச்சபை என்று சபையில் இருக்கவேண்டும். அப்படியில்லையே.

தேர்தலில் வட்டார வேட்பாளருக்கு மாத்திரம் வாக்களிப்பதல்ல மாறாக விகிதாசார வேட்பாளர்க்கும் சேர்த்தே மக்கள் வாக்களிப்பர். இங்கு விருப்பு வாக்குமுறைமை இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே தெரிவாகும் உறுப்பினர் வேறு, நியமிக்கப்படும் உறுப்பினர் வேறு என்று பாகுபடுத்துவதில்லை என்பதை கவனத்திற்கொள்ளவேண்டும்.

இருவருக்குமிடையே எந்த வேறுபாடுமில்லை. அனைத்து உறுப்பினர்க்கும் ஒரே கொடுப்பனவு ஒரே சலுகை. ஒரே மரியாதை. ஒரே அந்தஸ்து ஒரே உரிமை.

எனவே மக்களிடையே குழப்பம் தேவையில்லை.








# பௌதீகவியலாளர் ஸ்டீஃபன் ஹாக்கிங் 76 வயதில் மரணம்

-- நன்றி பிபிசி--

பௌதீக விஞ்ஞானி ஸ்டீ.ஃ.பன் ஹாக்கிங், தனது 76ஆவது வயதில் மரணமடைந்தார் என அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

பிரிட்டனை சேர்ந்த இவர், 'கருந்துளை மற்றும் சார்பியல்' சார்ந்த பணிகளுக்கு புகழ்பெற்றவர்.

ஏ .ஃ.ப்ரீப் ஹிஸ்டிரி ஆ.ஃ.ப் டைம்( A Brief History of Time) என்ற புத்தகம் உட்பட பல புகழ்பெற்ற அறிவியல் புத்தகங்களையும் இவர் எழுதியுள்ளார்.

22ஆம் வயதில், மூளை மற்றும் நரம்புகளை பாதிக்கும் ஹமோட்டார் நியூரான் நோய் என்னும் அரிய நோயால் அவர் பாதிக்கப்பட்டுள்ளார் என தெரிய வந்தது. மேலும் அந்த நோயால் அவர் சில நாட்களே உயிருடன் வாழ்வார் என்றும் அப்போது கூறினர்.

அந்த நோயால் அவர் சக்கர நாற்காலியை பயன்படுத்தும் நிலை ஏற்பட்டது; மேலும் அவர் பேச முடியாத நிலைக்கும் போனார்.

அவரின் மன தைரியம் மற்றும் உறுதியை புகழ்ந்த அவரின் பிள்ளைகள், அவரின் புத்திசாலித்தனமும், நகைச்சுவை உணர்வும் உலகளவில் அனைவரையும் ஈர்த்துள்ளன என்று தெரிவித்தனர்.

எனக்கு மரணம் குறித்த அச்சம் இல்லை. அதற்காக விரைவாக இறந்து போக வேண்டும் என்றில்லை. நான் முடிக்க வேண்டிய பணிகள் அதிகம் உள்ளன என்று ஒரு முறை கூறினார் ஸ்டீ.ஃ.பன் ஹாக்கிங். அந்த அனைத்து பணிகளையும் முடித்துவிட்டாரா என்று தெரியவில்லை. 76 வயதில் இந்த பூவுலகை விட்டு சென்றிருக்கிறார் ஹாக்கிங்.



### எமது கால ஐன்ஸ்டின்

சமகாலத்தில் நம்முடன் வாழ்ந்த ஐன்ஸ்டீனை இழந்திருக்கிறோம் என்கிறார் சென்னை பிர்லா கோளரங்கத்தின் இயக்குநர் அய்யம்பெருமாள்.

"கருந்துளை விரிவடையகிறது என்ற கருத்து இருந்த நிலையில், ஹஇல்லைஹ கருந்துளை சுருங்குகிறது என்ற கோட்பாட்டை முன்வைத்து நிறுவியவர் ஸ்டீ.ஃ. பன். பெருவெடிப்பு கோட்பாட்டை அவரைவிட யாராலும் எளிமையாக

விளக்க முடியாது. அண்டவியல் ஆராய்ச்சியில் அவரின் பங்கு மகத்தானது." என்கிறார் அய்யம்பெருமாள்.



## வேடிக்கையானவர்களாக இல்லாவிடில் வாழ்க்கை நரகமாகிவிடும்: ஸ்டீ.ஃ.பன் ஹாக்கிங்

"கோட்பாட்டு அறிவியலை விளக்குவது கடினம். ஆனால், ஹாக்கிங் அதனை அனைவரும் புரிந்து கொள்ளும்படி விளக்கினார். தனது கோட்பாடுகள் மூலம் இயற்பியல் துறைக்கு வெளிச்சமும், நவீன அறிவியலுக்கு திசைவழியும் காட்டியவர் அவர். நரம்பு தொடர்பான நோயினால் சிறுவயதிலேயே பாதிக்கப்பட்ட போதும், அதனையெல்லாம்

"கடந்து அவர் தொட்ட உச்சம், அனைத்துக் காலத்துக்குமான பாடம்" என்கிறார் இளம் அறிவியலாளர் ரி.ஃ. பாத்.



### கலிலீயோ இறந்த நாளில் பிறந்து ஐன்ஸ்டீன் பிறந்த நாளில் இறந்தவர்

ஹாக்கிங், கலிலீயோ இறந்த நாளில் பிறந்து, ஐன்ஸ்டீன் பிறந்த நாளில் இறந்திருக்கிறார். வாழ்வு மட்டும் அல்ல ஹாக்கிங்கின் இறப்பும் அறிவியலைச் சுற்றியே இருந்திருக்கிறது என்கிறார் கல்வியாளரும் அறிவியல் குறித்து தொடர்ந்து எழுதி வருபவருமான ஆயிஷா இரா. நடராஜன்.

"கருந்துளை கோட்பாடு, வேறு கோள்களில் உயிரினம் இருக்கிறதா என்ற ஆய்வு, பெரு வெடிப்பு கோட்பாடு என்று சமகாலத்தின் அனைத்து முக்கிய ஆராய்ச்சிகளிலும் இவரது பங்கு இருந்திருக்கிறது.

அறிவியலை கடந்து அவரது அரசியல் புரிதல் தெளிவானது. மாற்று திறனாளிகளுக்காகவும் தொடர்ந்து குரல் கொடுத்து வந்திருக்கிறார்.

உலகில் அனைவருக்கும் பிடித்த ஒரு விஞ்ஞானி காலங்கடந்துவிட்டார்


























# சமூக வலைத்தள தடையால் ஏற்பட்ட பாதிப்புகளும் அதனை மீறியவர்களும்

-- பவித்திரன் மணிசேகரன் --

இலங்கையில் ஏற்பட்ட வன்செயல்கள் காரணமாக சமூக வலைத்தளங்கள் முடக்கப்பட்டிருந்தன. இக் காலப்பகுதியிலே சமூக வலைத்தளம் அற்ற வாழ்க்கை எப்படி இருந்திருக்கும் அல்லது அவை நம் வாழ்வில் எந்தளவு செல்வாக்கு செலுத்தியிருக்கின்றன என உணரக்கிடைத்தது.

இச்செயல் நடக்கும் முன்பே சமூகவலைத்தளங்களில் பரப்பபட்ட அளவில் இது சார்ந்த தகவல்களை படித்ததும், எவ்வாறு சமூக வலைத்தலங்களுக்கு தடை விதிக்க முடியுமென அலட்சிய போக்கில் இருந்தவர்களில் நானும் ஒருவன். ஆனால் எதுவும் நினைத்தால் சாத்தியமே என உறுதிப்படுத்தினர். அது எப்படி சாத்தியமானது என பார்த்தால் நமது நாட்டுக்கென ஒரு server வழி உள்ளது. அதன் மூலம் குறித்த சில தளங்களை பார்ப்பதற்கு தடை விதிக்கலாம். உதாரணமாக சில அலுவலகங்களில் அவர்களது இணையத்தினூடாக சில தளங்களை பார்வையிட முடியாதிருக்கும் அது போன்ற ஒரு முடக்கல் செயற்பாடே இது.

இதன் போது பிள்ளைகள் போனும் கையுமாய் இருப்பது குறைவு என சந்தோசப்பட்ட பெற்றோர்கள், குடும்பத்துடனான இலகு தொடர்பை இழந்து சோகத்தில் இருந்த வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு பொருளாதாரத்தில் உதவிய உழைப்பாளர்கள், தொடர்பாடலில் நெருக்கம் குறைந்த சோகத்தில் தவித்த காதலர்கள், செய்யும் செயலை மற்றவர்களுடன் பகிர்ந்து திருப்தியடையமுடியாமல் அதிருப்தியடைந்திருந்தவர்கள், நேரத்தை வீணடிக்க(time pass) முடியாமல் தவித்தவர்கள், செய்திகள் அறிவதற்கு சிரமப்பட்டவர்கள். , அவசரத்திற்கு ஒரு புதிய தொடர்பை ஏற்படுத்த முடியாமல் தவித்தவர்கள் என பல கோணங்களில் பலர் சமூக வலைத்தள முடக்கல் மூலம் பாதிப்படைந்தனர்.




இவ்வாறு இருக்க தடையைச் செய்தவர்களின் எண்ணமும் சற்று ஈடேறியது. இருந்தும் இவ்வாறான விடயங்களில் நம்மவர்களின் மூளை எப்படியெல்லாம் வேலை செய்யும் என்று தெரியுமா?..

உடனே யோசித்த சிலர் கையில் எடுத்தது VPN API. இதன் மூலம் நமது IP முகவரியை மாற்றி வேறு நாடுகளில் இருந்து பார்வை இடுவது போலான ஒரு போலி தோற்றத்தை உருவாக்கி சமூக வலைத்தளங்களை பார்வையிடுவதற்கான ஒரு வழி கிடைக்கும்.

சரி எனக்கும் இந்த வழி தெரிந்து விட்டது, ஏதோ பெரிய கண்டு பிடிப்பு செய்தாற் போல ஒரு கர்வத்துடன் ஒருவர் பேஸ்புக்கை பார்த்தால் அவருக்கு முன்பே அவர் நண்பர்கள் பலர் இதை பின்பற்றியிருந்தார்கள்.

அதிலும் அவர்கள் கதைப்பது அதிகமாக நான் இன்று இந்த நாட்டில் உள்ளேன் நீங்க எந்த நாட்டில் உள்ளீர்கள் என்பதே அதிகமாயிருந்தது. ஆனால் அதில் ஒரு முக்கிய குறிப்பு என்னவென்றால் VPN appia இணையத்தில் தேடியவர்களின் எண்ணிக்கைத் தரவில் முதலிடத்தில் வடமேல் மாகாணம் நின்றது. இரண்டாவது சப்ரகமுவ மூன்றாவது மத்தி, நமது கிழக்கு மண் எட்டாவது இடத்திலும் வடக்கு இறுதியிலும் உள்ளது.

இதை எந்த வியுகத்தில் பார்ப்பது என்றுதான் எனக்கு புரியவில்லை. நம்மவர் VPN appia முன்பே அறிந்திருந்தனரா அல்ல சமூக வலைத்தள பாவனை இன்றி இருக்கமுடியும் என்ற நம்பிக்கையா அல்ல மாற்றுவழிக்கு வாய்ப்பில்லை என்ற எண்ணமா அல்ல மென்பொருள் அறிவு குன்றியமையா காரணத்தை நீங்களே கண்டுபிடியுங்கள். இப்படியாக இருக்க திருட்டுதனமாக சமூக வலைத்தளங்களை பார்வையிடுவோருக்கு அபராதம் அறவிடப்போவதாக அரசு அறிவித்தாலும் எவ்வித மாற்றமும் இல்லை காரணம் பிளேஸ்டோரில் உள்ளதை யியைதானே பயன்படுத்தினோம் இதில் திருட்டுதனம் என்று கூறுவதற்கு பெரிதாக ஒன்றுமில்லையென பலரும் கூறினர்.

இப்படியாக பலவிடயங்கள் நடந்தாலும் மறைமுகமாக பொருளாதார இழப்பையும் இந்த சமூகவலைத்தள தடை ஏற்படுத்தியுள்ளது.

முக்கிய கருத்தரங்குகள், கலந்துரையாடல், மாநாடுகள் என பல நடப்பது Skype போன்ற செயலிகளாலேயே. இப்படியிருக்க இவை அணைத்தும் தடைப்பட்டிருக்குமென யாராவது சிந்திதீர்களா. அதைவிட online payment முறைகள் பல தடைப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் சமூக வலைத்தள முடக்கத்தால் இணையப்பாவனை குறைவுற்று இலங்கைக்கான signal strength சற்று குறைவடைந்துள்ளது. "பழைய குருடி கதவத் திறடி" என்பது போல
மீண்டும் எப்போது வழமைக்கு திரும்பும்



என்ற எதிர்பார்ப்புக்களுடன். இன்று வெள்ளிக்கிழமை என்று இதை எழுதும் போது ஒரு தகவல் கூறியது. தெரியவில்லை. ஆனால் இது தகவல் சுதந்திரத்துக்கு ஒரு அடி என்பதையும் கருத்தில் கொள்ளாமல் இருக்க முடியாது.

## "அரசியலமைப்பு மாற்றம் உட்படைன முரண்பாட்டை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் உடனடியாக தேவை" சிறுபான்மை இன முக்கியஸ்தர்கள் வலியுறுத்தல்

தொடர்ச்சி...

கொடுத்ததாக கூறும் அவர், ஆனால், கடந்த உள்ளூராட்சி தேர்தலையடுத்து அரசியலமைப்பு மாற்றத்தை முன்னெடுக்கும் அரசியல் துணிபை தமிழர் தரப்பு இழந்து போயிருக்கிறது என்றும் கூறுகிறார். நடந்துபோன தேர்தலில் முடிவுகளும், வன்செயல்களும் ஏற்கனவே ஒப்புக்கொண்ட விசயங்களில் இருந்துகூட பெரும்பான்மைத் தரப்பை பின்வாங்கச் செய்துவிடும் என்றும் அவர் நம்பிக்கையீனம் வெளியிட்டார்.

உண்மையில், இந்த விடயத்தில் பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை என்று பார்ப்பதைவிட அரசாங்கத்துக்கு இந்த இனப்பிரச்சினைக்கான தீர்வு காணவேண்டிய கடப்பாடு இருக்கிறது என்பதை வலியுறுத்த வேண்டும் என்று மனோகணேசன் கூறுகிறார்.

ஐநா மனித உரிமை ஆணைக்குழுவில் இலங்கையின் மனித உரிமை மீறல்கள் விவகாரம் பரிசீலிக்கப்படும் நிலையில் அதனால், பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கையை தமிழ் தலைமைகள் பெரும்பாலும் இழந்திருக்கின்றன. யாழ்ப்பாணத்தில் கூட்டம் ஒன்றில் பேசிய தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், இலங்கையை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்துதல் போன்ற விடயங்கள் சாத்தியமில்லை என்று கூறியிருக்கிறார். இங்குள்ள பெரும்பாலான அரசியல்வாதிகள் மனதிலும் இதே கருத்தே காணப்படுகின்றது.

ஆகவே இலங்கையில் அரசியலமைப்பு மாற்றத்தின் மூலமாவது இனப்பிரச்சினைக்கு தீர்வு காண மேலும் சிரத்தையுடன் முயற்சிக்க வேண்டும் என்ற கருத்து அவர்கள் மனதில் வலுவாகக் காணப்படுகின்றது.

## முகநூல் மீதான தடை நீக்கம்

அடுத்து இந்த தடை நீக்கப்பட்டதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.

கடந்த ஒரு வாரகாலமாக இந்தத் தடை அமுலில் இருந்தது

தனது அறுவுறுத்தலின் பேரில், பேஸ்புக் நிறுவன அதிகாரிகளுடன் தனது செயலர் பேசியதாகவும், அதில், வன்செயல்களை தூண்டவும், வெறுப்புணர்வுப் பேச்சுக்களை தூ ண்டவும் அனுமதிக்க மாட்டோம் என்று அந்த அதிகாரிகள் உத்தரவாதம் தந்ததாகவும் தனது டுவிட்டரில் ஜனாதிபதி கூறியிருந்தார்.

மார்ச் மாதம் 7 ஆம் திகதி, பேஸ்புக், வைபர், இன்ஸ்டகிராம் போன்றவற்றை இலங்கை அரசாங்கம் தடை செய்தது. கண்டியில் சிங்கள - முஸ்லிம் மோதலை அடுத்து அந்தத் தடை வந்தது.

கண்டி வன்செயல்களில் 3 பேர் பலியாக பள்ளிவாசல்கள் உட்பட முஸ்லிம்களின் சொத்துகளுக்கு பலத்த சேதம் ஏற்படுத்தப்பட்டது.

வட்ஸப் போன்றவை நேற்றே செயற்படத்தொடங்கிவிட்ட நிலையில் பேஸ்புக் மாத்திரம் இன்றுவரை தடுக்கப்பட்டிருந்தது.

இதற்கிடையே சமூக வலைத்தளங்களை கட்டுப்படுத்துவது தொடர்பில் புதிய சட்டத்தை கொண்டுவரப்போவதாக அரசாங்கம் முன்னதாக அறிவித்திருந்தது.

முன்னதாக பேஸ்புக் தடை செய்யப்பட்டதை பல அரசியல் தலைவர்கள் மற்றும் இராஜதந்திரிகளும் கண்டித்திருந்தனர்.



புள்ளிகளின் தொடரே கோடுகளின் உருவாக்கமாகும். ஓவியத்திற்கு நேர்கோடு, கோணக்கோடு, வளைகோடு என்பன சித்திரங்களின் அடிப்படையாகும். அதனால்தான் "மேலும் கீழும் கோடுகள் போடு அதுதான் ஓவியம்" என்று முதுபெரும் கவிஞர் பாடல் மூலம் தெளிவுபடுத்தினார்.

சுமார் இரண்டாயிரம் (2000) ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மக்கள் மலைக் குகைகளிலும், பாறைகளிலும், கோட்டோவியங்கள் வரைந்தனர். இப்படி வரையப்பட்ட ஓவியங்களை ""கண்ணெழுத்து"" என்றே அழைத்தனர்.

எழுத்து என்பதற்கு ஓவியம் என்றும் பொருளுண்டு என பரிபாடலும்; குறுந்தொகையும் கூறுகின்றன.



மரபு சார்ந்த ஓவியங்களால் புகழப்பட்டவர்கள் இந்தியாவில் ராஜா ரவிவர்மா, இலங்கையில் முதலியார் அமரசேகர. இலங்கையின் தேசப் படத்தை வரைந்தவர் கிரேக்க நாட்டைச் சேர்ந்த ""தொலமி"" என பவராகும்.

"""டோடோ""" என்பது ஒரு பழங்காலத்துப் பறவை. இப்பறவையினம் அழிந்து விட்டது. மாமான்னர் ஜவாங்கீர் காலத்துக் கட்டடங்களில் காணப்படும் ஓவியங்களில் இப்பறவையின் உருவம் உள்ளதாம். பண்டைய ஓவியங்களை ஆராய்ந்த ஆராய்ச்சியாளர்கள் 700 ஆண்டுகளுக்கு முன்பே """ஹாலி""" நட்சத்திரத்தை ஓவியமாகத் தீட்டியிருப்பதை கண்டறிந்திருக்கிறார்கள்.

# புகழ்பெற்ற சில ஓவியர்களும் சில ஓவியங்களும்

-- கலாபூசணம் அரங்கம் இரா.தவராஜா --

இப்படி வரையப்பட்ட ஓவியங்கள் காலப்போக்கில் மக்களின் மதிப்பை பெற, ஓவியத்துக்கென வரைமுறைகள் வகுக்கப்பட்டு ஓவியக் கலையென்னும் அங்கீகாரமும் வழங்கப்பட்டது.

கலைகளிலே மென்மையான கலையாக திகழ்வது ஓவியமாகும் அதனால்த்தான் மென்மையான பெண்மையோடு ஒப்பிட்டு "கலைகளிலே அவள் ஓவியம்" என்றார் கவியரசு கண்ணதாசன். சித்திரத்தை உவமைப்படுத்தி சித்திரமே..... சித்திரமே சிரிக்கக் கூடாதா? என்ற பாடல் மூலம் கேள்வியும் கேட்டு வைக்கப்பட்டது.

உணர்ச்சிகளின் வெளிப்பாடாகவும், வடிகாலாகவும் அமைந்திருப்பது ஓவியக்கலையாகும்.

தன் எண்ணத்தின் பிரதிபலிப்பை கற்பனையின் சிருஸ்டியோடு மிக நுணுக்கமாக கலையம்சம் பொருந்தி தூரிகையால் வண்ணத்தில் வடித்து தன் சிறப்பான கை வண்ணத்தை சித்தரித்துக் காட்டுபவரே சிறந்த சித்திரக்காரர் ஆகிறார்.

சித்திரங்களில் மரபுசார்ந்த சித்திரம், நவீன சித்திரம், கேலிச்சித்திரம், அரூப வெளிபாட்டுச் சித்திரம், ஒட்டுச் சித்திரம், சுவர்ச் சித்திரம் எனப் பல வகையுண்டு. உலகில் புகழ் பெற்ற ஓவியங்களாக திகழ்பவை "டாவின்சு" அவர்கள் வரைந் மோனலிசா, இயேசுநாதரின் கடைசி இராப்போசனம்.

இலங்கையில் தொடரான கதை சொல்லும் தம்புள்ள அஜந்தா ஓவியங்கள், காசியப்பனால் உருவாக்கப்பட்ட சிகிரியாவில் இன்றுவரை மிளிர்கின்ற நீரோற்பல மலரை கையேந்தி அழகுடன் புன்னகை சிந்தும் மாதுவின் சித்திரம்" என்று பட்டியலை நீட்டிக் கொண்டே போகலாம்.


பிரான்ஸ் நாட்டு மன்னான முதலாம் பிரான்சீஸ் உலகப் புகழ் பெற்ற மோனலிஷா ஓவியத்தை முதன் முதல் விலை கொடுத்து வாங்கியவர். அவர் அந்தப் படத்தை தனது குளியலறையில் மாட்டி வைத்திருந்தாரம்.

இத்தாலி நாட்டில் உள்ள ஃப்ளொரென்ஸ் நகரத்துக்கருகில்த்தான் மைக்கேல் ஏஞ்சலோ சலவைக்கல்லில் தீட்டிய ஓவியங்கள் அவருக்கு புகழைத் தேடிக் கொடுத்தன.



நியுயோர்க்கில் பிக்காஸோ வரைந்த தாய்மை எனும் ஓவியம் 37 கோடியே 5 இலட்சம் ரூபாய்க்கு விலை போனது. பிக்காஸோவின் இன்னொரு ஓவியமான இரண்டு அரசில் நகைச்சுவையாளர்கள் என்ற ஓவியம் அதைவிட அதிகமாக 43 கோடியே 25 இலட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. 20ம் நூற்றாண்டில் அதிகமான விலை போன ஓவியம் இதுதான். பிக்காஸோவின் ஓவியங்கள் கியுபிஸம் (cupism) என்பதாகும்.

ஜப்பான் நாட்டு அருங்காட்சியகத்தில் இடம்பெற்றுள்ள ஒரு அரிசியில் இரண்டு சிட்டுக்குருவிகள் பறப்பது போல் வரைந்தவர் "ஹோ குலபாய"" என்ற ஓவியர். இச்சித்திரத்தால் அவர் உலகப் புகழ்பெற்ற சித்திரக்காரரானார். பிராஞ்சு நாட்டைச் சேர்ந்த ஓவியர் """அன்னி லூயிஸ்;; கிரோடெத் """(1767-1824) இரவில் மட்டுமே ஓவியம் வரைவார். இவர் தனது தலையில் உள்ள தொப்பியில் நாற்பது குமிழிகளில் மெழுகுவர்த்திகளை ஏற்றி வைத்துக் கொண்டு அந்த வெளிச்சத்தில் மட்டுமே ஓவியம் வரைவார். """கோகின்;;"""வான்கோ""" போன்ற ஓவியர்கள் தூய பிரகாசமான வர்ணங்களை பெரிய பரப்புகளாகத் தீட்டினர். ஓவியங்கள் அழுத்தமானதாயின்றி தூரிகைத் தீற்றல் தெரியும்படியாக அவர்களின் சித்திரங்கள் அமைந்திருந்தன. "சிக்மன்ட்" "பி.ஃ. ராயட்" போன்றோரின் ஓவியங்கள் (surrealism) """சர்ரியலிசம்""" என்றாகின.



இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த """ஆஸ்பெர்ட் லஸ்காண்டா""" என்பவர்தான் """டெய்லி எக்ஸ்பிரஸ்""" என்ற செய்திப் பத்திரிகை மூலம் முதன் முதலாக கார்ட்டூன் படங்களை அறிமுகம் செய்து வைத்தார்.

காட்டூன் சித்திரங்களை வாசகர்கள் விரும்புகிறார்கள் என்பதை உணர்ந்த சில பத்திராதிபர்கள் தங்கள் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் இச்சித்திரங்களின் மூலம் சம்பாசனைகளையும், துணுக்குகளையும், கேலிகளையும், கிண்டல்களையும் கதையின் உயிரோட்டமாகவும் வாசகர்களிடையே பல கற்பனை கதாபாத்திரங்களை உருவாக்கி அவைகளுக்கு பல பெயர்களை வைத்து வாசகர்களிடையே தங்கள் எண்ணங்களையும், கருத்துக்களையும் விதைத்தார்கள். இவ் விதைப்பு அவர்களுக்கு நல்ல அறுவடையாகியது. எடுத்துக்காட்டாக, தினத்தந்தியில் வந்த சிந்துபாத், ராணி குடும்பப் பத்திரிகையில் வந்த குரங்கு குசலா, பத்மபூசணி, வீரகேசரியில் வெளிவந்த சவாரித்தம்பர், மித்திரனில் வெளியான மைனர்மச்சான், சிரித்திரனில் ஆசுளு டாமோடிரன், ஸ்ரீமான் செல்லக்கிளி, சுவைத்திரள் சஞ்சிகையில் முகம் காட்டாத முத்தம்மா, விஸ்கி அடிகள், அரங்கம் சஞ்சிகையில் டொங்கிமாமாவும் மங்கி மாமியும், தினமுரசு பத்திரிகையில் அதிரடி ஐயாத்துரை, என பட்டியல் நீழும்.

இதேவேளை தழிழ்நாட்டில் சிறுவர்களுக்கென சித்திரக்கதைகளும் வெளிவரத் தொடங்கின. இவை ராணி காமிக்ஸ் கதைகள் என்ற பெயரில் பல தலையங்களில் வெளிவந்தன.

அமெரிக்காவில் ஓவியங்கள் மூலம் வரையப்படும் கார்ட்டூன்கள் பிரபல்யமடைய 1928 நவம்பரில் தயாரிப்பாளர் வால்ட்டிஸ்னி உருவாக்கிய அனிமேசன் கார்ட்டூன் சித்திரமான """மிக்கிமவுஸ்""" என்ற எலி மிக உயர்ந்த விருதான ஆஸ்கார் விருதையும் பெற்றது.

தமிழ்நாட்டில் அனிமேசன் காட்டூன் தொடர்களான """கர்வமுள்ள சிங்கம்"""

தொடர்ச்சி... (பக்கம்-23)

# கண்ணுக்கு ஒளியூட்டிய லண்டன் கண் வைத்தியர்கள்

-- வி.ரி.சகாதேவராஜா --



இன்றைய யுகத்தில் கணனி மற்றும் கையடக்கத் தொலைபேசிப்பாவனை என்பது தவிர்க்கமுடியாத வழக்கமாகிவிட்டது. ஆனால் அவற்றை அளவுக்கு மீறிப்பாவிப்பதால் கண்ணுக்கு ஆபத்து நேரிடுகிறது என்பதை பலரும் மறந்துவிடுகின்றனர்.

உண்மையில் கணனியை தொடர்ந்து பயன்படுத்துபவர்கள் இரு மணி நேரத்துக்கொருதடவை கண்ணுக்கு ஓய்வு வழங்க வேண்டியது அவசியமாகும். மேலும் இவற்றை இருட்டுக்குள் பயன்படுத்தக் கூடாது. எப்போதும் வெளிச்சசூழலில் மட்டுமே கனினி, தொலைக்காட்சி கையடக்கத்தொலைபேசி என்பவற்றைப் பாவிக்கவேண்டும்.

இவ்வாறு கூறுபவர்கள் லண்டனிலிருந்து வந்த இலங்கை கண்வைத்திய நிபுணர்கள்.

கல்முனையில் மின்னாமல் முழங்காமல் ஒரு மாபெரும் சேவையொன்று நடந்தேறியிருக்கிறது. ஆம் கண்களைப்பாதுகாத்த மனிதாபிமான சேவை அது.

லண்டனிலிருந்து வந்த எமது புலம்பெயர் உறவுகளின் அதியுயர் வைத்தியசேவை. இரண்டு நாட்களில் 70 லட்ச ரூபா பெறுமதியான 140 கண் சத்திரசிகிச்சைகளை ஏழைகளுக்கு இலவசமாகச் செய்துமுடித்த கண் சத்திரசிகிச்சை நிபுணர்கள் அவர்கள்.

லண்டன் தமிழ் வைத்திய நிபுணர்கள் சங்கத்தின் அனுசரணையுடன் கல்முனை ஆதார வைத்தியசாலையில் இருநாட்களில்(25, 26) 70 லட்ச ரூபாய் பெறுமதியான 140 ஏழை கண்நோயாளர்களுக்கான கற்றரக்ட் சத்திரசிகிச்சைகள் முற்றிலும் இலவசமாக செய்து முடிக்கப்பட்டிருக்கின்றன.

வைத்திய அத்தியட்சகர்களான இரா. முரளீஸ்வரன் (கல்முனை) குண. சுகுணன் (களுவாஞ்சிக்குடி) ஆகியோரின் ஏற்பாட்டில் இச்சேவை நடைபெற்றது.


லண்டனிலிருந்துவந்த இலங்கை கண் வைத்திய நிபுணர்களான எம். லோகேந்திரன்(வட்டுக்கோட்டை), ராதா தர்மரெட்ணம் (களுவாஞ்சிக்குடி) காந்தா நிறஞ்சன் (மட்டக்களப்பு) ஆகியோர் பிரதான பாகமேற்றனர்.





நாட்டிலுள்ள பிரபல கண்வைத்திய நிபுணர்களான எஸ். சந்திரகுமார்(யாழ்ப்பாணம்), ஏ.பி. கங்கிலிபொல(கல்முனை), பி.டயஸ் (மொனராகல) உள்ளிட்ட 8 வைத்திய நிபுணர்கள் இச்சத்திர சிகிச்சைகளை ஒரு சதமும் பெறாமல் ஆர்வத்துடன் மனம் வைத்துச் செய்தனர்.

லண்டனிலிருந்து வந்த டாக்டர் மகாரத்னம் லோகேந்திரன் யாழ்.வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவர். பிரபலமான கண் வைத்தியநிபுணரான இவர் உலகெங்கும் இருந்து கண்வைத்திய நிபுணத்துவ கற்கைக்காக லண்டனுக்கு வரும் வைத்தியர்களுக்கு கற்பித்து வருபவராவார். டாக்டர் காந்தாநிறஞ்சன் ஒரு ஜீறியட்டிசன் (70வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான வைத்தியநிபுணர்).



டாக்டர் மகாரத்னம் லோகேந்திரன் கூறுகையில்:


“கடந்த 30வருட சேவையில் இதுவரை 4000 பேருக்கு கற்றரக்ட் சத்திரசிகிச்சையை செய்துள்ளோம். இதனை நாம் மனிதருக்குச் செய்யும் சேவையாக மட்டுமே செய்கிறோம். யுத்தகாலத்திலும் பின்னரும் இச்சேவையைத் தொடர்ந்துசெய்கிறோம்.

2002இல் அப்போது சாயி நிலையமும் அரசாங்க அதிபரும் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க யுத்தநிறுத்தகாலத்தில் கண்சிகிக்சை முகாமை பல சிரமங்களுக்கு மத்தியில் நடாத்தினோம்.

பின்பு முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் தொடர் மருத்துவவேவையை வழங்கிவந்தோம்.2012இல் மீண்டும் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு பகுதிகளில் செய்தோம்.

2013இல் மட்டக்களப்பு,, நுவரேலியா கண்டிபோன்ற பிரதேசங்களில் கண் சிகிச்சை முகாம்களை நடாத்தினோம். கல்முனைக்கு வருவது இதுவே முதற்தடவையாகும்.

2013இல் மட்டக்களப்பு வந்த 100 பேருக்கு கற்றரக்ட் சிகிச்சை வழங்கினோம். கண்இமை சிகிச்சை பிளாஸ்ரிக் சிகிச்சை என்பனவும் செய்தோம்.” என்றார்.



வைத்திய கலாநிதி டாக்டர் காந்தா நிறஞ்சன் கருத்துரைக்கையில்:

இலங்கையைச் சேர்ந்த 3000 தமிழ் வைத்தியர்கள் ஐக்கிய இராச்சியத்தில் வாழ்கின்றனர். ஆனால் ஆக 400 பேர் எமது அமைப்பிலுள்ளனர். அவர்களது பங்களிப்பிலே இந்த மாபெரும் மனித சேவையைச் செய்யமுடிகிறது.

2002இல் ஆரம்பிக்கப்பட்ட இவ்வமைப்பு இலங்கையில் குறிப்பாக யுத்தத்ததால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் எமது வைத்திய சேவையை வழங்கிவருகின்றது.

நாம் அரசசார்பற்ற கட்சிசார்பற்ற அமைப்பு. தேவை கண்டவிடத்து நலிவுற்ற எமது மக்களுக்கு மருத்துவ சேவையைச் செய்து வருகின்றோம்.”என்றார்.



வைத்தியநிபுணர் டாக்டர் ராதாதர்மரெட்ணம் கூறுகையில்:

“எமது அமைப்பின் உறுப்பினர்களின் மாதசந்தா சேகரிப்பு பணத்தில் சிகிச்சைக்கான உபகரணங்களை மட்டுமே வாங்குகின்றோம். அதாவது கண்வில்லைகள் அதற்கான சிறு உபகரணங்கள் சிலவற்றை வாங்குகின்றோம்.

மற்றும்படி நாம் இங்கு வந்து போவது மற்றய செலவுகள் எமது சொந்த செலவில்தான் சேவையாகச் செய்கின்றோம். இங்கு பூரண ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைக்கிறது.

மட்டு. படுவான்கரை மக்கள் பெருமளவில் இந்த கற்றக்கட்ட நோயால் பீடிக்கப்பட்டுள்ளனர். களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் நான் செய்த சோதனையில் சுமார் 1000 பேரளவில் கற்றரக்ட் பீடிக்கப்பட்டுள்ளனரென்று தெரிந்தது. ஸ்கிறிநிங் 800 பேருக்குச் செய்தோம். அவர்கள் அனைவருக்கும் கற்றரக்ட் சிகிச்சை செய்ய வேண்டியுள்ளது. எனினும் மோசமாகவுள்ள ஆக 150 பேருக்கு இம்முறை செய்கிறோம்.” என்றார்.





தேட்டம்

## மட்டக்களப்பு தந்த மனிதாபிமானம் நிறைந்த மக்கள் அரச அதிகாரி நமசிவாயம் பத்மநாதன்

## நின்று விட்ட “பத்” எனும் தண்டவாளம்

“செய்தி அறிந்தீர்களோ?” தொலைபேசியில் நண்பர் காசுபதி நடராஜா

“என்ன செய்தி?” நான் கேட்டேன்

“நண்பர் நமசிவாயம் பத்மநாதன் காலமானார்”

ஒருகணம் மனம் அதிர்ந்தது

சரி மிக நெருக்கமான நண்பரும் போய்விட்டார்

“என்ன காரணம்?” சுரத்தில்லாமல் கேட்டேன்.

“மாரடைப்பு கழுபோவில ஆசுபத்திரிக்குக் கொண்டு செல்கையில் மரணமானார்”

நண்பரின் குரலில் சோகம் தொனித்தது

“பத்” என நான் உரிமையோடு மிக நெருக்கமாக அழைக்கும் பத்மநாதன் பற்றிய ஞாபகங்கள் மனதில் படமென ஓடின

1961 ஆம் ஆண்டில் முதன் முறையாக மட்டக்களப்பிலிருந்து பேராதனைப்பல்கலைகழகத்துக்கு ஒன்பது மாணவர்கள் மட்டக்களப்பின் பல பாடசாலைகளிலுமிருந்தும் தெரிவாகியிருந்தனர். அந்த அளவு தொகையினர் மட்டக்களப்பில் தெரிவாகியமை அதுவே முதற்தடவை

மட்டக்களப்பு மகிழ்ந்துபோய் இருந்தது

அனைவரையும் மட்டக்களப்பு மக்கள் மகிழ்ச்சிகரமாகக் கையசைத்து மட்டக்களப்பு புகையிரத நிலையத்தில் பேராதனைப் பல்கலைக்ழகத்திற்கு அனுப்பி வைத்தனர்

அம்மாணவர்களுள் நானும் ஒருவன். நண்பர் பத்மநாதனும் ஒருவர்.

கண் விழிக்காத பூனைக்குட்டிகளாக இருவரும் புகையிரத வண்டியினுள்.

ஒன்றாக இருவரும் பிரயாணம். அருகருகே அமர்ந்து பிரயாணம் செய்கிறோம்.

பேராதனைப்பல்கலைக் கழகத்துள் ஒன்றாகக் காலடி எடுத்து வைக்கிறோம்

ஒருவருடகாலம் ஒன்றாக ஒரே அறையில் தங்குகிறோம்.

முதலாம் வருடத்தில் ஒரே வகுப்பில் பயில்கிறோம்.

முதலாம் வருடத்தில் இருவரும் தமிழ், வரலாறு பொருளியல் ஆகியபாட விரிவுரைகளுக்கு, காலையில் கலகா வீதியில் கதைத்தபடி ஒன்றாகவே செல்கிறோம்.

நானோ கிராமத்தவன் கிராமத்திற்குரிய வெகுளித்தனம், அறியாமை, அசாத்திய துணிவு நெளிவு சுழிவின்மை என்பன என்னிடம் இருந்தன.

பதம்நாதனோ நகரத்தவர் நகரத்தாருக்குரிய நடைமுறைத்தன்மை, என்னைவிடக் கூடுதலான உலக ஞானம்



மத்தியதரவர்க்கத் தயக்கம், நெழிவுசுழிவு என்பன அவரிடம் இருந்தன.

இவ்வகையில் பலவற்றையும் அறிந்து வந்து சொல்லும் எம்மை வழிப்படுத்தும் தகவலாளராக அவர் எனக்குத் தெரிந்தார்.

அவரிடம் காணப்பட்ட உண்மை நேர்மை மனிதாபிமானம் மற்றவரை மதிக்கும் தன்மை என்ற குணாதிசயங்கள் அவர்பால் என்னை ஈர்த்தன.

நான் எழுதும் கவிதை கட்டுரைகளை அவரிடம் படிக்கக்கொடுப்பேன். படிப்பார், ரசிப்பார் ஆலோசனைகள் கூறுவார்.

என்னை எழுத ஊக்குவித்தவர்களுள் முக்கியமான ஒருவர் பத்மநாதன்

அவருக்கு அப்போது நவீன தமிழ் இலக்கியங்களில் பரிட்சயமின்மையினால் எனக்கு ஊக்குவிப்புக் கிடைத்ததேயொழிய வழி காட்டல் கிடைக்கவில்லை

என்னிடம் இல்லாத சில திறமைகளை அவரிடம் நான் கண்டேன். தன்னிடம் இல்லாத சில திறமைகள் என்னிடம் இருப்பதாக அவர் என்னிடம் கூறுவார்

ஓர் அறையில் இருவரும் இருந்தாலும் காலப்போக்கில் அவர் தனக்குத் தோதான, தன் கொள்கைகளுக்கு உடன்பாடான நண்பர்களைக் கண்டுபிடித்தார்.

நான் எனக்குத் தோதான என் கொள்கைகளுக்கு உடன்பாடான நண்பர்களைக் கண்டுபிடித்தேன்

அவர் ஜேர்மன் மொழி பிரான்சிய மொழி எனத் தேடிசென்று கற்கத்தொடங்கினார். அதற்கான வாய்ப்புகள் அன்று பல்கலைக்ழகத்தில் இருந்தன அவர் பெட்மின்டன் ஆடச்சென்றதாகவும் ஞாபகம்.

நான் கவிதை, நாடகம், இலக்கியக் கூட்டங்கள் பின்தங்கிய மலையக மக்களின் பிள்ளைகளுக்கு வகுப்புகள் எனத் திரியத் தொடங்கினேன். கூத்தும் ஆடத் தொடங்கினேன்.

சோசலிஸ மாணவர் சங்கத்திற்கு நான் போகத் தொடங்கினேன். அவரையும் வரும்படி அழைத்தேன்.

அச்சங்கம் பற்றி அவர் அறிந்திருந்தார் ஆனால் வருவதில் அக்கறை காட்டவில்லை. அதன் சாதக பாதக அம்சங்கள் அறிந்தவர் அவர்.

மெல்ல மெல்ல இருவர் பாதைகளும் வேறாகின. இருவர் கொள்கைகளும் வேறாகின எனினும் பரஸ்பர அன்பும் மதிப்பும் தொடர்ந்தன.

ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டோம் மதித்தும் கொண்டோம்.

பேராசிரியர் வித்தியானந்தன் இருவரையும் இணைக்கும் மையப்புள்ளியானார்.

பல்கலைக் கழக வாழ்க்கை முடிந்தது.

அவர் பொதுப்பட்டதாரியாக 1964 இல் வெளியேறினார். நான் சிறப்புப்பட்டதாரியாக 1965 இல் வெளியேறினேன். சமூக வாழ்வினுள் நுழைந்தோம்.

இருவரும் பாடசாலைகளில் பகுதி நேர ஆசிரியரானோம்

இருவரும் முன் பின்னாக புனித மைக்கல் கல்லூரியில் உயர்தர வகுப்பு மாணவர்களுக்குக் கற்பித்திருக்கிறோம்.

நிரந்தரமான வேலை கிடைக்காத இளம் பருவம் அது. இருவருமாக வேலை தேடினோம். வேலை இன்மையின் கொடுமையை அனுபவித்தோம். துயரத்தைப் பகிர்ந்துகொண்டோம். இருவருமாக நிர்வாக சேவை பரீட்சை எழுதினோம்.

ஒன்றாகவே கொழும்புசென்றோம். ஒரு வீட்டில் தங்கினோம் பரீட்சை முடிவுகள் வந்தன .இருவரும் சித்தியடைந்திருந்தோம்.

நேர்முகப்பரீட்சைக்காக இருவரும் கொழும்புக்கு ஒன்றாகவே புகை வண்டியில் சென்றோம். ஒரே வீட்டில் தங்கி ஒன்றாகவே ஒரே நாளில் நிர்வாக நேர்முகப்பரீட்சையை எதிர் கொண்டோம். அவர் தெரிவானர். நான் தெரிவு செய்யப்படவில்லை.

“நிர்வாக சேவை பரீட்சையில் சித்தியடைந்து பெரிய அதிகாரியானால் மந்திரிமாரின் கார் கதவு திறக்கும் பியோனகத்தான் இருக்க வேண்டி வரும்” என நான் அப்போது அவரிடம் பகிடியாகக் கூறியதை அவர் சிரிப்போடு எதிர்கொண்டார்”.

அந்தச் சிரிப்பின் அர்த்தம் “போடா பிழைக்கத் தெரியாத பேயா” என்பதை நான் பின்னர்தான் அறிந்து கொண்டேன். அவர் நடைமுறை வாதி. என்னையும் அன்றைய என் கொள்கைகளையும் நன்கு அறிந்தவர், என்னை நன்கு புரிந்தவர். அவர் அரச அதிகாரியானார். நான் பாடசலையில் பட்டதாரி ஆசிரியரானேன்.

என்னைவிட இரு வயது மூத்தவர் அவர். அவர் தனது நிர்வாக சேவையில் பரீட்சைகள் எடுத்து முன்னேறினார். நான் எனது கல்வித்துறையில் பரீட்சைகள் எடுத்துப்பட்டங்கள் பெற்றேன். அவர் அரசின் அதி உயர்பதவிகளைப் பெற்றார்.

மட்டக்களப்பிலும் திரிகோணமலையிலும் மேலதிக அரசாங்க அதிபராகவும், வனத்துறை சூழல் பாதுகாப்பு அமைச்சின் செயலளராகவும் விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சின் செயளாராகவும் பொது நிதித் திணைக்களத்தின் மேலதிகப்பணிப்பாளர் நாயகமாகவும் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் செயலாளராகவும் வடக்குக் கிழக்கு மாகாணசபையின் செயலளராகவும் மறு சீரமைப்பு அமைச்சின் செயலளராகவும் மக்கள் மறுசீரமைப்புச் சபையின் செயலாளராகவும் திறைசேரியின் துணைச் செயலாளராகவும் அதி உயர் நிர்வாகிப்பதவிகளை அரசாங்கத்தில் வகித்து ஓய்வு பெற்றார்.

ஓய்வு பெற்றபின்னரும் அவர் பல பொதுப்பணிகளில் ஈடுபட்டார். ஓய்வாக இருப்பது எப்படி என அறியாதவர் அவர் இறுதியாக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பேரவை உறுப்பினராக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டார்.

அவர் துறையில் அவர் பிரயாணம் செய்து கொண்டிருந்தார்.

என் துறையில் நான் பிரயானம் செய்துகொண்டிருந்தேன்.

ஒட்டாமல் இந்த இரண்டு தண்டவாளங்களும் சமாந்திரமாகத் தத்தம் பாதையில் ஓடி வந்து கொண்டே இருந்தன. இடைக்கிடை ஒட்டியும் கொண்டன. இதனை நாம் இருவரும் சந்திக்கும்போது சுவராஸ்யமாக உரையாடிக்கொள்வோம்.

நான் கலைப்பீடாதிபதியாக இருந்தபோது நாம் நடத்திய உலகநாடக தின விழாவுக்கு நான் அவரையும் அவர் மனைவியையும் பிரதம விருந்தினராக அழைத்திருந்தேன்

அன்றைய நிகழ்வுகளுக்கு நானே தலைமை தாங்கினேன். அவர் பிரதம விருந்தினர் உரை ஆற்றினார்.

அவருக்கும் எனக்குமான இணைப்பும் பிரிப்புமான இந்த அற்புத உறவு பற்றி 2002 ஆம் ஆண்டில் இருவரும் மேடையில் மனம் திறந்து உரையாற்றிக்கொண்டோம்.

நண்பரே நட்பு அற்புதமானது. புரிந்துணர்வு மிக்க நட்பு அதனிலும் அற்புதமானது வாழ்வில் நண்பர்கள் பல திக்குகளிலுமிருந்து வந்து இணைகிறார்கள். ஒன்றாக ஓடி வருகிறார்கள், பிரிகிறார்கள். சமாந்திரமாக ஓடும் ரயில் தண்டவாளம் போல இணையாமல் ஒன்றையொன்று பார்த்தபடி அருகருகே ஓடி வருகிறார்கள். சில புள்ளிகளில் இணைகிறார்கள்.

பிரிகிறார்கள் பின் காட்சிப்புலத்திலிருந்து மறைகிறர்கள்

என்னுடன் சமாந்திரமாகவும் இணைந்தும் பிணைந்தும் பிரிந்தும் ஓடிய “பத்” என நாம் அழைக்கும் அந்தத் தண்டவாளம் அதோ அங்கே நின்று விட்டது. அதனோடு ஓடி வந்த இந்த தண்டவாளம் இன்னும் ஓடுகிறது.

சக்தியுள்ள மட்டும் இதுவும் ஓடும் பின்னர் இதுவும் நின்று போகும்.

இதனோடு இணைந்து ஓடிய இன்னொரு தண்டவாளம் தொடர்ந்து ஓடும்.

இதுவே கால நியதி. ஓடுகின்ற இத் தனித் தண்டவாளம் உன் நினைவுகளை சுமந்த வண்ணம் தன் ஓட்டத்தை நிறுத்தும் வரை ஓடும்.

புரிந்துணர்வு மிக்க என் இனிய நண்பனே “பத்” சென்று வா

நான் தனியே ஓடிக்கொண்டிருக்கிறேன்

# வடபுலத்து பெண்ணின் பார்வையில் மட்டக்களப்பார்...

## மட்டுநகர் மண்ணைத்தொட்டு 04

-- தமிழ்க்கவி --



துவக்கு கட்டுறதும், போறவாற வழியில மறிக்கிற நாய்க்கு வாய் கட்டுறதும் வழமையான செயலாக வைச்சிருக்கிற மந்திரவாதியோட நாங்கள் எச்சரிக்கையாத்தான் பிழங்கிறம். ஆனா அவரப்போல ஒரு மோடன் செய்த படான் வேலை ஒண்டிருக்கு.

ஏங்கட ஊரில ஒரு ஆசாரி இருந்தார். அவருக்கு கலியாணம் நடந்தது மட்டக்களப்பிலதான். அவவும் ஒரு ஆசாரிக் குடும்பந்தான். அண்ணாமலை ஆசாரியை வழிவழியா தென்னிந்தியாவால வந்தவர் எண்டும் சொல்லுறவை. ஆனா அப்பிடியில்லையாம். அவர் தன்ர ஆசாரித் தொழிலில விற்பன்னம் பெற, மாமல்லபுரத்தில அஞ்சு வருசம் ஒரு குருவுக்கு கீழ படிச்சவராம். ஆளுக்கு வாலாயமான சிற்ப வேலையோட நல்லா பாட்டும் பாடுவார். காது குளிரக் கேக்கலாம். மனம் உருகிப்பாடினா கல்லுங்கரையும்.



அவர் கலியாணஞ் செய்து கொண்டு வந்த பொம்பிளை பெரிய அழகியில்லைத்தான். முன்னம்பல்லுகள் மூண்டு வாய்க்கு வெளியாலதான் நிக்கும். ஆனாயென்ன அண்ணாமலையர் ஓரளவுக்கு அழகன்தான் எண்டாலும், இந்தப் பொம்பிளை முறைக்காறியாம். ஏதோ விட்டுப்போன உறவெண்டு சொல்லி அவற்ற மாமன்தான் செய்து வச்சானாம்.

கோயில் வேலையள் எண்டு திரியிறதால லொறி டிறைவர்மார்மாதிரி போற வாற இடத்தில அப்பிடி இப்பிடித்தான், சேறுகண்ட இடத்தை மிதிச்சு தண்ணிகண்ட இடத்தை கழுவிறதுதான். ஆசாரிமார் கோயிலுக்கு பூசைகட்டுற ஐயர்மாருக்கும் மேலான சாதிதான்.

ஆனா என்ன உந்த பொம்பிள விசயத்தில அந்தக்காலம் முதல் இந்தக்காலம் வரை பெண்டுகள "மொடலா" வைச்சு படம் வரையவும், சிற்பஞ் செதுக்கவும் திரியிறதால, ஊரவை இதுகளப்பத்தி பெரிசா அக்கறை எடுக்கிறதில்லை. ஆனா அண்ணாமலையருக்கு பிள்ளையளும் ரெண்டு பிறந்த பிறகுதான் சபலம். ஒரு ஆட்டக்காறிக்குப் பின்னால பாட்டுப்பாடுறதில மெய்மறந்து திரிஞ்சார். கலையைக் கலை தெரிஞ்சவையும் கற்றவனைக் கற்றவனும் காமுறுகிறது இயற்கை. ஆனா விதி விடவேணுமே. ஆரோ பொறாமைப் பிடிச்சவன் அவருக்கு குரல் கட்டிப்போட்டான்.

அந்தாள் செய்யாத வைத்தியமில்லை கடைசியா கம்மிப்போன குரல்லதான் சாகுந்தனைக்கும் பேசிக் கொண்டிருந்தது. கோயிலுகளுக்கு சிற்பம் செதுக்கிறதையே விட்டிட்டு வாழ்க்கைக்காக அம்மி குழவி ஆட்டுக்கல் உரல் எண்டு அடிச்ச கொடுமையும் நடந்துது. அஞ்சாறு வரியத்தில செத்தும் போனார். பிறகுதான் மெள்ளமெள்ளக் கதை வெளிச்சது. அவற்ற மனிசிதான் மட்டக்களப்பால ஆளெடுப்பிச்சு இதை செய்ததெண்டு; கடைசியா என்ன அவரைப்போலவே இனிமையாப்பாடக்கூடிய மகன்மார் வளர்ந்து இளந்தாரியளாகி, ஒருவன் கூட சிற்பத்தை தொழிலாக் கொள்ளாமல். ஒருவன் நோயிலமாண்டான். மற்றவன் கலியாணமே செய்யாமல் தத்தாரியா திரியிறான்.

அடுத்தவன் இசைக்குழுக்களில சேர்ந்து பாடினான். இப்ப அவனும் அலையிறான். இவனுகளும் வழிவிட்டுப்போகக் கூடாதெண்டு மட்டக்களப்பு பெட்டையளத்தான் கட்டினவங்கள். அதிலயும் ஒருதன் தூங்கிச் செத்தான்.; மனிசிக்காறியும் பாத்தெடுக்க ஆளில்லாம பரலோகம் போட்டா. ஊரில சொல்லுங்கள் தெய்வம் நிண்டு கொல்லுமெண்டு.

வடபகுதியில வாழுறவை இதுகளை நெச்சுத்தான் மட்டக்களப்பாரெண்டா பின்வாங்கிறது. ஆனா மட்டக்களப்பு சனத்தோட நீங்க பிழங்கிப்பாருங்க, அண்ணந்தம்பிகூட அப்பிடிப் பிழங்க மாட்டாங்கள்.

திண்ட சோத்தை கக்கியுங் குடுக்குங்கள். பாப்பு எண்டொரு பிள்ளை நான் பிறகு பிறகு திருக்குறள் படிக்கயுக்க எனக்கு ஒரு குறலில விளக்கங்கேட்டா, சட்டெண்டு நினைவுக்கு வாற குறளும், ஆளும் பாப்புதான்.

" உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு" பாப்பு எனக்கு அப்பிடித்தான், நான் நினைக்க அவளுக்கு பிரக்கடிக்கும். அவள் நினைக்க எனக்கு இருமல் வரும். இது எப்பிடியெண்டு கேளாதையுங்கோ, இன்னும் விஞ்ஞானம் கண்டுபிடிக்கவேண்டிய விசயங்களில இதையுஞ் சேத்து விடுங்க, ஒரு காலத்தில சிறிமா அம்மையாரிட வாய்க்கரிசித்திட்டம் எண்ட அரைக்கொத்தரிசித்திட்டம் வந்துதெல்லோ, அப்பைக்க மனிசர் சாப்பாட்டுக்கு அலைஞ்ச அலைச்சல சொன்னாலும் அழுகைவரும்; கேட்டாலும் அழுகைவரும்.

என்ர மனிசன் ஊரைவிட்டே ஓடிற்றுது. நானும் பிள்ளையளும் கொலைப்பட்டினி. பாப்பு தன்ர வீட்டில செய்யிற மரவள்ளிக்கிழங்கையும் பசுமாட்டுப்பாலையும் கொண்டுவந்து என்ர பிள்ளையளுக்கு குடுப்பாள்.

உடுத்தத்துணியிருக்காது அவளின்ர சேலையத்தான் நான் கூப்பனரிசிக்குப் போகேக்கயும், ஆசுப்பத்திரிக்குப் போகவேண்டி வந்தாலும் கட்டுவன். என்ன அவளின்ர புருசன் ஒரு மில் வைச்சிருந்தான். கூடவே தோட்டமும் செய்தான். அவன்ர தோட்டத்தில எனக்கு வேலையும் அவள்தான் வாங்கித்தந்தவள்.

அந்த நேரம் ஆரெட்டயும் காசில்லை. உழைக்கிற காசெல்லாம் கள்ள விலைக்கு அரிசி வாங்கவும் சோளன் மாவு வாங்கவுமே பத்தாது. கடையில போய் வெறுங் "காட்டா" வாங்கிலும் பத்திச்சேம் வேணும். அதையும் ஒரு பேரீச்சம்பழத்தைக் கடிச்சுக் கொண்டோ, தேங்காச்சொட்டைக் கடிச்சிக்கொண்டோ குடிச்சாத்தான் ஒளுப்பம் ஆயாசந்தீரும். சீமாட்டி ஒரு ஆயிரங்கண்டுத்தறைக்க மரவள்ளி போட்டு வச்சிருந்தாள். அதுதான் என்ர பிள்ளையளயும் இன்னும் சில அயலுக்க இருந்த சனத்தையுங் காப்பாத்திச்சு. சாதாரணமா பத்திச்சேம் ஒரு றாத்தல் மரவள்ளிக்கிழங்கு. அரைக் கொத்தரிசித்திட்டம் வந்த ஒடன அதின்ர விலை றாத்தல் எம்பேசேம் அளவுக்கு போச்சுது.

பாப்புவை மட்டக்களப்பாள் எண்டு அவயட மாமன் மாமியே சேக்கிறேல்ல. அவள் எங்க சுத்தினாலும் என்னோடதான். நாங்கள் வத்துக் குளத்துக்கு மீன்வாரப்போவம் கச்சலும் கெழிறும் கெதிச்சுக் கிடக்கும். கொண்டுவந்து கச்சிலை கிள்ளிக்கழுவிப்போட்டு பொத்தமளகாய் போட்டு எலுமிச்சம் புளி விட்டு எப்பன் மஞ்சளும் போட்டு தீச்சா...ச்சை. கெழுறு அவ்வளவும் குழம்புதான். குளக்கட்டுக்குக் கீழ கருவப்பிலை மரமிருக்கு மாடுகள் ஒடேக்க தட்டுப்பட்டாலும் கமகமக்கும்; அதில ரெண்டு நெட்டை உருவிப்போட்டு உப்புப்புளி சேத்து குழம்பு வச்சிட்டு, கொஞ்சத்தை பொரிப்பம், பனையறிமீன் கனக்க ஆனா அதை அள்ள மாட்டம் வத்துக்குளத்து மீனில அண்டில் பிடிச்சிருக்கும்.

அதேபோல குளத்துக்கு குளிக்கப்போவம். சும்மா விளாங்காடு



வழிய அலைவம். எனக்கு நல்லா மரமேறத்தெரியும், அவள்தான் பொறக்குவாள் நான் ஆஞ்சு போடுவன் விழாங்காயக் கொணந்து தட்டி வெடிக்கப்பண்ணி ஊறப்போடுவம் அல்லது நறுவிலிப்பழம் சேத்து ரெண்டு கொச்சிக்காய் உப்பெல்லாம் சேத்து உரல்ல போட்டுத்துவைப்பம். பாப்பூ பாப்பூ என்ன ருசியடி. எல்லாப்பக்குவமும் அவள்தான். ஒண்டை விட்டிட்டன். பாட்டுக்குப்பாட்டு அவளுந்நானும் துவங்கினா. ஒரு அப்பனாலயும் வெல்லேலா.. பாப்புவுக்கு நல்லா நொடி போடத்தெரியும் போடுற நொடியே ஒரு கதையா வரும்.

"பட்டிக்காட்டுப் பொண்ணை கொண்டு வந்து அவ பாவாடைய அவுத்து பருப்பக்கிள்ளி, வெயிலாப்பாத்து படுக்கப்போட்டா அடுப்படிக்கயே கிடப்பா"

"ச்சீக் உதென்ன நொடி தூ சணம்மாதிரி" எண்டு நான் பேசினா சிரிப்பாள்.

" மறுகா மாத்து நொடி போடு அவுத்து குடுக்கிறன்" என்பாள். அப்ப எங்கட வன்னி யாழ்ப்பாணத்து நொடியள் கைமாறும்.

"நெத்திக்கு நேரான கொழுந்தனாரே நீரோடும் தாரைய அடைச்சா நீ மேல நான் கீழ"

"அப்ப இதென்னடி இதில தூசணம் இல்லையோ" கிடையவே கிடையாது. பண்பாடு பழக்கவழக்கம் எல்லாத்தை கலைச்சுப்போட்டு கலந்து போட்டு, எங்களோடு வாழ்ந்தவள் பாப்பு அவள் கனநாளா பிள்ளையில்லாம இருந்தவள் எங்கட பாட்டிதான் ஏதோ தமிழ் மருந்து சூரணஞ்செய்து நாப்பத்தெட்டு நாளா புருசன் பெஞ்சாதி ரெண்டு பேருமா விடியக்காலம வெறுவயித்தில சாப்பிட்டவை. ஆறுமாசத்துக்க முழுக்கு நிண்டிட்டுது எண்டாள். அவளுடைய புருசனை விட நான்தான் சந்தோசப்பட்டன். அவளுக்கு ஆம்பிளைப்பிள்ளை பிறந்துது. எங்கட பாட்டியை அவள் வாழ்த்தாத நாளே கிடையாது.

ஆனா கடவுளிட சோதனையா அவளின்ர புருசன் வேற கலியாணம் முடிச்சிருந்தான் எண்ட செய்தியும், அங்க அவனுக்கு ரெண்டு பிள்ளையள் சுன்னாகத்தில இருக்கிறதாயும் அவள் கேள்விப்பட்டதுதான். அவளின்ர வாழ்க்கையில பெரிய இடியா இறங்கீட்டுது. ஆருக்கும் சொல்லாம ஒருநாள் தமையன்காறனுக்கு கடுதாசி போட்டு அவனை வரவைச்சு, அண்டைக்கிரவே அவனோட பிள்ளையையும் தூக்கிக்கொண்டு போயிட்டாள். நடுச்சாமம் போல கடவைக்க வந்து நிண்டு, அவள் அழுத அழுகையும் நானழுத அழுகையும், முட்டையிட்ட ஆக்காட்டியின்ர அழுகைபோல. முடிஞ்சு போன நட்பும் "ஆக்காட்டி ஆக்காட்டீ.... எங்கெங்கே முட்டையிட்டாய்...."

அரங்கம் Fm



இணைய வானொலி

இணைய முகவரி:

www.arangamnews.com

www.arangamfm.com



# நீலாசோதையன் வழிபாடு

-- விஜய் --



ஈழத்தில் பெரியதம்பிரான் ஆலயங்களிலே பெரியதம்பிரான் தெய்வத்தோடு நீலாசோதையன் தெய்வத்தையும் இணைத்து வழிபாடு இயற்றப்படுவதே மரபு. நீலாசோதையன் பெரியதம்பிரான் போல் வணங்கப்படும் தெய்வமாகும்.

இரா.வை.கனகரத்தினம் அவர்கள், "பெரியதம்பிரான் ஆலயங்களிலே பெரியதம்பிரான் தெய்வத்தோடு நீலாசோதையன் தெய்வமும் இணைந்து வழிபாடு இயற்றப்படும். ஈழநாட்டின் வடபகுதியிலும் பெரியதம்பிரான் ஆலயங்களில் நீலாசோதையன் சிறப்பான முறையில் போற்றப்பட்ட பொழுதும் நீலாசோதையன் என்னும் தெய்வத்தின் தோற்றம்பற்றி அறிவது மிகுந்த சிரமம். இத்தெய்வம் பற்றிய மரபுக்கதையினை அங்குள்ளவர்கள் அறிந்திருப்பது போல் தெரியவில்லை. மட்டக்களப்பு பிரதேச மக்கள், இத்தெய்வத்தின் தோற்றம் பற்றி கதையாகவும் காவியமாகவும் சொல்லக்கூடியவர்களாக இருக்கின்றனர்." எனக்குறிப்பிட்டுள்ளார்.

சாவகச்சேரி நகரின் தென் பகுதியிலுள்ள மறவன்புலோக் கிராமத்தில் நித்தர்புலம் என அழைக்கப்படும் பகுயில் அமைந்துள்ள பெரியதம்பிரான் ஆலயம் நீலசோதி பெரியதம்பிரான் ஆலயம் என்றே அழைக்கப்படுகிறது. நீலசோதி, நீலசோதையனைக் குறிப்பதாக இருக்கலாம். மல்லாகம் பெரியதம்பிரான் கோவில், நீலியம்மனை பெரியதம்பிரான் எனக்குறிப்படப்பட்டுள்ளது. மட்டக்களப்பு புன்னைச்சோலை பத்திரகாளியம்மன் ஆலயத்தின் பரிவார தெய்வங்களில் ஒன்றாக நீலாசோதையன் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு நீலாசோதையானுக்கு தனிக்கோயில் உண்டு.

நீலசோதையன் பற்றிய குறிப்பு "கோணேசர்கல்வெட்டு" எனும் நூலிலும் இடம்பெற்றுள்ளது. கோணேசர்கல்வெட்டின் 28 ஆம் பாடல்,

"எட்டிசை மண்வெட்டிக் கொண்டே
ஏழரைச்சுற்றாம் மரத்தை இனதாவெட்டி

தட்டி ஒரு காலாலே எற்றி அது வீழ
முன்னம் தரணிமீதில்

ஒட்டி ஒரு குளம் சமைத்து ஆங்கு
உறுநீரும் கொண்டு அருளையுற்ற வீரன்

அட்டதிக்கும் புகழ்ந்தருளும்
நீலாசோதையன் படையும் அரசர்மாரும்"

என அமைந்துள்ளது. இதற்கான பொருள் விளக்கத்தில், "குளத்திற்காக காவல் இருக்கும் தெய்வம் நீலாசோதையன்" என தரப்பட்டுள்ளது. எனினும் பாடலில், "குளம் சமைத்து ஆங்கு உறுநீரும் கொண்டு அருளையுற்ற வீரன், நீலாசோதையன் படையும் அரசர்மாரும்" என்றே கூறப்பட்டுள்ளது.

நீலாசோதையன் காவியத்தில், நீலாசோதையன் பற்றி விபரிக்கப்பட்டுள்ளது. "நீலாசோதையனின் தாயார் யசோதை. நீலாசோதையனும் பெரியதம்பிரானும் ஒரே ராசியில், ஒரே நட்சத்திரத்தில் பிறந்தவர்கள். ஆகவே இருவரும் ஒரே குணத்தை உடையவர்கள். பெரியதம்பிரானுக்கு என்ன நடக்குமோ அதெல்லாம் நீலாசோதையனுக்கும் நடக்கும். பெரியதம்பிரானின் 1000 துலாம் கோடி கொண்ட தண்டாயுதத்தினை, நீலாசோதையன் நொடிப் பொழுதில் தூ க்கியதைக் கண்ட பெரியதம்பிரான், தன்னையொத்த வல்லமை கொண்ட நீலாசோதையனை அரண்மனைக்கு அழைத்துச்சென்று அவரைத் தன் மந்திரியாக நியமித்துக் கொண்டார்." என இது குறித்து இரா. வை. கனகரெத்தினம் விபரித்திருக்கிறார்.

நீலாசோதையன் காவியத்தில், வலவை நகரை பெரியதம்பிரான் அரசராகவும், நீலாசோதையன் அமைச்சராகவும் இருந்து ஆட்சி புரிந்தமை, பாண்டிய அரசன் ஆறாயிரம் பேரை சிறைப்பிடித்துச் சென்றமையை அறிந்து பாண்டி நாட்டுக்குச் சென்று பாண்டியனை பயமுறுத்தி, சிறைப்பிடித்துச் சென்ற ஆறாயிரம் பேருடன் மேலும் ஆறாயிரம் பேரையும் திறைகளையும் திரவியங்களையும் பெற்று வந்தமை பற்றி விபரிக்கப்பட்டுள்ளது. அத்துடன், தென்னிந்தியாவிலிருந்து வந்த பிராமணனை நீலாசோதையன் பிடித்தமையும் நீலாசோதையன் முதன் மந்திரியாக்கப்பட்டமையும் விபரிக்கப்பட்டுள்ளது.

நீலாசோதையன் மற்றும் பெரியதம்பிரான் பற்றிய மற்றொரு மரபுக்கதையானது, பாண்டிய மன்னன் இங்கு வந்து ஆறாயிரம் பேரைச் சிறைபிடித்தச் சென்றதை அறிந்து, அவர்கள் இருவரும் பாண்டியனின் பதியை அடைந்து, பாண்டியன் முன் தங்கள் பலத்தைக் காட்டி, பாண்டியனை அஞ்சி நடுங்கச் செய்து, பாண்டியன் பிடித்துச் சென்ற ஆறாயிரம் கைதிகளோடு மேலும் ஆறாயிரம் கைதிகளையும் பெற்றுக் கொண்டு நாடு திரும்பினர். நாட்டைச் சிறப்பாக ஆட்சி செய்து நீண்ட காலம் வாழ்ந்து, சிவப்பேறு அடைந்தனர் என அமைகிறது. பன்னீராயிரம் பேரும் கைதிகள் எனவும் படை வீரர்கள் எனவும் குறிப்பிடப்படுகிறது.

மற்றொரு மரபுக்கதையானது, தென்திசையிலிருந்து இலங்கை வந்த பிராமணன், "தன் நாட்டை வண்ணான் ஆள்வதைக்கண்டு பொறுக்க முடியாதவனாகி ஆத்திரமுற்று



அவர்களை அழிக்கப் பேய், காளி முதலான தேவைதைகள் பலவற்றை அனுப்பிவைத்தான்" எனவும் நீலாசோதையன் பார்ப்பனையும் அவன் அனுப்பிய பேய், காளிகளையும் அழித்தான் எனவும் கூறுகிறது. "பார்ப்பணனிடமிருந்து தன் நாட்டைக் காப்பாற்றியமையையிட்டு, நீலாசோதையனை என்றும் தனக்குச் சமமானவராகக் கருதி தன் முதல் மந்திரியாக வைத்திருந்து நாட்டில் எல்லா மக்களுக்கும் எல்லாம் கிடைக்கும் வகையில் சிறப்புடன் ஆட்சி பரிபாலனம் செய்து வந்தார்" எனவும் கூறுகிறது.

பெரியதம்பிரான் மற்றும் நீலாசோதையன் தொடர்பில் மக்கள் மத்தியில் புழக்கத்திலுள்ள மரபுக்கதைகள், காவியங்கள், சிற்றிலக்கியங்கள் போன்றன பெரியதம்பிரானை வலவை நகர அரசன் எனவும் பெரியதம்பிரானுடன் இணைந்துள்ள நீலாசோதையனை பெரியதம்பிரானின் அமைச்சன் எனவும் குறிப்பிடுவது மிகைப்படுத்தப்பட்ட ஒன்றாகத் தோன்றலாம். ஆயினும் கிராமியத் தெய்வங்கள் தொடர்பில் அத்தெய்வங்களுடைய சமூகப்பரிமாணாம் – சமூகப்பெறுமானம் முக்கியமானதாக அமைவதனால், அவ்வாறு கருதி ஆய்வு செய்வது முக்கியமானதொன்றாக அமையும் என்றே கருதவேண்டியுள்ளது.

அதேவேளை, குலதெய்வம் பற்றிய அறிஞர்கள் கருத்தானது, "ஒரு குறிப்பிட்ட மூதாதையரின் மரபின் வழிவந்தவர்கள், அவர்களுடைய முன்னோர்களில் சிறந்து விளங்கியவர்களை வணங்கும் வழக்கத்தினை கொண்டுள்ளார்கள். இந்த வழிபாடு முறைக்கு குலதெய்வ வழிபாடு என்று பெயர்" என அமைகிறது, எனவே குலதெய்வங்களாக அமையும் இத்தெய்வங்கள் பற்றி சமூக - மானிடவியல் நோக்கில் ஆய்வு செய்வது அவசியமாகும். இத்தகைய ஆய்வு மூலம் பல சமூக விடயங்களை இனங்கண்டு கொள்ள முடியும்.

கிழக்கிலங்கையில் சோதையன் பற்றிய பெயர்; சோதையன்கட்டு, சோதையன்குளம் எனப்பரவலாகப் பயன்பாட்டிலுள்ளது. சோதையன் எனும் பெயர் வழியாக நீலாசோதையன் எனும் பெயர் உருவாகியிருக்காலம்.

கிழக்கில், சோதையன் என்பவர்கள், பண்டைக் காலத்தில் பாரிய குளங்களை அமைத்த ஒரு குடியினர் என்ற கருத்து வழக்கிலுண்டு. தொழில் நுட்பம் வளர்ச்சி பெற்றிராத பண்டைக்காலத்தில், மனித – பௌதிக வளங்களை ஒன்று சேர்த்து பாரிய கட்டுமானங்களை அமைத்த குடியினர் அல்லது குடித்தலைவன் சோதையன் என்ற கருத்தும் முன்வைக்கப்படுகிறது.

மட்டக்களப்பின் பண்டைக்கால குளம், கோவில் மற்றும் குடியிருப்புக்களை அமைத்த குடித்தலைவனாக சோதையனைக் கொள்ளலாமா? என்பது ஆய்வின் வழியாகவே நிருபணம் செய்யப்படவேண்டும்.

## ஓய்வு பெறும் அதிபர்

30 வருட கல்விச் சேவையிலிருந்து அட்டப்பள்ளம் விநாயகர் வித்தியாலய அதிபர் நாகப்பன் இராசையா கடந்த சனிக்கிழமை (10) ஓய்வுபெற்றார். காரைதீவைச் சேர்ந்த திரு. இராசையா மேற்படி பாடசாலையில் 16 வருடங்கள் அதிபராகவிருந்து, அதன் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டார்.

வெள்ளியன்று(9) அவரது 60வது பிறந்ததினத்தையும் ஓய்வுபெறுவதையும் முன்னிட்டு பாடசாலையில் புதிய அதிபர் எஸ்.ரகுநாதன் தலைமையில் உணர்வுபூர்வமான நன்றி கூறி வழியனுப்பு விழா நடைபெற்றது.







30வருட கல்விச்சேவையிலிருந்து இராசையா ஓய்வு!

# மனித பண்பாட்டின் மடியில் கைவைக்கும் ஊடகங்கள்

## இது ஒரு ஊடக வன்முறை

-- யோகநாதன் ஜகேன் --



கிளித்தட்டு

கலாசாரம் என்பது நாம் சிந்தனை செய்கின்ற முறையும் அவை செயல்வடிவம் பெறும் விதமுமாகும். நாம் தனிமனிதர்களாக மட்டுமன்றி பிறரோடு கொண்டுள்ள உறவுமுறைகள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், வழிபாடுகள், தொழில்கள் நடை, உடை, பாவனைகள் அனைத்தும் இணைந்ததான வாழ்கை முறையே கலாசாரமாகக் கொள்ளப்படுகின்றன.

இவை கண்டங்கள், நாடுகள், நகரங்கள், பிரதேசங்கள், கிராமங்கள் என மனிதனின் சமூகச் சூழலுக்கும் புவியியல் வேறுபாடுகளுக்கும் ஏற்ப மாறுபடுகின்றன.

இவ்வாறு மாறுபடுகின்ற வாழ்க்கை முறையை முகமலர்ச்சியுடன் சிலாகித்து ஏற்றுக்கொள்ளும்போது பல்வேறு சமூகங்களிடையே சமாதானமான, ஆரோக்கியமான உறவு வளர்கின்றது.

இதனை விடுத்து உடல் உழைப்பினைக்கொண்டு வாழ்க்கைத் தேவைகளை பெற்றுக்கொள்ளாது சுரண்டல்களுடன் வாழ்கின்ற மேல்த்தட்டு வர்க்கத்தினரது கலாசாரந்தான் சிறந்ததென்றும், உடல் உழைப்பு கூலிபெற்று வாழ்பவர்களுடைய கலாசாரம் தாழ்ந்தது என்றதுமான மனநிலை உருவாகுவதும், உருவாக்குவதும் கலாசார வன்முறையின் அடிப்படைகளாகும்.

நாம் ஒரு கலாசாரத்தை சார்ந்திருந்து மற்றொரு கலாசாரத்தை உயர்ந்ததென்றும் அல்லது தாழ்ந்ததென்றும் தீர்மானித்து பேசுவதற்கு எமக்கு உரிமை கிடையாது.

ஆனால் இன்று ஊடகங்கள் இவற்றைத்தான் செய்கின்றன.

அன்றாட வாழ்க்கைத் தேவைக்காக போராடுகின்ற அடித்தட்டு மக்களுடைய கலாசாரங்களை மழுங்கடித்துவிட்டு மேல்த்தட்டு வர்க்கத்தினரின் கலாசாரங்களையும், வாழ்க்கை முறைகளையும் சிறந்ததாகக் காட்டி அவர்களுக்கான சுரண்டலை சாமானிய மக்களிடம் இருந்து பெற்றுக் கொடுக்கும் முகவராக இவ்வூடகங்கள் திகழ்கின்றன.

அதிகாரமும் செல்வாக்கும் உடையவர்களின் கலாசாரங்களினை பிரதிபலிப்பதும் அவை இல்லாதவர்களின் கலாசாரங்களினை மழுங்கடிப்புச் செய்வதும் ஊடாகங்களின் கலாசாரமாக மாறிவிட்டன. காரணம் இவர்களின் கைகளில்தான் ஊடகங்கள் முடங்கிக்கிடக்கின்றன.

கடந்த பத்து வருடங்களின் முன்னர் ஈழத்தமிழர்களால் விமர்சையாகக் கொண்டாடப்பட்ட தைப்பொங்கல் பண்டிகை சமகாலத்தில் தீபாவளி, வருடப்பிறப்பு, காதலர் தினம், ஆசிரியர் தினம் என வெவ்வேறு தினங்கள், பண்டிகைகளின் முன் களை இழந்து செல்கின்றது.

பாரம்பரியமாக சிறார்களும், இளைஞர்களும் யுவதிகளும் வயதானவர்களும் விளையாடிய பழமையான விளையாட்டுக்கள் தற்காலத்தில் சமூகத்தில் இருந்து மறைந்து விட்டன. கிட்டிப்புள்ளு, கபடி, பசுவும் புலியும், ஏணியும் பாம்பும், எல்லெ போன்ற விளையாட்டுக்குப் பதிலாக கிறிக்கட், உதைபந்து, வலைப்பந்து, கூடைப்பந்து நவீன vedio games போன்ற ஊடகங்கள் இலாபமீட்டும் விளையாட்டுக்கள் முக்கியத்துவம்



பெற்றுள்ளன.

சிறார்களுடைய மனச்சோர்வையும், உடற்சோர்வையும்; ஆசுவாசப்படுத்தும் பழமையான விளையாட்டுக்களை மன வேகத்தில் தரவிறக்கம் செய்து விளையாடப்படும் vedio games மறைத்து நிற்பது கலாசாரம் மறையும் வேகத்தை உணர்துகின்றது.

கலைவடிவங்களில் எமக்கே உரித்தான கூத்து வடிவங்களும், நாடகங்களும், இசைப்பாடல்களும், வாழ்தல் முறையுடன் தொடர்புபட்ட வாத்திய இசைகளும், ஓவியங்களும் மேலைத்தேய கலை ஆக்கிரமிப்புக்களின் முன்னால் களையிழுந்து மறைந்து செல்கின்றன.

குறிப்பாக திரைப்படங்கள், சின்னத்திரை நாடகங்கள் ஆண் பெண்களின் ஆடைக்கலாசாரத்தை மாற்றிச் செல்கின்றன.

வடஇந்திய ஆடைக்கலாசாரங்களின் செல்வாக்கு தென்இந்திய மற்றும் இலங்கை ஆடைக்கலாசாரத்தில் அதிக தாக்கத்தை செலுத்துகின்றது. ஒரு குழந்தை பிறந்தது முதற்கொன்டு இறப்பு வரைக்கும் உண்ணும் உணவில் இருந்து உறங்கும் வீடுவரைக்கும் இவ்வாறுதான் இருக்கவேண்டும் என்ற ஒரு விம்பக் கட்டமைப்பை ஊடகங்கள் உருவாக்கியுள்ளன. இன்ப துன்பங்களில்



கட்டப்பந்து

எவ்வாறு சிரிக்கவேண்டும் எவ்வாறு அழவேண்டும் எவ்வாறு சிந்திக்கவேண்டும் என்று ஊடகங்களே மனிதனை தயார் செய்கின்ற நிலை உருவாகின்றது.

கி.பி 2000 ஆம் ஆண்டளவில் இந்திய சமூக ஆய்வாளரான ச.ராஜநாயகம் மேற்கொண்ட ஊடக தாக்கங்கள் தொடர்பான ஆய்வில் வெளியான "தமிழ் இறையியல் களங்கள்", "குடும்ப உறவில் கனவுத்திரை", மாறாட்ட போதையும் போராட்ட பாதையும்" போன்ற நூல்கள் ஊடகத்தாக்கங்கள் பற்றி சிறப்பாக பேசுகின்றன.

சிறார்களுக்கும் இளைஞர்களுக்கும் திரையுலக நாயகர்கள்தான் முன்மாதிரிகளாகின்றனர். அவர்களின் செயல்கள் பிரச்சினைகளை அணுகும் முறைகள் என திரையில்



Vedio games

காணும் நடிகரை தொடர்வதன் மூலம் சமூக இயல்புக்கட்டமைப்பில் இருந்து விடுபட்டு, எண்ணற்ற இளைஞர்கள் இயாலாமை மிஞ்சிய தருணங்களில் குற்றவாளிகளாகவும் சமூகவிரோதிகளாகவும் மாறுகின்றனர்.

இந்த நிறம்தான் அழகு, இந்த நிறம் அழகில்லை இவ்வாறான பண்புள்ளவர்தான் சிறந்த மனிதர் என இனம்காட்டுவதோடு மற்றவர்களின் குறைகளை கேலியும் கிண்டலுமாக மனதளவில் துன்புறுத்துதல் நகைச்சுவை என்ற விம்பக்கட்டமைப்பையும் இவ்வூடகங்கள் உருவாக்கியுள்ளன.

எவையெல்லாம் மனிதருக்கு போதை தருகின்றதோ அதையெல்லாம் வண்ணமும், உள்ளம் அள்ளும் ஓசையும், கண்ணைக்கவரும் காட்சியுமாகக் காட்டி ஊடக உற்பத்திப்பொருட்களை செய்து சந்தையில் விற்கின்றன.

ஒட்டுமொத்தத்தில் ஊடகம் கலாசார வன்முறைகளை விதைக்கின்ற களமாகக் மாறிவிட்டதென்பதனை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஒவ்வொரு சமூக தனிமனிதனும் ஊடகத்தின் மீதான விமர்சனப்பார்வையை தன்னகத்தே கொண்டு இந்த நவநாகரீக உலகத்தில் வாழ்ந்தால் மாத்திரமே அவனுடைய கலாசாரங்கள் மீட்கப்பட

## தேசிய அணிக்கான கால்பந்து வீரர்கள் தேர்வு



இலங்கையின் தேசிய கால்பந்து அணிக்கான வீரர்களை தேர்வு செய்யும் தெரிவுப் பாசறை எதிர்வரும் மார்ச் 21, 22 மற்றும் 23ஆம் திகதிகளில் மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் உள்ள லீக் ஒவ்வொன்றில் இருந்தும் முதல் தரவீரர்கள் இந்தப் பாசறைக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளனர்.



இந்த நிகழ்வில் தேசிய அணியின் பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் தேசிய அணியின் முன்னாள் வீரர்கள் கலந்து கொள்ளவுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட கால்பந்து சங்கத்தின் செயலாளர் ரி. காந்தன் தெரிவித்துள்ளார்.


இதேவேளை, அகில இலங்கை மட்டத்திலான கால்பந்து டிவிசன் 2 போட்டிகள் மார்ச் 3ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றன. மட்டக்களப்பு மாவட்ட கால்பந்தாட்டச் சங்கத்தின் சார்பில் இதில் மட்/டிஸ்கோ அணியும் ஏறாவூர் இளந்தாரகை விளையாட்டுக் கழகமும் கலந்துகொள்கின்றன



# கிழக்கிலங்கையின் கலை இலக்கியச் செல்நெறி (பகுதி 04)



(அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச் சங்கத்தின் ஏற்பாட்டில் மெல்பேர்ண் நகரில் நடைபெற்ற இலக்கியச் சந்திப்பில் செங்கதிரோன் த. கோபாலகிருஷ்ணன் ஆற்றிய உரையின் தொடர்ச்சி...)




திரைப்படங்கள்

திரைப்படக்கலையைப் பொறுத்தவரை கிழக்கிலங்கையின் நிலைமை அன்றும் இன்றும் பூச்சியமே. மௌனகுரு, தங்கவடிவேல், சித்திரலேகா மற்றும் வசந்தா போன்றவர்கள் இலங்கையில் தயாரிக்கப்பெற்ற சில திரைப்படங்களில் நடித்துள்ளனர் என்பதைத் தவிர வேறெந்தப் பதிவுகளும் இல்லை. ஆனால் அண்மைக் காலமாக மட்டக்களப்பில் பல தரமான குறும்படங்கள் தயாரிக்கப்பெற்று வெளியிடப் பெற்றுள்ளன. மட்டக்களப்பு Fine Arts Club – நுண்கலைக்கழகம், புதுக்குடியிருப்பு "கதிரவன் கலைக்கழகம் போன்ற அமைப்புகளும், மட்டக்களப்பில் வதியும் ஞானதாஸ், சஞ்சீத் போன்ற தனிநபர்களும் குறும்படத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளனர். மட்டக்களப்பில் அண்மையில் அலோசியஸின் நெறியாள்கையில் உருவான "அம்மா" மற்றும் "பாதி" எனும் பெயரிடப்பட்ட குறும்படங்கள் குறிப்பிடத் தக்கவை.

புகைப்படக்கலை மட்டக்களப்பில் வளர்ந்து வருகிறது. இதன் முன்னோடியாக புதுக்குடியிருப்பைச் சேர்ந்த கவிஞர் ச.பா. மதன் விளங்குகின்றார்.

கிழக்கிலங்கைக் கலைகள் பற்றிய எனது மனப்பதிவுகளை முடிந்த வரை சுருக்கமாகச் சொல்லியுள்ளேன்.

இனிக் கிழக்கிலங்கை இலக்கியங்கள் குறித்துக் கவனத்தைத் திருப்பலாம் என எண்ணுகின்றேன்.



கவிதை

கிழக்கிலங்கைக்கு நீண்ட கனதியான கவிதைப் பாரம்பரியம் உண்டு. இக்கவிதைப் பாரம்பரியத்திற்கு ஊற்றுக் கண்களாகத் திகழ்பவை கிழக்கிலங்கையின் வாய்மொழியாக வளர்ந்து வந்த நாட்டார் பாடல்களே. இந்த நாட்டார் பாடல்களின் தொகுப்பும் அவை பற்றிய ஆய்வுகளும் நிறையவே வெளிவந்துள்ளன. பிரசித்தி பெற்ற மண்டூர் முருகன் கோயிலில் வருடாந்தம் நடைபெறும் திருவிழாக்களில் பாரதம் படிக்கப்பெறும் வழக்காறு உண்டு. அது போல் கிழக்கிலங்கையில் வருடாந்தம் கண்ணகி அம்மன் கோயில்களில் நடைபெறும் குளிர்த்திச் சடங்கில் கண்ணகி வழக்குரை காவியம் பாடலும் உண்டு.

இவை தவிர காவடிப்பாடல்கள், குளிர்த்திப்பாடல்கள், மழைக்காவியம், மாரியம்மன் தாலாட்டு பாடும் வழக்காறுகளும் உண்டு. இந்த வழக்காறுகள் கிழக்கிலங்கையின் கவிதைப் பாரம்பரியத்திற்கு இன்றும் உரம் சேர்ப்பவையாக உள்ளன. மேலும் அம்பாறை மாவட்டம் தம்பிலுவிலைச் சேர்ந்த வில்லியம்பிள்ளை தொடங்கி – பூபாலபிள்ளை – அருணாசலதேசிகர் – சுவாமிவிபுலானந்தர் – புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை – ஆ.மு.ஷ ரிபுத்தீன் ஊடாக அண்மைக் காலத்தில் கனடாவில் மறைந்த வித்துவான் செபரெத்தினம் ஈறாக வளர்ந்துவந்த புலவர் பரம்பரையும் உண்டு.

சுவாமி விபுலானந்தர் இயற்றிய "கங்கையில் விடுத்த ஓலை" சங்க இலக்கியங்களுக்கு நிகராகப் பேசப்படுகிறது. ஈழத்து நவீன கவிதையின் முன்னோடியாகவும் சுவாமி விபுலானந்தரே விளங்குகின்றார். அவர் இயற்றிய "வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ" என்ற எளியநடைக் கவிதை இதற்குச் சான்று.

மேலும் பேச்சோசைப் பாங்கிலான நவீன கவிதைப்போக்கின் பிதாமகர்களாகக் கருதப்படுகின்ற மஹாகவி, முருகையன், நீலாவணன் ஆகியோரில் கவிஞர் நீலாவணன் அவர்கள் கிழக்கிலங்கையை - அம்பாறை மாவட்டம் கல்முனைப் பிரதேசத்தில் பெரியநீலாவணை எனும் கிராமத்தைச் சேர்ந்தவர். கல்முனைப் பிரதேசத்தில் கவிஞர் நீலாவணனை மையப்புள்ளியாகக் கொண்டு எழுந்ததொரு கவிஞர் வட்டமே – பட்டாளமே உண்டு. விரிவஞ்சி பெயர்களை இங்கு நான் பட்டியலிடவில்லை. எனினும் இப்போது இந்த இலக்கியச் சந்திப்பு நிகழ்வில் சமூகமளித்திருக்கும் மருத்துவகலாநிதி திருமதி.வஜினாறபீக் அவர்களின் தந்தையார் கவிஞர் மருதூர்க்கனி அவர்கள் அக்கவிஞர் பட்டாளத்தின் முன்வரிசைக் கவிஞர்களுள் ஒருவர் என்பதை இங்கு குறிப்பிடுதல் தர்மமாகும்.

மட்டக்களப்பிலே கவிஞர் காசிஆனந்தன், திமிலைத்துமிலன் போன்றோரும் - திருகோணமலை மாவட்டத்தில் திருகோணமலைக் கவிராயர் எனப் புனைபெயர் சூடிய தா.சி.வில்வராஜன், கிண்ணியா கவிஞர் அண்ணல். தாமரைத்தீவான் போன்றோரும் வளம் சேர்த்த கவிதைப் பயணம் இன்றும் தொடர்கிறது.

சிறுகதையைப் பொறுத்தவரை கிழக்கிலங்கையின் முதல் சிறுகதையை எழுதியவர் மட்டக்களப்பு சிங்களவாடியைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் அவர்களாவர். ஈழத்துச் சிறுகதை உலகில் சிறந்த சிறுகதைகளாகச் சிலாகிக்கப்பெற்ற "தோணி", "பாதிக்குழந்தை", மக்கத்துச் சால்வை", "அரசனின்வருகை" ஆகிய சிறுகதைகளை எழுதிய முறையே மூதூரைச் சேர்ந்த வ.அ.இராசரெத்தினம், மட்டக்களப்பைச் சேர்ந்த பித்தன் ஷா, மட்டக்களப்பு மாவட்டம் ஓட்டமாவடியைச் சேர்ந்த எஸ்.எல்.எம்.ஹனிபா, அம்பாறை மாவட்டம் பாண்டிருப்பைச் சேர்ந்த உமாவரதராஜன் ஆகியோர் கிழக்கிலங்கையைச் சேர்ந்தவர்கள். இன்று பல சிறுகதை எழுத்தாளர்கள் தேசிய நாளேடுகளின் வாரவெளியீடுகளிலும், வாராந்தப் பத்திரிகைகளிலும், பருவவெளியீடுகளான சிற்றிதழ்களிலும் எழுதிவருகிறார்கள். விரிவஞ்சி அவர்களின் பெயர்களை இங்கு நான் பட்டியலிடவில்லை. இன்று வெளிவரும் சிறுகதைகள் உள்ளடக்கத்திலும் வெளிப்பாட்டு உத்தியிலும் மொழிநடையிலும் உருவத்திலும் காலத்திற்கேற்ற மாற்றங்களைக் கண்டுள்ளன.

நாவலைப்பொறுத்தவரை 1930 களில் வெளிவந்ததும் மட்டக்களப்பு தாமரைக்கேணியைச் சேர்ந்த ஏரம்பமுதலி என்பவர் எழுதியதுமான "அரங்க நாயகி" எனும் தழுவல் நாவலே மட்டக்களப்பு மாநிலத்தின் முதல் நாவலாகக் கருதப்படுகிறது. கிழக்கிலங்கையின் முதல் நாவல் எனும் இடத்தை 1890இல் வெளிவந்ததும் தி;ருகோணமலையைச் சேர்ந்த இன்னாசித்தம்பி என்பவரால் எழுதப்பெற்றதுமான "ஊசோன் பாலந்தை கதை" பெறுகிறது.

எஸ்.பொ, வ.அ.இராசரெத்தினம், தற்போது லண்டலில் வதியும் இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், அன்புமணி, நவம், மண்டூர் அசோகா, யோகா யோகேந்திரன், உமாவரதராஜன், வை.அ ஃ. மத், செ.குணரெத்தினம், ஜுனைதா ஷெ ரீப், ஜோண்ராஜன், ஒ.கே.குணநாதன், பவளசுந்தரம்மா, ஆ.மு.சி.வேலழகன், ந.பாலேஸ்வரி, அ.ஸ.அப்துல்ஸமது. தீரன் நௌஷாத், கோவிலூர் செல்வராஜன் போன்ற இலங்கையின் பிரபல்யமான நாவலாசிரியர்கள் கிழக்கிலங்கையைச் சேர்ந்தவர்கள்.

மேலும் ஈழத்து நாவல்களில் சிறந்த நாவல்களாக அடையாளம் காணப்பட்டவற்றில் அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றைச் சேர்ந்த அ.ஸ.அப்துல்ஸமது எழுதி வீரகேசரிப் பிரசுரமாக வெளிவந்த "பனிமலர்", அம்பாறை மாவட்டம் கோளாவில் கிராமத்தைச் சேர்ந்தவரும் தற்போது லண்டனில் வதிபவரும் எழுத்தாளர் இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் இளைய சகோதரருமான விமல்குழந்தைவேல் எழுதிய "வெள்ளாவி" யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்தாலும் மட்டக்களப்பில் திருமணம் முடித்து அங்கிருந்து ஆக்கங்களைப் படைத்த எஸ்.பொ. அவர்களின் "சடங்கு" ஆகியனவும் அடங்குகின்றன. மட்டக்களப்புப் பேச்சுவழக்கினை அனாயசமாகக் கையாண்ட நாவலாசிரியராகச் செ.குணரெத்தினம் அவர்களும், சிறுவர் நாவல்களைப் படைத்ததில் ஒ.கே.குணநாதன் அவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். அண்மையில் வெளிவந்த நாவல்களில் தீரன் நௌஷாத் எழுதிய "நட்டுமை" எனும் நாவல் நனி சிறந்ததொன்றாகும். விரிவஞ்சி கிழக்கிலங்கையில் வெளிவந்த நாவல்களையும் நாவலாசிரியர்களையும் பெயரிட்டுப் பட்டியலிடுவதையும் தவிர்த்துக் கொள்கின்றேன். மொத்தத்தில் புனைகதை இலக்கியம் கிழக்கிலங்கையில் எண்ணிக்கையில் குறைந்திருந்தாலும் கூடத் தரத்தில் வளர்ச்சி கண்டுள்ளது.



(அடுத்த இதழில் தொடரும்)


## சமையலுக்கு ஆள் தேவை



அக்கரைப்பற்று சுவாமி விபுலானந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் சமையலுக்கு ஆள் தேவைப்படுகிறது.
உரிய ஊதியம் வழங்கப்படும்.
ஆர்வம் உள்ளவர்கள் பின்வரும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

சுவாமி விபுலானந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையம்,
குருக்கள் வீதி,
அக்கரைப்பற்று - 07,
அம்பாறை
தொலைபேசி இலக்கம் : 067 2278899 அல்லது 067 2277514



# மீன்பாடும் தேனாட்டில் பயணியின் பார்வையில்... -- முருகபூபதி – அவுஸ்திரேலியா --

## அச்சில் வெளிவராத காசி. ஆனந்தனின் வெண்பாக்களை பதிவேற்றிய செங்கதிரோன் கோபாலகிருஷ்ணன்

திருகோணமலையிலிருந்து புறப்பட்டு, மட்டக்களப்பில் ஆறுமுகத்தான் குடியிருப்புக்கு சமீபமாக ஓரிடத்தில் இறங்கினேன். அந்தப்பிரதேசத்தில் எஹெட் என்ற வெளிநாட்டு தன்னார்வ தொண்டுநிறுவனம் சுனாமியால் பெரிதும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் அமைத்துக்கொடுத்திருக்கிறது.

அவ்வாறு பாதிக்கப்பட்ட ஒரு குடும்பம் பாண்டிருப்பிலிருந்து அங்கு வந்து குடியேறியிருந்தது. அந்தக் குடும்பத்தலைவனும் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த மேலும் சில உறுப்பினர்களும் போர்க்காலத்தில் ஆயுதப்படைகளினால் காணாமலாக்கப்பட்டவர்கள்.

சோதனைமேல் சோதனை போதுமடா சாமி என்பார்கள். அந்தக் குடும்ப உறுப்பினர்கள் சிலர் குறிப்பாக குழுந்தைகள் உட்பட பத்துப் பேரளவில் சுனாமி கடற்கோளில் காணாமல் போய்விட்டார்கள்.

**"நண்டிருக்கும் நல்ல இறாலிருக்கும் மீனின் துண்டிருக்கும் இன்பம் தொகையிருக்கும் – உண்டிருக்கும் ஆளுக்குச் சொர்க்கம் அருகிருக்கும் இத்தனையும் கூழுக்கிருக்கும் ஞானம்"**

அந்தக் குடும்பத்தை சாமி காப்பாற்றியதாகத் தெரியவில்லை. அடுத்தடுத்து போரும், சுனாமியும் காவுகொண்ட பல குடும்பங்கள் இலங்கையில் இழப்புகளையும் கடும் துயர்களையும் கடந்து வந்துள்ளன.

குறிப்பிட்ட பாண்டிருப்பு குடும்பத்தினரை சுனாமி காலத்திலும் சென்று பார்த்திருக்கின்றேன். அதில் ஒரு குடும்பத்துப் பிள்ளைகளுக்கு எமது இலங்கை மாணவர் கல்வி நிதியமும் உதவுகிறது.

அந்தக் குடும்பத்தின் உறவினர்கள் சிலர் ஆறுமுகத்தான் குடியிருப்புக்கு சமீபமாக வசிப்பது அறிந்து அவர்களையும் பார்க்கச் சென்றேன்.

போர்க்காலத்தில் கொல்லப்பட்ட அந்த வீட்டின் குடும்பத் தலைவரினதும் அவரது மைத்துனரதும் உடல்கள் கண்டுபிடிக்கப்படவேயில்லை.

இது இவ்விதமிருக்க, என்னை அழைத்துச் செல்வதற்காக இலக்கிய நண்பர் "செங்கதிரோன்" த. கோபாலகிருஷ்ணன் வந்தார். மட்டக்களப்பில் தமது இல்லத்தில் என்னைத் தங்கியிருக்கச் செய்து சில நிகழ்ச்சிகளுக்கும் அழைத்துச் சென்றார்.

கவிஞர் காசி. ஆனந்தனின் மனைவியின் தங்கையைத்தான் இவர் மணம் முடித்திருக்கிறார். எனினும் காசி. ஆனந்தனும் இவரும் அரசியலில் வேறு வேறு துருவங்கள்.

கோபாலகிருஷ்ணன், சிறுகதை, கவிதை, உருவகம், இலக்கிய ஆய்வு, விமர்சனம், இதழியல் முதலான துறைகளில் ஈடுபாடுள்ளவர். அத்துடன் அரசியல் விமர்சனங்களும் எழுதி வருபவர்.

2008 ஆம் ஆண்டு முதல் மட்டக்களப்பிலிருந்து செங்கதிர் என்னும் கலை, இலக்கிய, பண்பாட்டு பல்சுவைத் திங்கள் இதழை வெளியிட்டு வருபவர். நான் அவரிடம் சென்றிருந்த வேளையில் தமது புதிய நூல் விளைச்சல் குறுங்காவியத்தை வெளியிடும் பூர்வாங்க பணிகளில் ஈடுபட்டிருந்தார்.

2011 ஆம் ஆண்டு தொடக்கத்தில் நாம் கொழும்பில் நடத்திய முதலாவது சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டின் பணிகளிலும் அர்ப்பணிப்புடன் இயங்கியவர். அவ்வேளையில்தான் எனக்கும் அறிமுகமானார்.

தனக்கு சரியெனப்பட்டதை துணிந்து சொல்லும் திராணியும் வெளிப்படையான பேச்சும் இவரது ஆளுமைக்குச் சான்று. முன்னர் ஈழ மக்கள் புரட்சிகர முன்னணியில் அங்கம் வகித்திருந்த காலப்பகுதியில் 1990 ஆண்டு ஜூன் மாதம் 19 ஆம் திகதி சென்னையில் சக்காரியா கொலனியில் அமைந்த ஈ.பி.ஆர். எல். எ.்.ப். பின் பணிமனையில் பத்மநாபாவும் மேலும் சிலரும் கொல்லப்படுவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர் அங்கு சென்று திரும்பியிருந்தமையால் உயிர் தப்பியிருக்கிறார்.


அந்தக்கண்டத்திலிருந்து தப்பிய பின்னரும் அரசியல் ஈடுபாடுகளில் இவருக்கு இருந்த தீவிரம் குறையவில்லை. அம்பாறை மாவட்டத்தில் டொக்டர் விக்னேஸ்வரன் தலைமையில் அமைந்த சுயேட்சைக்குழுவின் சார்பிலும் தேர்தலில் போட்டியிட்டவர்.

**" இரையாகும் பாணில் புழுக்கள் இருக்கும் சுரையளவு கல்லிருக்கும் சோற்றில் – அரையவியல் மாட்டிறைச்சித் துண்டில் மயிரிருக்கும் என்னுயிரைக் கேட்டிருக்கும் கீரைக்கறி"**

இவர் எழுதிய தமிழர் அரசியலில் மாற்றுச் சிந்தனைகள் என்ற தொடர், தினக்குரல் பத்திரிகையில் வெளிவந்து தற்பொழுது நூலாகியிருக்கிறது.

இந்நூல் பற்றிய அறிமுகத்தில் பத்திரிகையாளர் வீ. தனபாலசிங்கம் இவ்வாறு பதிவுசெய்துள்ளார்:

" இலங்கைத்தமிழ் மக்கள் தங்களது அரசியல் உரிமைப்போராட்டத்தின் வரலாற்றில் இன்று தெளிவானதொரு



- காசிஆனந்தன் -

திசையறியாத இடரார்ந்த கட்டத்தில் நிற்கிறார்கள். உள்நாட்டுப்போரின் முடிவுக்குப் பின்னர், ஏழரை வருடங்களுக்கும் அதிகமான காலம் கடந்துவிட்ட நிலையில் அவர்கள் தங்கள் உரிமைப்போராட்டத்தின் அடுத்த கட்டம் குறித்து நிதானத்துடனும் விவேகத்துடனும் சிந்திக்கவேண்டியவர்களாக இருக்கிறார்கள். கடந்த ஆறு தசாப்தங்களுக்கும் அதிகமான காலகட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களிலிருந்து முறையான படிப்பினைகளைப் பெற்றுக்கொண்டு இன்றைய உள்நாட்டு மற்றும் சர்வதேச அரசியல் நிலவரங்களுக்குப் பொருத்தமான முறையில் - அதேவேளை அடிப்படை அரசியல் அபிலாசைகளுக்கும் இலட்சியங்களுக்கும் சேதம் இல்லாத வகையில் தங்களது உரிமைப்போராட்டத்தை தொடருவதற்கான பாதையை வகுக்க வேண்டியவர்களாக தமிழ் மக்கள் இருக்கிறார்கள். "

" கடந்த கால அனுபவங்களின் மூலமாக படிப்பினைகளைப் பெற்று தமிழர்களின் அரசியல் உரிமைப்போராட்டத்தை முன்னெடுப்பதற்கு இன்றியமையாததான கருத்தாடல்களுக்கு கோபாலகிருஷ்ணன் தனது சிந்தனைகள் மூலமாக கணிசமான பங்களிப்பைச்செய்து வருகின்றார். தமிழர் அரசியல் பொதுவெளியில் ஆரோக்கியமான விவாதங்களுக்கு ஊக்கந்தரக்கூடியதாக இந்த நூலிலுள்ள அவரின் கட்டுரைகள் அமைந்திருக்கின்றன." என்று அவர் கூறியுள்ளார்.

கிழக்கிலங்கையில் மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த பல கலை, இலக்கியவாதிகளுடன் எனக்கு இன்றளவும் உறவும் தொடர்பாடல்களும் நீடிக்கிறது. அவர்களில் திருகோணமலை நா. பாலேஸ்வரி, பாண்டிருப்பு சண்முகம் சிவலிங்கம், மருதமுனையச் சேர்ந்த மருதூர்க்கொத்தன், மருதூர்க்கனி, மட்டக்களப்பில் ரீ. பாக்கியநாயகம், இறுதிக்காலத்தில் திருகோணமலையில் வாழ்ந்த கவிஞர் சு.வில்வரத்தினம், மட்டக்களப்பில் வாழ்ந்த திக்கவயல் தருமகுலசிங்கம் ஆகியோர் இன்று எம்மத்தியில் இல்லை.

அவர்களினால் ஏற்பட்ட வெற்றிடங்களை நிரப்பமுடியாது போனாலும் அவர்களின் நினைவுகளுடன் மேலும் சில கலை, இலக்கியவாதிகள் எனது இலக்கிய வாழ்வில் இணைந்துகொள்வார்கள்.

அவ்வாறு இணைந்தவர்களில் ஒருவர்தான் செங்கதிரோன் த. கோபாலகிருஷ்ணன். இந்தப்பதிவை எழுதிக்கொண்டிருந்த நேரத்தில் அவரது குரல் தொலைபேசி வாயிலாக ஒலித்தது.

தான் அவுஸ்திரேலியா வந்திருப்பதாகவும் சில வாரங்கள் இங்கு நிற்கவிருப்பதாகவும் சொன்னார். மட்டக்களப்பில் நான் நின்ற மூன்று நாட்களும் என்னை பல இடங்களுக்கும் கலை இலக்கிய சந்திப்புகளுக்கும் அழைத்துச்சென்றவர் கோபாலகிருஷ்ணன்.

நீர்ப்பாசனத்திணைக்களத்தின் பயிற்சிக்கல்லூரியில் (கல்கமுவ) வெளியிடப்பட்ட அருவி இதழில்தான் 1969 இல் இவரது முதல் கவிதை (நற்கவிதை வேண்டும்) வெளியாகியிருக்கிறது.

பாரதியார் எழுதியிருக்கும் முதல் கவிதை ( குயிலானாய்..! நின்னொடு குலவியின் கலவி...) முதல் சிறுகதை (துளசிபாய் அல்லது ராஜபுத்திர கன்னிகையின் சரித்திரம்) ஆகியன பற்றி விரிவான ஆய்வுகளை ஞானம் இதழில் எழுதியவர். எனது இலங்கையில் பாரதி ஆய்வுத்தொடருக்கும் இவரது இந்த ஆக்கங்களும் உசாத்துணையாக விளங்கியிருக்கின்றன.

கவிஞர் காசி ஆனந்தனுடன் இவருக்கு அரசியல் கருத்து முரண்பாடுகள் இருந்தபோதிலும், அவர் எழுதி வெளிவராத இரண்டு குறுங்கவிதைகளை ஞானம் இதழில் பதிவேற்றியவர் கோபாலகிருஷ்ணன்.

யாழ்ப்பாணம் ஒடியல் கூழ் பற்றி காசி. ஆனந்தன் எழுதிய கவிதை

"நண்டிருக்கும் நல்ல இறாலிருக்கும் மீனின்

துண்டிருக்கும் இன்பம் தொகையிருக்கும் - உண்டிருக்கும்

ஆளுக்குச் சொர்க்கம் அருகிருக்கும் இத்தனையும்

கூழுக்கிருக்கும் ஞானம்"

1972 - 1976 காலப்பகுதியில் இலங்கை சிறைகளில் தடுப்புக்காவலில் காசி. ஆனந்தன் இருந்தபோது அங்கு கைதிகளுக்கு தரப்பட்ட உணவு குறித்து எழுதப்பட்ட வெண்பா:

தொடர்ச்சி... (பக்கம் - 23)



## மீன்பாடும் தேனாட்டில் பயணியின் பார்வையில்...

தொடர்ச்சி...

" இரையாகும் பாணில் புழுக்கள் இருக்கும்

சுரையளவு கல்லிருக்கும் சோற்றில் - அரையவியல்

மாட்டிறைச்சித் துண்டில் மயிரிருக்கும் என்னுயிரைக்

கேட்டிருக்கும் கீரைக்கறி"

1997 ஆம் ஆண்டில் கொல்லப்பட்ட மூதூர் எம்.பி. அ தங்கத்துரைக்காகவும் அஞ்சலிக்கவிதை எழுதியிருக்கும் கோபாலகிருஷ்ணன், மல்லிகை ஜீவாவையும் அவரது பிறந்த தின காலத்தில் நீண்ட வாழ்த்துக் கவிதை எழுதியிருப்பவர்.

நான் மட்டக்களப்பில் இவரிடம் சென்றிருந்த வேளையில் சென்னையில் கவிக்கோ அப்துல் ரகுமான் மறைந்திருந்தார்.

கவிக்கோ அப்துல் ரகுமான் பற்றிய நினைவுகளை கோபாலகிருஷ்ணனுடன் பகிர்ந்துகொண்டபோது, அவர் தமது வீட்டின் அலுவலக அறைக்குச்சென்று 2002 ஆம் ஆண்டு கவிக்கோ இலங்கை வந்தவேளையில் தமிழ்ச்சங்கத்தில் அன்றைய காலப்பகுதித்தலைவர் தினகரன் முன்னாள் ஆசிரியர் கலாசூரி இ.சிவகுருநாதன் தலைமையில் கவிக்கோ அவர்களுக்கு நடத்தப்பட்ட வரவேற்பில் தான் வாசித்தளித்த கவிதையின் பிரதியை எடுத்துவந்து காண்பித்தார்.

மரபுக்கவிதைக்கும் புதுக்கவிதைக்கும் இடையே நவீனத்துவம் நடத்திய நிழல்போரை துல்லியமாக அதில் பதிவு செய்திருந்தார் கோபாலகிருஷ்ணன்.

அதிலிருந்து சில வரிகள்:

பூப்படையாப் பெண்களெல்லாம்
பிள்ளைபெற வந்ததுபோல் - கவிதை
யாப்பறியாப் பேர்களெல்லாம்
பாப்புனைய வந்துவிட்டார்.
புற்றுக்குள்ளிருந்தீசல்
புறப்பட்டு வந்ததுபோல்

" புதுக்கவிதை" ப்புலவர்கள்
கொட்டும் குளவிக்
கூட்டைக்கலைத்தது போல்
எட்டுத்திக்கெங்கும்
இவர்கள்தான் ஏராளம்
வெற்றுத் தகரத்தில்
வீணை ஒலிக்குமா..? இக்
கற்றுக் குட்டிகளால் - தமிழ்க்
கவிதை செழிக்குமா..?
ஆதலினால் - கவிக்கோவே ...!
அப்துல் ரகுமானே ..!
தடம் புரளா தென்றும்
தமிழ்க் கவிதைத்தேரோட
வடம் இழுக்க வாருங்கள் !
வாழ்த்துகிறோம் ! வாழ்த்துகிறோம்.

-- இவ்வாறு ஈழத்து இலக்கியப்பரப்பில் தமது படைப்பாளுமையை அழுத்தமாகப் பதிவுசெய்துவரும் செங்கதிரோன் த. கோபாலகிருஷ்ணனிடம் ஈழத்து கலை, இலக்கி ய உலகம் பற்றிய எனக்குத்தெரியாத பல தகவல்களும் இலங்கை அரசியல் குறித்த சுவாரஸ்யமான செய்திகளும் நிறைந்திருக்கின்றன.

மட்டக்களப்பில் பல இடங்களுக்கும் தனது காரில் அவர் என்னை அழைத்துச்சென்றபோது அவரிடமிருந்து கேட்டுத்தெரிந்துகொண்டவற்றை விரிவுபடுத்தி சுயசரிதைப்பாங்கில் எழுதுமாறு கேட்டுக்கொண்டேன்.

(பயணங்கள் தொடரும்)



## புகழ்பெற்ற சில ஓவியர்களும் சில ஓவியங்களும்

தொடர்ச்சி...

""பறக்கும் குதிரை"" திரைச்சித்திரங்களை தந்தவர் ""ரானு"" என்று அழைக்கப்படும் எஸ்.கே.ராமானுஜம். இவர் இதற்காக 30,000ற்கும் மேலான சித்திரங்களை வரைய வேண்டியிருந்தது.

இலங்கையில் பெரும்புகழ் பெற்ற கார்ட்டூனிஸ்டாக திகழ்ந்தவர்;. சிரித்திரன் சஞ்சிகையைத் தந்த சி. சிவஞானசுந்தரமாகும். இவர் இந்தியாவின் ஆங்கில நாளேடுகளான ""பிளிட்ஸ்"" ""கொஞ்ச்"" ஆகிய ஏடுகளின் காட்டூனிஸ்டாக விளங்கினார். இந்தியாவின் சுதந்திரப் போரட்டத்தில் கவரப்பட்டு, நேதாஜி சுபாஸ்சந்திர போஸ் மறைந்த போது அஞ்சலிக்காக மக்கள் வெள்ளம் கொண்டு சென்ற நேதாஜியின் படம் சுந்தர் என செல்லமாக அழைக்கப்பட்ட சி.சிவஞான சுந்தரம் அவர்களால் வரையப்பட்டதாகும்.

இலங்கைத் தமிழர்களால் தந்தை செல்வா என அழைக்கப்படுகின்ற எஸ்.ஜே. வி. செல்வநாயகம் அவர்களின் உருவப் படத்தை எழுபதுகளில் சந்திவெளி குமாரவேல் என்பவர் மிக தத்துருபமாக வரைந்து, தமிழ் மக்களின் நன் மதிப்பை பெற்றிருந்தார்.

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்து சிற்பங்களின் மூல வடிவமான ஓவியங்களை உருவாக்கியவர். தமிழ்த்தேசிய சிந்தனையாளர் "" தூரிகை நெருப்போவியர்"" என அழைக்கப்பட்ட வீரசந்தானம் என்பவராகும். இவரின் ஓவியங்களும் மக்கள் செல்வாக்குப்பெற்ற ஓவியங்களாகும்.

தமிழ்நாட்டில் சினிமா ஆர்ட்டைரக்டர் தோட்டாதரணி. இவர் ராடோ கை கடிகார நிறுவனத்திற்கு ஓவியங்களை வரைந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டில் ஆனந்தவிகடன் சஞ்சிகையிலும், தேவியின் கதைப் புத்தகங்களிலும் சிறந்த ஓவியங்களை வரைந்து மாருதி புகழைத் தேடிக்கொண்டார்.

அதே ஆனந்தவிகடனில் உருவங்கள் கலையிழக்காது கேலிச்சித்திரங்களாக வரைந்து பேர் பெற்றவர் ஸ்ரீதர். இச் சஞ்சிகையிலேயே புராணப்படங்களை அழகாக வரைந்து ஜெ.பி என்னும் ஓவியர் தானும் சிறந்த சித்திரக்காரர் என்பதை நிலை நாட்டினார். மஞ்சரியில் கல்பனா, சூர்யா. குளு குளு காமிக்ஸ் கதையான ""சிட்டி காலேஜ்"" என்னும் சித்திரத் தொடர்கதையில் வரும் ஓவியங்களை சரண் என்பவர்கள் வரைந்தவராவார்கள்.

இலங்கையில் இருக்கிறம் சஞ்சிகையில் சித்தன் என்பவரைக் குறிப்பிடலாம். மட்டுநகரில் சித்திரக்காரர்களாக வாழ்பவர்கள் தங்கள் மேலதிக வாழ்வாதாரத்துக்காக விற்பனை நிலையங்கள், நிறுவனங்கள் ஆகியவைகளுக்கு பெயர்ப் பலகைகள், பதாதைகள் வரையும் பணியில் காலூன்றினார்கள். இவர்களில் ஆட்டிஸ்ட் மணியன், சிவலிங்கம், செல்வம், சோமு, ஜெயா, ரவி, கந்தசாமி, ஜனராஜா, கைலாஸ், பாஸ்கர், பாலன், தம்பி, ஓவியதர்மா, சரணபவன், ஸ்ரீ கமலச்சந்திரன் என இன்னும் சிலர் விளம்பரம் வரையும் ஓவியர்களாகவும் தங்கள் இருப்பை நிலை நாட்டியுள்ளார்கள்.

இதைவிட வெளியீடாகும் புத்தகங்கள், சஞ்சிகைகளின் அட்டைப்படம் அவைகளின் உள்ளே இடம்பெறும் கதாபாத்திரங்கள் இவைகளுக்கு பொருத்தமான ஓவியங்களை வரைபவர்களாக ஸ்ரீகமலச்சந்திரன், ஸ்ரீகோவிந்தசாமி, ஓவியர் குணம், டாக்டர் வேலாயுதப்பிள்ளை, வேல்முருகு, சரவணபவன் மௌனேஸ், கிக்கோ, ரூபன், சஞ்ஜீவ் என்போர் தங்கள் திறமையை வெளிக்காட்டி ஓவிய வரலாற்றில் தங்கள் பெயர்களையும் பதிவு செய்துள்ளார்கள். ரேகை ஓவியத்தில் கைதேர்ந்த ஈ.குலராஜா என்ற ஓவியர் தஞ்சாவூர் ஓவியம்;, துணியோவியம், கலங்கணி என்பவற்றில் சிறப்புத் தேர்ச்சியுடையவர். வளரும் ஓவியர்களுக்கு வாழ்த்து அட்டைகளை உருவாக்கும் முறையை முறையாக பயிற்சியளித்து வருபவர்.

பென்சிலால் மாத்திரம் உருவங்களை தீட்டி அவைகளுக்கு ஒளி, நிழல் போன்றவைகளை கொடுத்து துல்லியமாக வரைபவராக வளர்ந்து வருகிறார் கல்லடி புதுமுகத்துவாரத்தைச் சேர்ந்த கண்ணாவிதுசன். இவர் கல்லடி கடற்கரைக்கு வருகை தரும் வெளிநாட்டுச் சுற்றுலா பிரயாணிகளுக்கும் நம்நாட்டுச் சித்திர விரும்பிகளுக்கும் அவர்களை நேரடியாக வைத்தே அவர்களின் உருவங்களை வரைந்து வழங்கி வருகிறார்.

அட்டாளைச்சேனை ஆசிரிய கலாசாலை, மட்.ஆசிரிய பயிற்ச்சிக் கலாசாலை ஆகியவைகளில் விரிவுரையாளராக இருந்து தன் வழிகாட்டலின் மூலம் அறுபதுகளில் பல ஓவியர்களை உருவாக்க ஏதுவாக இருந்தவர், எம்.எஸ். ஏ. அஸீஸ் மாஸ்டராகும். இவரால் 1960ல் வரையப்பட்ட மகாத்மா காந்தியின் திருவுருவப் படம் கொண்ட நாட்காட்டி தமிழ்நாட்டில் மிகுந்த செல்வாக்கினைப் பெற்றிருந்தது. பாலும் பழமும், பாகப்பிரிவினை ஆகிய திரைப்படங்களில் இக் கலண்டர் இடம்பிடித்திருந்தமை குறி ப்பிடத்தக்கதாகும்.

இச் சித்திரக் கலையை பாடசாலை ரீதியாக பாடமாக ஊட்டி பல மாணவர்களை சித்திரக்கார்களாக்கிய பெருமை பிரான்சீஸ், இராஜேந்திரா, கைலாயபிள்ளை, கணபதிப்பிள்ளை, ஸ்ரீகமலச்சந்திரன் போன்ற இன்னும் பல ஆசிரியப் பெருந்தகைகளின் பங்களிப்பு பாராட்டத் தக்கதாகும். மேலும் ஓவியக்கலை பல்கலைக்கழகப் பாடமான பின்பு ஓவிய விரிவுரையாளர்களாக அருந்ததி, வாசுகி ஜெயசங்கர், ஸ்ரீகமலச்சந்திரன் போன்றோர் சிறந்த ஓவியக் கலைப்பீட விரிவுரையாற்றிமையால் ""ஓவியக்கலையூட்டிகள்"" என மாணவர்களால் மிகச்செல்லமாக அழைக்கப்படுகிறார்கள்.












**FCC வழங்கும் இவ்வார சிந்தனை!**

999 வெவ்வேறு வெற்றிக் கோட்பாடுகளை நான் எனது வாசிப்பான் மூலம் கண்டறிந்துள்ளேன் ஆனால்,
சுயகட்டுப்பாடு-ஒழுங்கு இல்லாமல், அவை எதுவும் பயனளிக்காது.
ஆனால், சுயகட்டுப்பாடு-ஒழுங்கு மூலம் அவை எல்லாமே சாத்தியப்படும்.

-எல்பேர்ட் ஹப்பார்ட்-

